உ

தேவாரத்திரட்டு

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
57, வெங்கட்ராமய்யர் தெரு,
சென்னை—1.

விலை] —— [ரூ. 1—00

உ

திருச்சிற்றம்பலம்

தேவாரத்திரட்டு

இஃது

தேவார திருவாசகத் திருப்பதிகங்களினின்றும்
தாயுமான சுவாமிகள் இராமலிங்க சுவாமிகளியற்றிய
திருப்பாடற்றிரட்டுகளினின்றும்
தொகுத்தது.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
திருமகள் விலாச அச்சகம்,
சென்னை—1.

இதன் விலை] —— [ரு. 1—00

தேவாரத்திரட்டின் வரலாறு

அநாதி முத்த சித்துருவாகிய முதற்கடவுள் சிவபெருமானே என்று ஆன்மாக்கள் துணிந்து வழிபட்டு உய்யும் பொருட்டு பல அற்புதங்களினாலே சைவ சமயத்தை ஸ்தாபித்தருளிய திருஞான சம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் சமயாசாரியர்கள் மூவரால் அருளிச்செய்யப்பட்ட தமிழ் வேதமாகிய தேவாரம் ஒருலக்ஷத்திரண்டாயிரந் திருப்பதிகமுடையது. அவைகளுள் எழுநூற்றுத் தொண்ணூற்றேழு திருப்பதிகங்களையும், திருவாரூர் அபயகுல சோழ மஹா ராஜாவினுடைய வேண்டுகோளின்படி திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாருடைய மாணாக்கராகிய நம்பியாண்டார் நம்பி ஏழு திருமுறைகளாக வகுத்தருளினர். அவ்வேழும் அடங்கிய திருமுறை 'அடங்கன் முறை' எனப்படும். மேலும் வாதவூரடிகளென்னும் மாணிக்கவாசக சுவாமிகளால் அருளிச்செய்த திருவாசகம் எட்டாந் திருமுறை யெனப்படும். இவ்வெட்டாந் திருமுறை முழுவதும் நம்மனோரால் செவ்வனே கற்றுத் திருச்சந்நிதானங்களில் எல்லோராலும் முறையாய் ஓதப்பட்டு வரும். சில தேவாரத் திருவாசகப் பதிகங்களையும், தாயுமான சுவாமிகள் அருளிச்செய்த திருப்பாடற்றிரட்டினின்றும், அருட்பெருஞ் சித்தராய் திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் ஸ்ரீமத் சிதம்பரம். இராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்த திருவருட்பாக்களினின்றும் சிற்சில பதிகங்களையும் பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்துச் சுத்த பாடமாக அச்சிட்டிருக்கின்றோம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள் வரலாறு

சோழமண்டலத்திலே சீகாழியில் பிராமண குலோத்துங்கரான சிவபாதவிருதயருக்கு, அவர் மனைவி பகவதியார் வயிற்றில் பிறந்து ஆளுடைய பிள்ளையாரென்ற திருநாமத்தோடு வளர்ந்து மூன்றும் வயதில் தந்தையார் தூக்கிப்போய்த் தீர்த்தக் கரையில் உட்கார வைத்துவிட்டு ஸ்நானஞ் செய்யும்போது பிள்ளையாருக்குப் பண்டைய வுணர்ச்சி யுண்டாகிச் சுவாமியினுடைய திருவடியைப் பிரிந்திருக்கு மனவருத்தத்தை யுட்கொண்டு ஆலய சிகரத்தை நோக்கி, 'அம்மே, யம்மா' வென்றழ, அதனைக் கண்ட தோணியப்பர் திருவுள மிரங்கி தேவியாருடன் பிள்ளையாரை யணுகி திருமுலைப்பாலுடன் ஞானவமுதமும் கலந்து, தேவியார் பொற்கிண்ணத்திற் றந்தருள, பிள்ளையாருண்டு அழுகை தீர்ந்திருக்கையில் பிதா வந்து பார்த்துப் பால் கொடுத்தவர் யாரென்று பயமுறுத்தினர். இவர் கொடுத்தாரென்று கைவிரலாற்சுட்டி, "தோடுடைய செவிய" னென்னும் பதிகமோதிச் சுவாமியைக் காட்ட பிதா ஆனந்த மடைந்தனர்.

அன்று முதல் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரென்னுந் திருநாமங்கொண்டு, பிதாத்தோளிற் பொருந்திசெல்ல ஆலயஞ்செல்வதும், தோணியப்பரைத்தரிசிப்பதும், திருப்

பதிக மோதுவதுமா யிருந்தனர். பின்பு திருக்கோலக்கா என்னுந் தலத்துக்கெழுந்தருளி, சுவாமி பொற்றாள மருளப்பெற்று பதிகமோதித் துதித்து தமதூருக்கு வந்து சில நாளிருந்து, திருநனிப்பள்ளி முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று பதிகமோதித் துதித்து, மீண்டும் சீகாழிக்கு வந்து சுவாமியைத் தரிசித்துக் கொண்டிருந்தனர்.

இங்ஙன மிருக்கையில் பத்தினியாருடன் வந்த திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரைப்போ யழைத்துவந்து சுவாமி தரிசனஞ் செய்வித்து, விடுதியமைத்து விருந்து செய்வித் துபசரித்தனர். பிள்ளையாரருளிய திருப்பதிகங்களைத் தான் யாழிலமைத்து வாசிக்கும்படி கட்டளையிட்டருளும்படி யாழ்ப்பாணர் வேண்ட, இருவரும் இசைந்தனர். பின் இருவருஞ் சிதம்பரஞ் சென்று நடராஜமூர்த்தியைத் தரிசித்துப் பதிகமோதி விடைபெற்றுப் புறம்வந்து, அங்கு வசிப்பதற்கஞ்சி திருவேட்களத்திற் சென்று பரமசிவத்தை தரிசித்து வசிக்குமிட மந்தலமாகக்கொண்டு, நடராஜரைத் தரிசித்துக்கொண்டிருக்கும் நாளில் தில்லைவா ழந்தணர்கள் நடராஜரை யருச்சிக்கும் பேறு பெற்றார்களே யென்னுங் கருத்துட னொருநாள் சென்றபோது, அந்தணர்களெல்லாஞ் சிவகணங்களாயிருக்கக்கண்டு பாணருக்குங் காண்பித்து தரிசித்துத்,திருஎருக்கத்தம்புலியூர் முதலிய ஸ்தலங்களையுந் தரிசித்து, திருநெய்வாயிலாத்துறைக்குப் போக விரும்பி, திருவடி வருந்த மெல்ல மெல்லச் சென்று மாறன்பாடி யென்னும் பதியி லன்றிரவு தங்கினர்.

சுவாமி தமது திருக்குமாருடைய வழி வருத்தத்தை திருவுளங்கொண்டு, முத்துச் சிவிகையும் முத்துக்குடையும்

முத்துச் சின்னங்களுந் தந்தருள நினைத்து, அத்தல பிராமணர்க்கெல்லாந் தனித்தனியே சொப்பனத்திற்றோன்றி, "நம்மிடம் வரும் ஞானசம்பந்தனுக் கிவைகளைக் கொண்டு போய்க் கொடுங்கள்" என்று ஆக்ஞாபித்தனர். உடனே பிராமணர்கள் விழித்தெழுந்து, கனவின்படி ஆலயத்தி லிருக்கக்கண்டு, வியந்து வாத்திய கோஷத்துடன் பிள்ளை யாரை யணுகி வணங்கிச் சிவபெருமான் தந்த இவைகளை யேற்றருளு மென்றார்கள். பிள்ளையாரும் தான் கண்ட கனவை யொத்திருக்கக்கண்டு திருவருளைவியந்து, "எந்தை யீசனெம்பெருமா" னென்னும் பதிகம் பாடிச் சிவிகை யை வலஞ்செய்து நமஸ்கரித்ததிலேறி யருளினார். பின்பு ஆலயஞ்சென்று சிவிகையை விட்டிழிந்து சுவாமியைத் தரிசித்துத் துதித்து சிலநா ளங்கிருந்து, திருப்பழூர் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று தரித்துச் சீகாழிக் கெழுந்தருளினார்.

பிள்ளையாருக்கு உபநயன பருவம்வர அதனை முடித் துக்கொண் டங்கிருக்கு நாளில், திருநாவுக்கரசு நாயனார் வருவது கேள்விப்பட்டு எதிர்கொள்ளவரும் பிள்ளையாரை நாயனார் வணங்க, அப்பரே யெழுந்தருளுமென்று இரு கரங்களாலுமெடுத் துபசரித் தழைத்துப்போய், தோணி யப்பரைத் தரிசித்தார்கள். அப்பர் மூர்த்தி சிலநாளங் கிருந்து சென்றருளினார். பின்பு பிள்ளையார் மற்ற ஸ்தலங் களுக்குச் செல்லத் திருவுளங்கொண்டு பிதாவுக்கறிவிக்க அவர் நானும் வருகிறேன் யாகத்திற்குப் பொருளும் வேண்டுமெனப் பிதாவுடன் புறப்பட்டுப் பல ஸ்தலங் களிலுஞ் சென்று தரிசித்துப், திருப்பாலாச்சி கிராமத்துக்

கெழுந்தருளும்போது அவ்வூரையாளும் கொல்லி மழவனென்னும் அரசன் நகரை யலங்கரித்து, எதிர்சென்று வணங்கினார். நாயனார் ஆலயத்துட்சென்று வலஞ்செய்து சந்நிதிக் கெழுந்தருளும்போது, அங்கோர் கன்னிகை சவம்போ லிருக்கக்கண்டு என்னென்று வினவ, அரசன் றொழுது அவள் தன் புதல்வியென்றும் நோய் கண்டு தீரா மையா லங்கு கொணர்ந்து கிடத்தியதாகவுஞ் சொன்னான். அதனைக் கேட்டு அன்பு கூர்ந்து, "துணிவளர்திங்கள்" என்னும் பதிகமே தித் துதிசெய்ய வியாதிநீங்கி யெழுந்து பிதாவினருகிற் போய் நின்றாள். அரசன் கண்டு ஆனந்தங் கொண்டு மகளுடன் வந்து நாயனார் திருவடிகளை வணங்க அதனைக்கண்டு, கிருபைசெய்து, சுவாமியைத் தரிசித்து சிலநாளங்கிருந்து புறப்பட்டு, திருக்கொடிமாடச்செங்குன் றூரில் வந்து வீற்றிருந்தனர். குளிர்கால மாகையா லங் கிருப்பவர்களுக் கப்போது வரும் நளிச்சுரம் தமது திருக் கூட்டத்தாருக்கும் கண்டதறிந்து (அவ்வினைக்கிவ்வினை) என்னுந் திருநீலகண்டப் பதிகமோதித் துதிக்க, அப் பிணி திருக்கூட்டத்தாரையும் விட்டது.

அங்கிருந்து புறப்பட்டு மற்ற ஸ்தலங்களுக்குச்சென்று தரிசித்து திருப்பட்டீசுரத்துக்கெழுந்தருளும்போது, நாய னாருக்குத் தெரியாவண்ணம் சிவகணங்கள் முத்துப்பந் தரைக் கொண்டுவந்து வெயில் வெப்பந்தணிவதற்குப் பரம சிவன் கட்டளையிட்டு அனுப்பியதென்று சொல்லு மொலி யும் பந்தருமாகாயத்திற்றோன்ற நோக்கி, இதுவு நம்பிறை வர் கட்டளையாகில், ஏற்றுக்கொள்ள வேண்டுமென் றிசைந்து சிவிகையை விட்டிறங்கிப் பணிந்தபோது, பந்தர் கால்களைப் பரிஜனத்தார் கைக்கொண்டார்கள். பிறகு

திருப்பட்டீசுரம் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்து, திருவா
வடுதுறைக் கெழுந்தருளிச் சிவனைத் தரிசித்துப் பதிக
மோதி வீற்றிருந்தனர். வேள்விக்குப் பொருள் வேண்டு
மெனப் பிதா சொல்ல, நாயனார் ஆலயஞ் சென்று பதிக
மோதிய வளவில், பரமசிவன் கட்டளையா லாயிரம் பொன்
னுள்ள ஒரு முடிப்பை ஒரு பூதம் கொண்டு வந்து பலி
பீடத்தின்மேல் வைத்து நாயனாருக்கெதிரில் நின்று, இப்
பொன்முடி எடுக்க வெடுக்கக் குறையாது. இதனைப் பரம
சிவன் கட்டளையின்படி உமக்குக் கொண்டுவந்த தென்
றுரைக்க, நாயனார் பணிந்தெடுத்துப் பிதாவிடம்கொடுத்து
பிறருக்கும் யாகஞ்செய்ய உதவும்படி சொல்லி அனுப்பி
விட்டு அங்கிருந்து புறப்பட்டுப் பாணனது தாயின் ஜனன
பூமியாகிய திருத்தருமபுரத்திற் கெழுந்தருள, தம்மை
வணங்கிய சுற்றத்தாரை பாணர் நோக்கி, நாயனா ரருளிச்
செய்யும் பதிகங்களை யாழிலமைத்து வாசிக்கும் பேறு
பெற்றிருப்பதாகச் சொலல, அதற்கவர்கள், நீர் யாழி
லமைதது வாசிப்பதனாலேயே அப்பதிகங் தேசமெங்கும்
விளக்கமுற்றிருக்கின்றன வென்று சொன்னார்கள். பாண
ரஞ்சி நாயனாரிடம் விண்ணப்பம் பண்ணி, யாழிலமையா
வண்ணமொரு பதிகமருள வேண்டுமென, அவ்வாறே
யாழ்முரியாகிய, "மாதர் மடப்பிடி" என்னும் பதிகமருள,
அது யாழி லிசையாமற் பயந்து யாழினை எடுத்ததினா
லன்றோ வாசிப்போமென்னு மெண்ணம் கொள்ள நேர்ந்த
தென் றதனையுடைக்க ஓங்கியபோது நாயனார் தடுத்
துப் பதிகம் சிவகிருபையால் வருவதாதலி னியன்ற மட்
டும் வாசிக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுத்தருள
வணங்கிப் பெற்றுத் துதித்தனர்.

பின்பு பிள்ளையார் திருச்சாத்தமங்கைக் கெழுந்தருளி திருநீலநக்க நாயனாராலுபசரிக்கப்பட்டு, திருக்கடவூரைக் காரோண முதலிய ஸ்தலங்களைத் தரிசித்து. சிறுத்தொண்ட நாயனார் வந்து வணங்க, திருச்செங்காட்டங்குடிக்குச்சென்று, சுவாமியைத் தரிசித்து, அந்நாயனாரைச் சிறப்பித்துப் பதிகமோதி அவரா லுபசரிக்கப்பட்டு, திருமருகலுக்கெழுந் தருளித், தரிசித்து வீற்றிருந்தனர். அங்கொருநாள் தரிசனத்திற் கெழுந்தருளும்போது, ஓர் மடத்திலொரு கன்னிகை யழுவதைக் கேட்டு, அங்குச் சென்றவளை வினவ, தன் தகப்பனுக்கு ஏழு பெண்களென்றும் அவனது சகோதரி மகனுக்கு முறையே ஒவ்வொரு பெண்ணையுந் தருவதாய் ஏமாற்றி ஆறு பெண்களையும் பிறருக்கு விவாகஞ் செய்து கொடுத்து விட்டதாயும் கடைசியாகத் தன்னையும் பிறனுக்குக் கொடுக்க வெத்தனித்ததை யவனறிந்து விசனப்படுவதைத் தான் பார்த்து மனஞ்சகியா தவனை யழைத்துக்கொண்டு வரும்பாதையிலிரவு அம்மடத்திற் றங்கியதாயுஞ் சர்ப்பந் தீண்டி யிறந்தானென்றுஞ் சொல்லி தேவரீர் ரட்சிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய, பிள்ளையார் கிருபைகூர்ந்து, “சடையாயெனுமா” லென்னுந் திருப்பதிகமோதி அவனைப் பிழைப்பித்து, இருவருக்கும் மணமும் செய்வித்தனுப்பினார்.

பிறகு, திருப்புகலூரைத் தொழச் செல்லும்போது முருகநாயனா ரெதிர்கொள்ளச் சென்று, வர்த்தமானீச்சரத்தை வணங்கி, முருக நாயனாரது திருத்தொண்டைச் சிறப்பித்துப் பதிகம்பாடி திருப்புகலூரிலிருந்தனர். அத்தருணத்தில் அப்பர் மூர்த்தி வருவதை நோக்கி யெதிர்

கொண்டுபோய் ஒருவரை யொருவர் வணங்கி, அப்பர் திருவாரூரிலிருந்து வருவதாகச் சொல்லக்கேட்டு இப்போ தங்கு நடக்குஞ் சிறப்பு யாதென்று வினவ, அவரும் பதிகத்தாற் சிறப்பித்துச் சொல்லக் கேட்டு, அங்கிருந்து புறப்பட்டு திருவாரூர் முதலிய ஸ்தலங்களுக்குப் போய்த் தரிசித்து மீண்டுந் திருப்புகலூருக்கெழுந்தருள, அப்பரும் முருகநாயனரு மெதிர்கொள்ளச் சென்றங்கிருந்தனர். பிறகு, அப்பருடன் புறப்பட்டு திருவம்பர், திருக்கடவூர் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்து திருவீழிமிழலைக்குச் சென்று பதிகமோதி வீற்றிருக்கும்நாளில், மழையில்லாமையால் பஞ்சமதிகரித் துயிர்களெல்லாம் வருந்துகையில் இவ்விருவர் சொப்பனத்திலும் பரமசிவ னெழுந்தருளிக் கருணைசெய்தபடி கிழக்குமேற்குப் பீடங்களிலிருந்து பொற்காசுகளை, முறையே சம்பந்தரும் அப்பருமெடுத்து அடியார்களுக்கு அமுது படைத்துக் கொண்டிருந்து, பஞ்சம் நீங்கியபின் புறப்பட்டுத் திருமறைக்காட்டிற் சேர்ந்து, வேதம்பூசித்து மூடிப்போன கதவை அப்பர் மூர்த்தியால் திறப்பித்துப் பின்பு திறக்கவு மூ வுமா யிருக்கும்படி சம்பந்தமூர்த்தி பதிகமோதித் துதித்து தங்கி யிருந்தனர்

அந்நாளில் மதுரையில் சமண சமயமேலிட்டு கூன் பாண்டிய ராஜனும் அதற்குட்பட்ட சைவப்பற்று விடா திருந்த அரசன் பத்தினி மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறை நாயனருஞ் சொல்லி யனுப்பியதைக் கேள்வி யுற்று, சம்பந்தர் மதுரைக்குச் சென்று சுவாமியைத் தரிசித்து, அங்கொரு மடத்திலிருக்கையி லன்றிரவு சமணர்கள் அம்மடத்திற் றீயிடக் கண்டு இவ்வெப்பம் பாண்டியனைச் சேரக்கடவதென்று பதிகமோதி யருளலும்,

உடனே பாண்டியனுக்குச் சுரவியாதி யுண்டாகி வருந்துகையில் சமணர்களுடைய மணிமந்திர ஔஷதங்களால் தீராமை கண்டு, பத்தினியும், மந்திரியும் வேண்ட பிள்ளையாரெழுந்தருளினார். சமணர்கள் தங்கள் அரசனது இடப்பாகத்தைச் சுகப்படுத்துவதாயும், பிள்ளையார், "மந்திரமாவது நீறு" என்னுந் திருநீற்றுப் பதிகமோதி வலப்பாகத்தில் விபூதியைப்பூச அப்பாகஞ் சொஸ்தமாகி, இடப்பாகஞ் சமணர்களால் சொஸ்தமாகாம லிருமடங்காய் வருத்த, அதனைச் சகிக்கொணாது பின்னு மரசன் வேண்ட, இடப்பாகத்திலும் விபூதியைப் பூசினார். உடனே வியாதி நீங்கி அரசனது கூன்நிமிர்ந்து பின்பு சமணர்கள் தங்களுண்மைப் பொருளை ஒரு ஏட்டிலெழுதித் தீயிலிட்டார்கள். பிள்ளையாரும், "போகமார்த்த பூண்முலையா" ளென்னுந் திருநள்ளாற்றுப் பதிகமெழுதியிருக்கு மேட்டினை யத்தீயிலிட்டார். பிள்ளையாரிட்ட ஏடு வேகாம லிருந்தது. மூன்றாந் தடவையுந் தோற்றால் கழுவி லேறுகிறோமென்று சமணர்கள் சொல்லி, தாங்களுண்மையாகக் கொண்டிருக்கு மேட்டினையும், நாயனார், "வாழ்கவந்தணர்" என்னும் பாசுரம் பத்துந் திருக்கடைக் காப்புமெழுதிய அவ்வேட்டினையும் வைகையிலிட, சமணர்களோடு வெள்ளத்தின் வழியே சென்றது; நாயனாரோடு எதிரிட்டுச்சென்று திரு ஏடகமென்னுந் தலத்தருகே நிற்க, மந்திரி குதிரைமேற் சென்று ஏட்டினை யெடுத்து வரக்கண்ட சமணர்கள் கழுவிலேறினார்கள். அந்நாட்டிலுள்ளோர் சைவரானார்கள்.

அதன் பின்பு பாண்டிய நாட்டிலும், ஈழநாட்டிலும், சோழ நாட்டிலுமுள்ள ஸ்தலங்களை யெல்லாந் தரிசித்துக்

கொண்டு திருக்கொள்ளம் பூதூருக்குச் செல்லும்போது எதிரே ஆறு பெருகுதலைக் கண்டு அங்கிருந்த வோடத்தின் கட்டையவிழ்த்து அடியார்களை யதிலேற்றி, "கொட்டமே கமழும்" என்னும் பதிகம்பாடி அக்கரை சேர்ந்து சுவாமியைத் தரிசித்து திருத்தருளிச்சேரி என்னுந் தலத்துக் கருகில் வரும்போது புத்தநந்தி என்னும் பௌத்தன் தடுத்தனன். அடியார்களி லொருவராகிய சம்பந்த சரணாலய ரென்பவர், "புத்தர் சமணக்கழுக்கையர்" என்று முன்னம் நாயனாரருளிய பதிகத்தை யோதியவளவி லவன் றலையிலிடிவிழுந் திறந்தான். இதுகண்டு பௌத்தரெல்லாமோடி மீண்டுவந்து வாதக்கிசைந்து தோல்வியடைந்து விபூதியைத் தரித்து சைவரானார். பிறகு தொண்டை நாட்டில் திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கி திருவொற்றியூருக் கெழுந்தருளினார்.

திருமயிலையில், சிவநேச செட்டியார் புத்திரி பூம்பாவை யென்பவள் தோழிகளோடு மலர்கொய்யப் போய் சர்ப்பந்தீண்டி யிறந்தனள். செட்டியார் தன் செல்வத்தோடு புத்திரியைத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருக்குக் கொடுப்பதாய் முன்னமே நியமித்திருந்தமையால், இறந்தமகளைத் தகனஞ்செய்து சாம்பலை அஸ்தியுடன் குடத்தில் வைத்து பதனஞ் செய்திருந்தனர். அவர் திருவொற்றியூருக்கு வந்து வணங்கி யழைக்க, நாயனார் திருமயிலைக் கெழுந்தருளி, குடத்தைக் கொண்டுவரச் சொல்லி (மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலை) யென்னும் பதிகமோதி எலும்பைப் பெண்ணாக்கி மற்ற ஸ்தலங்களையுந் தரிசித்துச் சீகாழிக் கெழுந்தருளினார்.

தந்தை முதலியோர் பிரார்த்தித்ததால், விவாகத்திற் கிணங்க, நல்லூர்ப் பெருமணத்திற்குச்சென்று நம்பி யாண்டாரது குமாரத்தியை, விதிப்படி சிறப்புடன் திரு மணக் கோலங்கொண்டு ஓமாக்கினியை வலம்வர வெழுந்து தாம் வலஞ்செய்யத்தக்க அக்கினி பரமசிவனே யென்று மனைவியைப்பற்றி ஆலயஞ் சென்று, "நல்லூர்ப் பெருமணம்" என்னும் பதிகமோதிய வளவில், ஈசன் கிருபை கூர்ந்து (உன் காதலியோடு நம்மிடத்துக்குவா) வென்றருளியவுடன், அவ்வாலய முழுதுஞ் சோதியாய் வாயிலை வழித்துக்காட்ட நமசிவாயத் திருப்பதிகமோதி அங்கெழுந்தருளிய எல்லோரையு மதற்குட் போகச் சொல்லிப் பின்பு தாமும் தம்முடைய மனைவியார் கையைப் பற்றியபடியே அந்த சோதிக்குட் போய்க் கலந்து சிவசாயுச்சிய மடைந்தனர்; அப்பால் சோதி மறைந்து முன்போல ஆலயமாக இருந்தது.

திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

உ

சிவமயம்

தேவாரப்பதிகங்கள்

திருப்பிரமபுரம்-பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவியன்விடை யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமல ரான்முனைநாள்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே. 1

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார் கழல்கையாற்றொழுதே
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. [த்தப்

நீர்பரந்தநிமிர்புன் சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
யேர்பரந்தவினவெள் வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுலகின் முதலாகியவோரூ ரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந் தமதிலெய்த துமன்றி விளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்துபலி தேரியவந் தென துள்ளங் கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம் மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடன் சடையன்விடையூரு மிவனென்ன
வருமையாகவுரைசெய்ய வமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்

கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலமிதுவென்ன
பெருமைபெற்றபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. [ப்

மறைகலந்தவொலிபாடலோ டாடலராகிமழுவேந்தி [வன்
யிறைகலந்தவினவெள்வளை சோரவென்னுள்ளங்கவர்கள்
கறைகலந்த கடியார்பொழில் நீடுயர்சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்த பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே. 6

சடைமுயங்குபுனலன் னனலன் னெரிவீசிச் சதிர்வெய்த
வுடைமுயங்குமரலோ டுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழிசூழ்குளிர்கானலம்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்கு பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே. 7

வியரிலங்குவரையுந்திய தோள்களை வீரம்விளை வித்த
வுயரிலங்கையரையன் வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்குமுலகிற் பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்கு பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே. 8

தாணுதல்செய்திறைகாணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வ
வாணுதல் செய்மகளிர் முதலாகிய வையத்தவரேத்தப் [ன்
பேணுதல்செய் பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே. 9

புத்தரோடு பொறியில் சமணும் புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுலகம் பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானை மறுகவ்வுரிபோர்த்ததோர்மாயமிதுவென்னப்
பித்தர்போலும் பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

அருநெறியமறைவல்ல முனியகன் பொய்கையலர்மே
பெருநெறிய பிரமாபுரமேவிய பெம்மானிவன்றன்னை

யொருநெறியமனம்வைத் துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினைதீர்த லெளிதாமே.

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-பிரமபுரீசர், தேவியார்-திருநிலைநாயகியம்மை

கோயில்-பண்-குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கற்றாங்கெரியோம்பிக் கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண் முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப் பற்றாபாவமே. 1

பறப்பைப்படுத்தெங்கும் பசுவேட்டெரியோம்புஞ்
சிறப்பார்வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
பிறப்பில்பெருமானைப் பயின்றாழ்சடையானை
மறப்பிலார்கண்டீர் மையல்தீர்வாரே. 2

மையாரொண்ணார் மாடநெடுவீதியிற்
கையாற்பந்தோச்சங் கழிசூழ்தில்லையுட்
பொய்யாமறைபாடல் புரிந்தானுலகேத்தச்
செய்யானுறைகோயில் சிற்றம்பலந்தானே. 3

நிறைவெண்கொடிமாட நெற்றிநேர்தீண்டப்
பிறைவந்திறைதாக்கும் பேரம்பலந்தில்லைச்
சிறைவண்டறையோவாச் சிற்றம்பலமேய
விறைவன்கழலேத்து மின்பமின்பமே. 4

செல்வநெடுமாடஞ் சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச் செல்வமுயல்கின்ற

செல்வர்வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ் செல்வஞ்செல்வமே. 5

வருமாந்தளிர்மேனி மாதோர்பாகமாந்
திருமாந்தில்லையுட் சிற்றம்பலமேய
கருமானுரியாடைக் கறைசேர்கண்டத்தெம்
பெருமான்கழலல்லாற் பேணாதுள்ளமே. 6

அலையார்புனல்சூடி யாகத்தொருபாக
மலையான்மகளோடு மகிழ்ந்தானுலகேத்தச்
சிலையாலெயிலெய்தான் சிற்றம்பலந்தன்னைத்
தலையால்வணக்குவார் தலையானார்களே. 7

கூர்வாளரக்கன்றன் வலியைக்குறைவித்துச்
சீராலேமல்கு சிற்றம்பலமேய
நீரார்சடையானை நித்தலேத்துவார்
தீராநோயெல்லாந் தீர்தறிண்ணமே. 8

கோணாகணையானுங் குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக் கனலாயோங்கினான்
சேணார்வாழ்தில்லைச் சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம் வாளாமாயுமே. 9

பட்டைத்துவராடைப் படிமங்கொண்டாடு
முட்டைக்கட்டுரை மொழிவகேளாதே
சிட்டர்வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
நட்டப்பெருமானை நாளுந்தொழுவோமே. 10

ஞாலத்துயர்காழி ஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச் சிற்றம்பலமேய

சூலப்படையானைச் சொன்னதமிழ்மாலை
கோலத்தாற்பாட வல்லார்நல்லாரே. 11

சுவாமி பெயர்-திருமூலத்தானநாயகர்-சபாநாதர்.
தேவியார்-சிவகாமியம்மை.

கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஆடினாய்நறுநெய்யொடுபாறயிரந்தணர் பிரியாசிற்றம்பலம்
நாடினாயிடமாநறுங்கொன்றை நயந்தவனே [வெண்டிங்கள்
பாடினாய்மறையோடு பல்கீதமும்பல்சடைப்பனிகாலகதிர்
சூடினாயருளாய்சுருங்க வெம்தொல்வினையே. 1

கொட்டமேகமழுங்குழலாளொடு கூடினாயெருதேறினாய்
பட்டமேபுனைவாயிசை பாடுவபாரிடமா [நுதற்பல்
நட்டமேநல்வாய்மறையோர் தில்லைநல்லவர்பிரியாதசிற்றம்
மிட்டமாயிவை மேவியதென்னைகொலோ. [பல

நீலத்தார்கரியமிடற்றார் நல்லநெற்றிமேலுறை கண்ணினார்
சூலத்தார்சுடலைப்பொடி நீறணிவார்சடையார் [பற்று
சீலத்தார்தொழுதேத்து சிற்றம்பலஞ்சேர்தவாற்கழற்சேவ
கோலத்தாயருளாயுன் காரணங்கூறுதுமே. [டிகைதொழக்

கொம்பலைத்தழகெய்திய நுண்ணிடைக்கோல வாண்
மதிபோல முகத்திரண், டம்பலைத்தகண்ணாள் முலைமேவி
யாவார் சடையான், கம்பலைத்தொழுகாமுற காளையர்காத
லாற்கழற் சேவடி கைதொழ, வம்பலத்துறைவானடி
யார்க் கடையாவினையே. 4

தொல்லையாரமுதுண்ணநஞ்சுண்டதோர் தூமணிமிடறுபகு
பல்லையார்தலையிற்பலியேற்றுழல்பண்டரங்கா [வாயதோர்

தில்லையார்தொழுதேத்து சிற்றம்பலஞ் சேர்தலாற்கழற்
[சேவடிகைதொழ
இல்லையாம்வினை தா னெரியம்மதி லெய்தவனே. 5

ஆகந்தோயணிகொன்றையாய னலங்கையாயமரர்க்கமராவு
பாகந்தோய் பகவாபலியேற்றுழல் பண்டரங்கா [மை
மாகந்தோய்பொழின் மல்குசிற்றம்பல மன்னினாய்மழுவா
லாகந்தோயவரையா யடியாரை நண்ணாவினையே. [ளினாயழ

சாதியார்பளிங்கின்னொடு வெள்ளியசங்கவார்குழையாய்
வேதியாவிகிர்தாவிழவா ரணிதில்லைதன்னு [திகழப்படும்
மாதியார்க்கிடமாய்ச்சிற்றம்பல மங்கையாற்றொழ வல்லடி
வாதியாதகலுந்நலியா மலிதீவினையே. [யார்களை

வேயினார்பணைத்தோளியோடாடலை வேண்டினாய்விகிர்தா
தாயினாயிடுகாட்டெரியாட லமர்ந்தவனே [வுயிர்கட்குமு
தீயினாற்கணையாற் புரமூன்றெய்தசெம்மையாய்திகழ்கின்ற
மேயினாய்கழலேதொழு தெய்து துமேலுலகே. [சிற்றம்பல

தாரினார்விரிகொன்றையாய் மதிதாங்குநீள்சடையாய்
தேரினார்மறுகிற்றிருவா ரணிதில்லைதன்னுட் [தலைவாநல்ல
சீரினால்வழிபாடொழியாததோர் செம்மையாயழகாயசிற்
மேரினாலமர்ந்தாயுனசீரடி யேத்துதுமே. [றம்பல

வெற்றரையுழல்வார் துவராடையர்வேடத்தாரவர்கள்
[ளுரைகொள்ளன்மின்
மற்றவருலகின்னவலம்மவை மாற்றகில்லாக்
கற்றவர்தொழுதேத்து சிற்றம்பலங்காதலாற் கழற்சேவடி
வுற்றவருலகின் னுறுதிகொளவல்லவரே. [கைதொழ

காரும்பூம்பொழினண்ணிய காழியுளான்மறைவல்ல ஞான
னூறுமின்றமிழா லுயர்ந்தா ருறைதில்லைதன்னு [சம்பந்த

ளேறுதொல்புகழேந்து சிற்றம்பலத் தீசனையிசையாற்
[சொன்னபத்தினை
கூறுமாறுவல்லாருயர்ந் தாரொடுங்கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்.

திரு-அண்ணாமலை-பண்-தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பூவார்மலர் கொண்டடியார் தொழுவார்புகழ்வார் வானோர்
மூவார்புரங்களெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார் [கள்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின்னிரையோடு
மாமாம்பிணைவந் தணையுஞ்சார லண்ணாமலையாரே. 1

மஞ்சைப்போழ்ந்தமதியஞ்சூடும் வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத்தடக்குமதுவி நன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும்வேட மடவாரிதணமதுவேறி
பைஞ்சொற்கிளிகளாயோவென்னு மண்ணாமலையாரே. 2

ஞானத்திரளாய்நின்றபெருமானல்லவடியார்மே
லூனத்திரளைநீக்குமதுவுமுண்மைப்பொருள்போலு
மேனத்திரளோடினமான்கரடியிழியுமிரவின்க
ணானைத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. 3

இழைத்தவிடையாளுமையாள் பங்கரிமையோர்பெருமானார்
தழைத்தசடையார்விடையொன்றேறித்தரியார்புரமெய்தார்
பிழைத்தபிடியைக்காணாதோடிப்பெருங்கைமதவேழ
மழைத்துத்திரிந்தங்குறங்குஞ்சாரலண்ணாமலையாரே. 4

உருவிற்றிகழுமுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
செருவிலொருகால்வளையவூன்றிச்செந்தீயெழுவித்தார்

பருவிக்குறவர்புனத்திற்குவித்தபருமாமணிமுத்த
மருவித்திரளோடிழியுஞ்சாரலண்ணாமலையாரே. 5

எனைத்தோரூழியடியாரேத்தவிமையோர்பெருமானார்
நினைத்துத்தொழுவார் பாவந்தீர்க்குநிமலருறைகோயில்
கனைத்தமேதிகாணாதாயன்கைம்மேற்குழலூத
அனைத்துஞ்சென்றுதிரளுஞ்சாரலண்ணாமலையாரே. 6

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயில்
முந்தியெழுந்தமுழவினோசைமுதுகல்வரைகள்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. 7

மறந்தான்கருதிவலியைநினைந்துமாறாரெடுத்தான்றோ
ணிறந்தான்முறியநெறியவூன்றிநிறையவருள்செய்தார்
திறந்தான்காட்டியருளாயென்று தேவரவர்வேண்ட
அறந்தான்காட்டியருளிசசெய்தாரண்ணாமலையாரே. 8

தேடிக்காணார்திருமால்பிரமன்றேவர்பெருமானை
மூடியோங்கிமுதுவேபுகுத்தமுத்தம்பலகொண்டு
கூடிக்குறவர்மடவார்குவித்துக்கொள்ளவம்பினென்
றூடிப்பாடியளக்குஞ்சாரலண்ணாமலையாரே 9

தட்டையிடுக்கித்தலையைப்பறித்துசமணேர்நின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக்கொள்ளவேண்டா பேணித்தொழுமின்க
வட்டமுலையாளுமையாள் பங்கர்மணியுறைகோயி [ள்
லட்டமாளித்திரள்வந்தணையுமண்ணாமலையாரே. 10

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணாமலையானை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்

சொல்லால்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-அருணாசலேசுவரர்
தேவியார்-உண்ணாமுலையம்மை.

திருநெய்த்தானம்-பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மையாடியகண்டன் மலைமகள்பாகமதுடையான்
கையாடியகேடிற்கரியுரிமூடியவொருவன்
செய்யாடியகுவளைமலர்நயனத்தவளோடுந்
நெய்யாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. 1

பறையும்பழிபாவம்படுதுயரம்பலதீரும்
பிறையும்புனலரவும்படுசடையெம்பெருமானு
ரறையும்புனல்வருகாவிரியலைசேர்வடகரைமேல்
நிறையும்புனைமடவார்பயில்நெய்த்தானமெனீரே. 2

பேயாயினபாடப்பெருநடமாடியபெருமான்
வேயாயினதோளிக்கொருபாகம்மிகவுடையான்
தாயாகியவுலகங்களை நிலைபெறுசெய்தலைவன்
நேயாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. 3

சுடுநீறணியண்ணல்சுடர்சூலம்மனலேந்தி
நடுநள்ளிருணடமாடியநம்பனுறைவிடமாங்
கடுவாளிளவரவாடுமிழ்கடனஞ்சமதுண்டா
நெடுவாளைகள் குதிகொள்ளுயர்நெய்த்தானமெனீரே. 4

நுகராரமொடேலம்மணி செம்பொன்னுரையுந்திப்
பகராவருபுனற்காவிரிபரவிப்பணிந்தேத்துந்

நகரான்மணலிடுதண்கரைநிகழ்வாயநெய்த்தான
நிகரானடியேத்தநலைமைகடலையடையாவே. 5

விடையார்கொடியுடையவ்வணல்வீழ்ந்தார்வெளையெலும்
உடையார்நறுமாலைச்சடையுடையாரவர்மேய [பும்
புடையேபுனல்பாயும்வயல்பொழில்சூழ்நெய்த்தானம்
அடையாதவரென்றும்மமருலகமடையாரே. 6

நிழலார்வயல்கமழ்சோலைகணிறைகின்றநெய்த்தானத்
தழலானவனனங்கையிலேந்தியழகாய
கழலானடிநாளுங்கழலாதேவிடலின்றித்
தொழலாரவர்நாளுந்துயரின்றிற்றொழுவாரே. 7

அறையகார்கடலிலங்கைக்கிறையணிசேர்கயிலாய
மிறையாரமுனெடுத்தானிருபதுதோளுறலூன்றி
நிறையார்புனனெய்தானன்னிகழ்சேவடிபரவக்
கறையார்கதிர்வாளீந்தவர்கழலேத்துதல்கதியே. 8

கோலம்முடிநெடுமாலொடுகொய்தாமரையானுஞ்
சீலம்மறிவரிதாயொளிதிகழ்வாயநெய்த்தானங்
காலம்பெறமலர்நீரவைதூவித்தொழுதேத்தும்
ஞாலம்புகழடியாருடலுறுநோய்நலியாவே. 9

மத்தம்மலிசித்தத்திறைமதியில்லவர்சமணர்
பத்தரவர்சொன்னமொருபொருளாகினையேன்மின்
நித்தம்பயினிமலன்றுறைநெய்த்தானமதேத்துஞ்
சித்தம்முடையடியாருடல்செறுநோயடையாவே. 10

தலமல்கியபுனற்காழியுட்டமிழ்ஞானசம்பந்தன்
நிலமல்கியபுகழான்மிகுநெய்த்தானனைநிகரில்

பலமல்கியபாடல்லிவைபத்துமிகவல்லார்
சிலமல்கியசெல்வனடிசேர்வர்சிவகதியே. 11

திருச்சிற்றம்பலம். [யம்மை.

சுவாமிபெயர்-நெய்யாடியப்பர். தேவியார்-வாலாம்பிகை

திருப்பழனம்-பண்-தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்காவெனவுநம்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே. 1

கண்மேற்கண்ணுஞ்சடைமேற் பிறையுமுடையார்காலனைப்
புண்ணாறுதிரமெதிராவோடப்பொன்றப்புரந்தாளா
லெண்ணாதுதைத்தவெந்தைபெருமானிமவான்மகளோடும்
பண்ணார்களிவண்டறைபூஞ்சோலைப்பழனநகராரே. 2

பிறையும்புனலுஞ் சடைமேலுடையார் பறைபோல்விழிகட்
யுறையுமயானமிடமாவுடையாருலகர்தலைமக [பே
னறைமலர்தொண்டடியார்பரவியாடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும்பலியுமோவாப்பழனநகராரே. 3

உரமன்னுயர்கோட்டுலறுகூகையலறுமயானத்தி
லிரவிற்பூதம்பாடவாடியெழிலாலவர்மேலைப்
பிரமன்றலையினறவமேற்றபெம்மானெமையாளும்
பரமன்பகவன்பரமேச்சுவரன்பழனநகராரே. 4

குலவெஞ்சிலையான்மதின்மூன்றெரித்த கொல்லேறுடையண்
கலவமயிலுங்குயிலும்பயிலுங்கடல்போல்காவே [ணல்

கலமஞ்சுடையாறுமாய்க்கனிகள் குதிகொண்டெழுந்திருந்தி
பலவின்கனிகள்திரைமுன்சேர்க்கும்பழனநகராரே. [ப்

விளைக்குராலும்விளிச்சங்கொலியும்விழவினொலியோவா
மூலைத்தலைகொண்டடியாரேத்தப்பொடியாமதிலெய்தா
றீளைப்படுகிலையார்தங்கிற்குலையார்வாழையின்
பாளைக்கமுகின்பழம்வீழ்சோலைப்பழனநகராரே. 6

பொய்யார்மொழியார்முறையாலேத்திப்புகழ்வார்திருமே
செய்யார்கரியமிடற்றார்வெண்ணூல்சேர்ந்தவகலத்தார் [னி
கையாடலினார்புனலான்மல்குசடைமேற்பிறையோடும்
பையாடரவமுடனேவைத்தார்பழனநகராரே. 7

மஞ்சோங்குயரமுடையான்மலையைமாறாவெடுத்தான்றோ
ளஞ்சோடஞ்சுமாறுநான்குமடலூன்றினார்
நஞ்சார்சுடலைப்பொடிநீறணி தம்பான்வம்பாரும்
பைந்தாமரைகள்கழனிசூழ்ந்தபழனநகராரே. 8

கடியார்கொன்றைச்சுரும்பின்மலைமகிழ்புன்சடையார்விண்
முடியார்ப்படிமூவடியாலுலகமுழுதுந்தாவிய
நெடியானீடாமரைமேலயனுந்தேடிக்காணாத
படியார்பொடியாடகலமுடையார்பழனநகராரே. 9

கண்டான்கழுவாமுன்னேயோடிக்கலவைக்கஞ்சியை
யுண்டாங்கவர்களுரைக்குஞ்சிறசொல்லோரார்பாராட்ட
வண்டாமரையினமலர்மேன்லவமதுமாய்மிகவுண்டு
பண்டான்கெழும்வண்டியாழ்செய்யும்பழனநகராரே. 10

வேய்முத்தோங்கிவிரைமுன்பரக்கும்வேணுபுரந்தன்னு
ளுவய்த்தனையதிறலால்மிக்கஞானசம்பந்தன்

பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைபத்தும்வல்லார்நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-ஆபத்சகாயர். தேவியார்-பெரியநாயகியம்மை

திருக்கொள்ளம்பூதூர்—ஈரடிமேல்வைப்பு
காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கொட்டமேகமழுங்கொள்ளம்பூதூர்
நட்டமாடியநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 1

கொட்டக்கழனிக்கொள்ளம்பூதூர்
நட்டகத்துறைநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 2

குலையினார்தெங்குசூழ்கொள்ளம்பூதூர்
விலையிலாட்கொண்டவிகிர்தனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 3

குவளைகண்மலருங்கொள்ளம்பூதூர்
தவளநீறணிதலைவனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 4

கொன்றைபொன்சொரியுங்கொள்ளம்பூதூர்
நின்றபுன்சடைநிமலனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 5

ஓடம்வந்தணையுங்கொள்ளம்பூதூ
ராடல்பேணியவடிகளையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 6

ஆறுவந்தணையுங்கொள்ளம்பூதூ
ரேறுதாங்கியவிறைவனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 7

குரக்கினம்பயிலுங்கொள்ளம்பூதூ
ரரக்கனைச்செற்றவாதியையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 8

பருவராலுகளுங்கொள்ளம்பூதூ
ரிருவர்காண்பரியான்கழலுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 9

நீரக்கழனிக்கொள்ளம்பூதூர்த்
தேமான்செற்றசெல்வனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 10

கொன்றைசேர்சடையான்கொள்ளம்பூதூர்
நன்றுகாழியுண்ஞானசம்பந்த
னின்றுசொன்னமாலைகொண்டேத்தவல்லார்போ
யென்றும்வானவரோடிருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-வில்வனேசுவரர். தேவியார்-சவுந்தராம்பிகை. இது ஓடக்காரனில்லாமல் அவ்வோடம் ஆற்றிற்சென்று கரைசேரும்படி அருளிச்செய்த பதிகம்.

திருவாரூர்-பண்-காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பவனமாய்ச்சோடையாய்நா வெழும்பஞ்சுதோய்ச்சட்டவுண்
சிவனதாட்சிந்தியாய்ப்பேதைமார்போலநீவெள்கினையே [டு
கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்ட
னவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.

தந்தையார்போயினர் தாயாரும்போயினர் தாமும் போவார், கொந்த்வேல்கொண்டொரு கூற்றத்தார்பார்க் கின்றார் கொண்டுபோவா, ரெந்தநாள் வாழ்வதற்கேமனம் வைத்தியாலேழை நெஞ்சே, யந்தணாரூர்தொழுதுய்யலா மையல்கொண்டஞ்சனெஞ்சே. 2

நிணங்குடர்தோனரம்பென்புசோரக்கைதானிலாயதன்றற்
குணங்களார்க்கல்லதுகுற்றநீங்காதெனக்குலுங்கினையே
வணங்குலார்வானவர்தானவர்வைகலுமணங்கோடேத்து
மணங்கணாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே

நீதியால்வாழ்கிலைநாள்செலாநின்றனநித்தநோய்கள்
வாதியாவாதலானாளுநாளின்பமேமருவினாயே
சாதியார்கின்னரர்தருமனும்வருணனுமேத்துமுக்க
ணாதியாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சநெஞ்சே.
பிறவியால்வருவனகேடுளவாதலால்பெரியவின்பத்
துறவியார்க்கல்லதுதுன்பநீங்காதெனத்தூங்கினாயே
மறவனீமார்க்கமேனண்ணினாய்தீர்த்தநீர்மல்குசென்னி
யறவனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சநெஞ்சே. 5

செடிகநோயாக்கையும் பாம்பின்வாய்த் தேரைவாய்ச் சிறுபறவை, கடிகொள்பூந்தேன்சுவைத்தின்புறலாமென்று கருதினாயே, முடிகளால் வானவர் முன்பணிந்தன்பரா யேத்துமுக்க, ணடிகளாரூர்தொழுதுப்யலாமையல்கொண் டஞ்சநெஞ்சே. 6

ஏறுமாலியானையேசிவிகையந்தளகமீச்சேர்ப்பிவட்டில்
மாறிலாழுடம்பினார்படுவதோர்நடலைக்குமயங்கினாயே
மாறிலாவனமுலைமங்கையோர்பங்கினர்மதியம்வைத்தே
வாறனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சநெஞ்சே. 7

என்பினார்கழிநிறைத்திறைச்சிவன் சுவரெறிந்துநம் மில்லம், புன்புலானாறுதோல்பார்த்துப் பொல்லாமையான் முகடுகொண்டு, முன்பெலாமொன்பது வாசலார்குரம்பை யின் மூழ்கிடாதே, யன்பனாரூர்தொழுதுய்யலாமையல் கொண்டஞ்சநெஞ்சே. 8

தந்தைதாய்தன்னுடன்தோன்றினார்புத்திரர்தாரமென்னும்
பந்தநீங்காதவர்க்குய்ந்துபோக்கில்லெனப்பற்றினாயே
வெந்தைநீறாடியாராதியார்சோதியார்வேதகீத [சே.
னெந்தையாரூர்தொழுதுய்யலாமையல் கொண்டஞ்சநெஞ்

நெடியமால் பிரமனீண்டு மண்ணிடந் திண்ணந்தேடிக் காணாப், படியனார்பவளம்போலுருவனார் பனிவளர்மலை யாள்பாக, வடிவனார் மதிபொதிசடையனார் மணியணி கண்டத்தெண்டோ, ளடிகளாரூர்தொழுதுய்யலாமையல் கொண்டஞ்சனெஞ்சே. 10

பல்லிதழ்மாதவியல்லிவண்டியாழ்செயுங்காழியூர
னல்லவேநல்லவேசொல்லியஞானசம்பந்தனாரு
ரெல்லியம்போதெரியாடுமெம்மீசனையேத்துபாடல்
சொல்லவேவல்லவாதீதிலாரோதநீர்வையகத்தே. 11

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை-திருவிருக்குறள்-பண்-குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வாசிதீரவே, காசுநல்குவீர்
மாசின்மிழலையீ, ரேசலில்லையே. 1

இறைவராயினீர், மறைகொண்மிழலையீர்
கறைகொள்வாசினை, முறைமைநல்குமே. 2

செய்யமேனியீர், மெய்கொண்மிழலையீர்
பைகொளரவினீ, ருய்யநல்குமே. 3

நீறுபூசினீ, ரேறதேறினீர்
கூறுமிழலையீர், பேறுமருளுமே. 4

காமன்வேவவோர், தூமக்கண்ணினீர்
நாமமிழலையீர், சேமநல்குமே. 5

பிணிகொள்சடையினீர், மணிகொண்டமிடற்றினீ
ரணிகொண்மிழலையீர், பணிகொண்டருளுமே. 6

மங்கைபங்கினீர், துங்கமிழலையீர்
கங்கைமுடியினீர், சங்கைதவிர்மினே. 7

அரக்கனெரிதா, விரங்கமெய்தினீர்
பரக்குமிழலையீர், கரக்கைதவிர்மினே. 8

அயனுமாலுமாய், முயலுமுடியினீ
ரியலுமிழலையீர், பயனுமருளுமே. 9

பறிகொள்தலையினு, றறிவதற்கிலார்
வெறிகொண்மிழலையீர், பிரிவதரியதே. 10

காழிமாநகர், வாழிசம்பந்தன்
வீழிமிழலைமேற், றாழுமொழிகளே. 11

திருச்சிற்றம்பலம். [யார்
சுவாமி-பெயர்-வீழியழகிசரர், தேவியார்-சந்திராம்பிகை
இது படிக்காசு சுவாமியருளியபோது வட்டந்ீர ஓதியது.

திருச்சிக்கல்-பண்-இந்தளம்

திருச்சிற்றம்பலம்

வானுலவுமதிவந்துலவும்மதின்மாளிகை
தேனுலாவுமலர்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்
வேனல்வேலைவிழுத்திட் டவெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகநினைவார்வினைவார்வினையாயினநையுமே. 1

மடங்கொள்வாளைகுதிகொள்ளுமணமலர்ப்பொய்கைசூழ்
திடங்கொண்மாமறையோரவர்மல்கியசிக்கலுள்

விடங்கொள்கண்டத்து வெண்ணெய்ப்பெருமானடிமேவிய
யடைந்துவாழுமடியாரவரல்லலறுப்பரே. 2

நீலநெய்தன்னில்விம்மலருஞ்சுனைநீடிய
சேலுமாலுங்கலனிவ்வளமல்கியசிக்கலுள் [பிரான்
வேலொண்கண்ணியினுளையோர்பாகன்வெண்ணெய்ப்
பாலவண்ணன்கழலேத்தநம்பாவம்பறையுமே. 3

கந்தமுந் தக்ககைதைபூத்துக் கமழ்ந்துசேரும்பொழில்'
செந்துவண்டின்னிசைபாடன்மல்குந் திகழ்சிக்கலுள், வெந்
தவெண்ணீற்‌, றண்ணல் வெண்ணெய்ப்பிரான் விரையார்
கழல், சிர்தைசெய்வார்வினையாயின் தேய்வது திண்ணமே.

மங்குறங்குமறையோர்கண்டமாடத்தயலேமிகு
தெங்குதுங்கப்பொழில்செல்வமல்குந் திகழ்சிக்கலுள்
வெங்கண்வெள்ளேறுடைவெண்ணெய்ப்பிரானடிமேவவே
தங்குமேன்மைசாதந் திருநாளுந்தகையுமே. 5

வண்டிரைத்துமதுவிம்மியமாமலர்ப்பொய்கைசூழ்
தெண்டிரைக்கொள்புனல்வந்தொழுகும்வயற்சிக்கலுள்
விண்டிரைத்தமலராற்றிகழ்வெண்ணெய்ப்பிரானடி
கண்டிரைத்துமனமேமதியாய்கதியாகவே. 6

மூன்னுமாடம்மதின்மூன்றுடனேயெரியாய்விழத்
துன்னுவார்வெங்கணையொன்றுசெலுத்தியசோதியான்
செந்நெலாரும்வயற்சிக்கல்வெண்ணெய்ப்பிரானடி
யுன்னிடீமனமேசினைவாய்வினையோயவே. 7

தெற்றலாகியதென்னிலங்கைக்கிறைவன்மலை
பற்றினான்முடிபத்தோடுதோள்கணெரியவே

செற்றதேவன்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
புற்றநீங்கினையாய்வினையாயினவோயவே. 8

மாலினோடருமாமறைவல்லமுனிவனுங்
கோலினார்குறுகச்சிவன்சேவடிகோடியுஞ்
சீலந்தாமறியார்திகழ்சிக்கல்வெண்ணெய்ப்பிரான்
பாலும்பன்மலர்தூவப்பறையுநம்பாவமே. 9

பட்டைநற்றுவராடையினரொடும்பாங்கிலாக்
கட்டணகழுக்கள்சொல்வினைக்கருதாதுநீர்
சிட்டன்சிக்கல்வெண்ணெய்ப்பெருமான்செழுமாமறை
பட்டன்சேவடியேபணிமின்பிணிபோகவே. 10

கந்தமார் பொழிற்காழியுண்ஞானசம்பந்தனற்
செந்தண்பூம்பொழிற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடிச்
சந்தமாச்சொன்னசெந்தமிழ்வல்லவானிடை
வெந்தநீறணியும்பெருமானடிமேவுவரே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-நவநீதநாதர், தேவியார்-வேனெடுங்
கண்ணியம்மை.

திருக்கடனாகைக்காரோணம்-பண் செவ்வழி

திருச்சிற்றம்பலம்

கூனற்றிங்கட்குறுகண்ணிகான்றநெடுவெண்ணிலா
வேனற்பூத்ததம்மாரங்கோதையோடும்விராவுஞ்சடை
வானநாடமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. 1

விலங்கலொன்றுசிலையாமதின்மூன்றுடன்வீட்டினா
னிலங்குகண்டத்தொழிலாமைபூண்டாற்கிடமாவது
கலங்கியோங்கிவருவெண்டிரைமல்கியமால்கடற்
கலங்களோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. 2

வெறிகொளாருங்கடற்கைதைநெய்தல்விரிபூம்பொழின்
முறிகொணாழன்முடப்புன்னைமுல்லைமுகைவெண்மலர்
நறைகொள்கொன்றைநயந்தோங்குநாதற்கிடமாவது
கறைகளோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. 3

வண்டுபாடல்வளர்கொன்றைமாலைமதியோடுடன்
கொண்டகோலங்குளிர்கங்கைதங்குங்குருட்குஞ்சிய
னுண்டுபோலுமெனவைத்துகந்தவொருவற்கிடங்
கண்டல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. 4

வார்கொள்கோலமுலைமங்கைநல்லார்மகிழ்ந்தேத்தவே
நீர்கொள்கோலச்சடைநெடுவெண்டிங்கணிகழ்வெய்தவே
போர்கொள்சூலப்படைபுல்குகையார்க்கிடமாவது
கார்கொளோதங்கசூழ்கடனாகைக்காரோணமே. 5

விடையதேறிவ்விடவரவசைத்தவிகிர்தரவர்
படைகொள்பூதம்பாடவாடும்பரமாயவ
ருடைகொள்வேங்கையுரிதோலுடையார்க்கிடமாவது
கடைகொள்செல்வங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. 6

பெய்துவாழ்வார்மனம்பாழ்படுக்கும்மலர்ப்பூசனை
செய்துவாழ்வார்சிவன்சேவடிக்கேசெலுஞ்சிந்தையா
ரெய்தவாழ்வாரெழினக்கரெம்மாற்கிடமாவது
கைதல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. 7

பத்திரட்டித்திரடோளுடையான்முடிபத்திற்
றத்திரட்டிவிரலாலடர்த்தார்க்கிடமாவது
மைத்திரட்டிவருவெண்டிரைமல்கியவார்கடல்
கைத்திரட்டுங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. 8

நல்லபோதிலுறைவானுமாலுநடுக்கத்தினா
லல்லராவெனநின்றபெம்மாற்கிடமாவது
மல்லோங்கிவருவெண்டிரைமல்கியமால்கடல்
கல்லோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. 9

உயர்ந்தபோதினுருவத்துடைவிட்டுழல்வார்களும்
பியர்ந்தமண்டையிடுபிண்டமாவுண்டுழல்வார்களும்
மயந்துகாணுவகைநின்றத ர்க்கிடமாவது
கயங்களோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. 10

மல்குதண்பூம்புனல்பாய்ந்தொழுகும்வயற்காழியா
னல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லயார்கண்முன்
வல்லவாறேபுனைந்தேத்துங்காரோணத்துவண்டமிழ்
சொல்லுவார்க்குமிவைகேட்பவர்க்குந்துயரில்லையே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-காயாரோகணேசுவரர்.
தேவியார்-நீலாயதாக்ஷியம்மை

திருச்சிராப்பள்ளி-பண்-குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத்தீயதிலானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமையொருபாகமுடையானைச்

சென்றடையாத்திருவுடையானைச்சிராப்பள்ளிக்
குன்றுடையானைக்கூறவென்னுள்ளங்குளிருமே. 1

கைம்மகவேந்திக்கடுவனோடூடிக்கழையாய்வான்
செம்முகமந்திகருவரையேறுஞ்சிராப்பள்ளி
வெம்முகவேழத்தீருரிபோர்த்தவிகிர்தாநீ
பைம்முகநாமம்மதியுடன்வைத்தல்பழியன்றே. 2

மந்தம்முழவம்மலைத்தும்பவுரைநீழற்
செந்தண்புனமுஞ்சுனையுஞ்சூழ்ந்தசிராப்பள்ளி
கந்தம்மலர்கள்சடைமேலுடையார்விடையூரு
மெந்தம்மடிகளடியார்க்கல்லலில்லையே. 3

சிறைமல்குசாரச்சனைமல்குநீலத்திடைவைகித்
துறைமல்குவண்டுந்தும்பியும்பாடுஞ்சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன்கனலெரியாடுங்கடவுளெம்
பிறைமல்குசென்னியுடையவனங்கள்பெருமானே. 4

கொலைவரையாதகொள்கையர்தங்கண்மதின்மூன்றுஞ்
சிலைவரையாகச்சென்றனரேனுஞ்சிராப்பள்ளித்
தலைவரைநாளுந்தலைவரல்லாமையுரைப்பீர்கா
ணிலைவரைநீலமுண்டதும்வெள்ளைநிறமாமே. 5

வெய்யதண்சாரல்விரிகிலவேங்கைத்தண்போது
செய்யபொன்சேருஞ்சிராப்பள்ளிமேவியசெல்வனார்
தையலார்பாகமகிழ்வர்நஞ்சுண்பர்தலையோட்டி
லையமுங்கொள்வராரிவர்செய்கையறிவாரே. 6

வேயுயர்காரற்கருவிரலூகம்விளையாடுஞ்
சேயுயர்கோயிற்சிராப்பள்ளிமேவியசெல்வனார்
பேயுயர்கொள்ளிகைவிளக்காகப்பெருமானார்
தீயுகந்தாடிருக்குறிப்பாயிற்றாகாதே. 7

மலைமல்குதோளன்வலிகெடவூன்றிமலரோன்றன்
றலைகலனாகப்பலிதிரிந்துண்பர்பழிதோரார்
சொலவல்வேதஞ்சொலவலகீதஞ்சொல்லுங்காற்
சிலவலபோலுஞ்சிராப்பள்ளிச்சேடர்செய்கையே. 8

அரப்பள்ளியானுமலருறைவானுமறியாமையைக்
கரப்பள்ளிநாடிக்கண்டிலரேனுங்கடல்சூழ்ந்த
சிரப்பள்ளியமேயவார்சடைச்செல்வர்மனைதோறு
மிரப்புள்ளீரும்மையேதிலர்கண்டாலிகழாரோ. 9

நாணாதுடைநீத்தோர்களுங்கஞ்சிநாட்காலே
பூணாப்பகலுண்டோதுவோர்களுமுரைக்குஞ்சொற்
பேணாதுசீர்பெறுதுமென்பீரெம்பெருமானார்
சேணார்கோயில்சிராப்பள்ளிசென்றுசேர்மினே. 10

தேனயம்பாடுஞ்சிராப்பள்ளியானைத்திரைசூழ்ந்த
கானல்சங்கேறுகழுமலவூரிற்கவுணியன்
ஞானசம்பந்தனலமிகுபாடலிவைவல்லார்
வானசம்பந்தத்தவரொடுமன்னிவாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-தாயுமானேசுவரர், தேவியார்-
மட்டுவார் குழலம்மை.

திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம்-பண்-காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு

தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்திருவாலவாயான்திருநீறே. 1

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தருவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்திருநீறே. 2

முத்திதருவதுநீறுமுனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிருவாலவாயான்திருநீறே. 3

காணவினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்திருநீறே. 4

பூசவினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறுவந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிருவாலவாயான்திருநீறே. 5

அருத்தமதாவதுநீறுவவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்திருநீறே. 6

எயிலதுவட்டதுநீறுவிருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறுபாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறுசுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்திருநீறே. 7

இராவணன்மேலதுநீறுவெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறுபாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு
அராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே. 8

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண்மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு
ஆலமுதுண்டமிடற்றெம்மாலவாயான்றிருநீறே. 9

குண்டிகைக்கையர்களோடுசாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறுகருதவினியதுநீறு
எண்டிசைப்பட்டபொருளாரேத்துந்தகையதுநீறு
அண்டத்தவர்பணிந்தேத்துமாலவாயான்றிருநீறே. 10

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும்பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே 11

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர் சொக்கநாதேசுவரர், தேவியார்மீனாக்ஷியம்மை. இப்பதிகம் பாண்டியராஜனுடைய சுரவியாதி தீர அருளிச்செய்தது

திருவாலவாய் திருவிராகம்-பண்கௌசிகம்

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே

காடலாலவாயிலாய்கலாய்கவாவிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. 1

பட்டிசைந்தவல்குலாள்பாவையாளோர்பாகமா
யொட்டிசைந்ததன்றியும்முச்சியாளொருத்தியாக்
கொட்டிசைந்தவாடலா கூடலாலவாயிலா
யெட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாறிதென்னையே. 2

குற்றங்குணங்கணீ கூடலாலவாயிலாய்
சுற்றனீபிரானுனீதொடர்ந்திலங்குசோதினீ
கற்றநூற்கருத்துனீயருத்தமென்,மென்றிவை
முற்றுனீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்பனே 3

முதிருநீர்ச்சடைமுடிமுதல்வனீமுழங்கழ
லதிரவீசியாடுவாயழகனீபுயங்கனீ
மதுரனீமணாளனீமதுரையாலவாயிலாய்
சங்கரசதுர்முகன்கபாலமேந்துசம்புவே. 4

கோலமாயநீண்டமதிற்கூடலாலவாயிலாய்
பாலனாயதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னையே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலுஞ்
சீலமாயசிந்தையிற்றேர்வதில்லைதேவரே. 5

பொன்றயங்கிலங்கொளிந்நலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவாய்பிஞ்ஞகர்பிலப்பிலீ
கொன்றையம்முடியினாய்கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலேநினைப்பதென்னியமமே 6

ஆதியந்தமாயினாயாலவாயிலண்ணலே
சோதியந்தமாயினாய்சோதியுள்ளோர்சோதியாய்

ஓதம்வந்தவாய்மையாற்கிளர்தருக்கினார்க்கலா
லோதிவந்தவாய்மையாலுணர்ந்துரைக்கலாகுமே. 7

கறையிலங்குகண்டனேகருத்திலாக்கருங்கடற்
றுறையிலங்கைமன்னனைத்தோளடரவூன்றினாய்
மறையிலங்குபாடலாய்மதுரையாலவாயிலாய்
சிறையிலங்குநெஞ்சினனினைப்பதேசியமமே. 8

தாவணவ்விடையினாய்தலைமையாகநாடொறுங்
கோவணவ்வுடையினாய்கூடலாலவாயிலாய்
தீவணம்மலர்மிசைத்திசைமுகனுமாலுநின்
றூவணமளக்கிலார்துளக்கமெய்துவார்களே. 9

தேற்றமில்வினைத்தொழிற்றேருஞ்சமணரும்
போற்றிசைத்துநின்கழற்புகழ்ந்துபண்ணியங்கொளார்
கூற்றுதைத்ததாளினாய்கூடலாலவாயிலாய்
பாற்றிசைக்குமூர்த்தியாகிநின்றதென்னநன்மையே. 10

போயனீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினா
லாயசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத்
தீயதீரவெண்ணுவார்கள்சிந்தைபாயதேவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநெல்லூர்ப்பெருமணம்-பண்-அந்தாளிகுறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நல்லூர்ப்பெருமணம்வேண்டாக்கழுமலம்
பல்லூர்ப்பெருமணம்பாட்டுமெய்யாயத்தில்

சொல்லூர்ப்பெருமணஞ்சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமணமேயநம்பானே. 1

தருமணலோதஞ்சேர்தண்டகடனித்திலம்
மருமலர்கொண்டுபாவைநல்லார்கள்
வருமணங்கூட்டிமணஞ்செயநல்லூர்ப்
பெருமனத்தான்பெண்ணோர்பாகங்கொண்டானே. 2

அன்புறுசிந்தையராகியடியவர்
நன்புறுநல்லூர்ப்பெருமணமேவிநின்
றின்புறுமெந்தையிணையடியேற்றுவார்
துன்புறுவாரல்லர்தொண்டுசெய்வாரே. 3

வல்லியந்தோலுடையார்ப்பதுபோர்ப்பது
சொல்லியல்வேழத்துரிவிரிகோவண
நல்லியலார்தொழுநல்லூர்ப்பெருமணம்
புல்கியவாழ்க்கையெம்புண்ணியனார்க்கே. 4

ஏறுகந்தீரிடுகாட்டெரியாடிவெண்
ணீறுகந்தீர்நிரையார்விரிதேன்கொன்றை
நாறுகந்தீர்திருநல்லூர்ப்பெருமணம்
வேறுகந்தீருமைகூறுகந்தீரே. 5

சிட்டப்பட்டார்க்கெளியான்செங்கண்வேட்டுவப்
பட்டங்கட்டுஞ்சென்னியான்பதியாவது
நட்டக்கொட்டாற்றுநல்லூர்ப்பெருமணத்
திட்டப்பட்டாலொத்தீராலெம்பிரானீரே. 6

மேகத்தகண்டனெண்டோளன்வெண்ணீற்றுமை
பாகத்தான்பாய்புலித்தோலொடிந்தித்த

நாகத்தானல்லூர்ப்பெருமணத்தானல்ல
போகத்தன்யோகத்தையேபுரிந்தானே. 7

தக்கிருந்தீரென்றுதாளாலரக்கனை
புக்கிருந்தொல்கவுயர்வரைக்கீழிட்டு
நக்கிருந்தீரென்றுநல்லூர்ப்பெருமணம்
புக்கிருந்தீரெமைப்போக்கருளீரே. 8

ஏனுந்தண்டாமரையானுமியல்புடை
மாலுந்தம்மாண்பறிகின்றலார்மாமறை
நாலுந்தம்மாட்டென்நல்லூர்ப்பெருமணம்
போலுந்தங்கோயில்புரிசடையார்க்கே. 9

ஆதரமணொடுசாக்கியர்தாஞ்சொல்லும்
பேதமைகெட்டுப்பிணக்குறுவீர்வம்மின்
நாதனைநல்லூர்ப்பெருமணமேவிய
வேதனதாடொழவீடெளிதாமே. 10

நறும்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன்
பெரும்பதநல்லூர்ப்பெருமணத்தானை
யுறும்பொருளாற்சொன்னவொண்டமிழ்வல்லார்க்
கறும்பழிபாவமவலமிலரே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-சிவலோகத்தியாகேசர்,
தேவியார்-நங்கையுமைநாயகி.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவடிகளே சரணம்.

உ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாறு

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரில் வேளாள குலத்தினராகிய புகழனாருக்கு அவர் மனைவி மாதினியார் வயிற்றில் திலகவதியார் பிறந்தபின் மருணீக்கியாரென்று திருநாமத்தோடு நாயனார் பிறந்து கலைபயின்று வளருநாளில் திலகவதியாருக்குப் பன்னிரண்டுவயது செல்ல சோழ ராஜனிடத்தில் சேனாதிபதியாகிய கலிப்பகை நாயனாருக்கு விவாகம் செய்யும்பொருட்டுச் சில முதியோர் வந்து திலகவதியாரைக் கொடுக்கும்படிபேச புகழனார் சம்மதித்தனர். கலிப்பகையாரும் விவாகத்திற்கு யத்தனமாயிருக்கையில், அரசனேவ கலிப்பகையார் சேனையுடன் வடதேசப் பகை மன்னருடன் போருக்குச் சென்று நெடுநாள் போர்செய்து கொண்டிருந்தனர். அவ்விதமிருக்க புகழனார் சுவர்க்கஞ் சேர்ந்தனர். புருடனைப்பிரிந்து வாழ மனமொவ்வாது மாதினியாரும் இறந்தனர். மக்களிருவரும் அளவிலாத துயரமடைந்து பின்பு பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடனை மருணீக்கியார் செய்தனர்.

போர்விளைத்துக்கொண்டிருந்த கலிப்பகையாரும் வீர சுவர்க்கமெய்தினர். இதனைத் திலகவதியார் கேள்வியுற்று அவருக்கு என்னைக் கொடுப்பதாய் என் தந்தை வாக்களித்திருந்ததால், எனதுயிரை அவருடன் சேர்ப்பேனென்று

துணிய மருணீக்கியார் தான் முந்தி உயிர் விடுவதாய்ப் புலம்ப, அதனைக் கண்ட திலதவதியார் தம்மிடத்துள்ள அன்பால் உயிர் தாங்கித் தவமுள்ளவராயிருந்தனர்.

அவரவ்விதமிருக்க மருணீக்கியார் முத்திநெறி யறியக்கருதி, சமயசாஸ்திரங்களை யாராயத் தொடங்கி, சமண சமயத்தைச் சார்ந்து, சாஸ்திரங்களை யாராய்ந்து அவர்களில் மேம்பாடெய்தித் தருமசேனரென்னும் பெயரும் பெற்றிருந்தனர்: திலதவதியார் திலதவதிகை வீரட்டானத்தைச் சேர்ந்து சிவ சின்னந் தரித்து ஆலயத்தொண்டு செய்திருக்கையில் வீரட்டானேஸ்வரரைவணங்கி, ஐயனே என்னுடன் பிறந்தானைப் பரசமயப் படுகுழியினின்று மெடுத்தாட்கொள்ள வேண்டுமென்று பலமுறையும் விண்ணப்பஞ்செய்ய ஒருநாள் சொப்பனத்திற் றோன்றி உமது தம்பி முன்னம் வாகீசனென்னும் முனிவன் ஒரு காரணத்தா லிங்குற்பவமாயினன்; அவனுக்குச சூலைநோயுண்டாக்கி யாட்கொள்கின்றோ மென்றருளினர். அவ்வண்ணமே தருமசேனர் வயிற்றில் சூலைநோயுண்டாக்கிவருத்த, அதனைத் தாளாமல் வருத்தித்தான் சமண சமயத்தில்கற்க மந்திரங்களாற்றடுத்தும்,இதர சமணர்கள் அவர்களாலான மட்டும் பார்த்தும் வியாதி அதிகரிக்கக்கண்டு நடுங்கி தமக்கைக்கு சொல்லியனுப்பினார். யானங்கே வாரேனென்று தமக்கையார் சொல்லியனுப்பிய பதிலைக்கேட்டு அன்றிரவு பிறருக்குத் தெரியாமல் தமக்கையாரிடஞ் சென்றுவணங்கி சூலைநோய் தீரும்படி அநுக்கிரகஞ் செய்யும்படி புலம்பினர். அதைக்கண்ணுற்ற மனஞ்சகியாராய் இதுவீரட்டானேஸ்வரர் திருவருளால் நேர்ந்ததாகலின் அவரைத் தொழுது பணிசெய்யென்று சொல்லி,விபூதி கொடுத்துத்

தரித்துக்கொள்ளச் சொல்லி திருப்பள்ளியெழுச்சி காலத்தில் தம்பியை ஆலயத்திற்கு அழைத்துப் போயினூர் மருணீக்கியார் ஆலயத்தை வலஞ்செய்து வணங்கி சுவாமியினது திருவருளால் திருப்பதிகமோதும்படி புணர்ச்சியுண்டாக, 'கூற்றுயினவாறுவிலக்ககிலீ' ரென்னுந் திருப்பதிக மோதினூர். உடனே வியாதிதீர ஈசனது திருவருளை நினைந் தானந்த பரவச முற்றிருக்கும்போது நீ திருப்பதிக மோதினமையால், திருநாவுக்கரசனென்று உனக்குப் பெயருண்டாருக என்று சுவாமி அசரீரி வாக்கருள் செய்ய அதைக்கேட்டு மகிழ்ந்து அன்றுமுதல் சிவசின்னந் தரித்துத் துதிருபமாகிய கவசமும், உழவாரப் பணியு முடையராயினூர்.

இதனைப்பாடலிபுரத்தி லிருக்கின்ற சமணர்களறிந்து அரசனுடன் சென்று தருமசேனரது தமக்கை சடையான் சமயத்தி லிருப்பதால் தாமுமங்கே போய்ச் சேரக் கருதி, சூலைநோயுற்றதாயும், அது நஞ்சமய மந்திரமுதலியவற்றால் தீரவில்லையென்றும் பாசாங்கு செய்து தமக்கையிடம் போய்ச்சேர்ந்தன ரென்றூர்கள். அரசன் கோபங்கொண்டு தருமசேனரை யழைத்து வரும்படி மந்திரிகளுக்கு உத்தரவளித்தான். அவர்கள் அவ்வாறே போய் அழைக்க நாயனூர், 'நாமார்க்குங் குடியல்லோ' மென்னுந் திருத்தாண்டகம்பாட, மந்திரிக ளவரை வணங்கிப் பிரார்த்திக்க. அவர்களுடன் சென்றூர், அரசன் வெகுண்டு சமணரது தீர்மானப்படி சுண்ணும்புக்காளவாயிலிட்டான். நாயனூர், 'மாசில் வீணையு மாலைமதியமு' மென்னும் பதிகமோதி சுவாமியைத் தியானித்துக்கொண் டிருந்தால் வெப்பமில்லா திருந்தது. ஏழாநாள் சமணர் காளவாயைத் திறந்து

பார்க்க; நாயனார், சுகமாயிருக்கக் கண்டு பிரமித்து மீண்டும் பாலுடன் விஷங்கலந்துகொடுக்க, அதையுமுண்டனர். பின்பு கொல்லும்படி யானையைத் தூண்ட, ('சுண்ணவெண் சந்தனச்சாந்து' வென்னும் பதிகமோத, யானை நாயனாரை வணங்கி, பாகரையும் சூழ்ந்த சமணர்களையும் கொன்று சென்றது. அப்பால் கொலைஞரைக் கொண்டு கற்றூணில் பிணித்து நடுக்கடலில் வீழ்த்தினார்கள். நாயனார் சுவாமியைத் தியானித்து, 'சொற்றுணை வேதிய' னென்னும் பதிகமோத, கட்டுகளவிழ்ந்து தூண் தெப்பமாக அதின் மேலிருந்து பதிகமுற்று மோதி கெடிலநதிக்கரை சேர்ந்து திருப்பாதிரிப்புலியூர் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்து திருவதிகை வீரட்டானத்தைச் சேர்ந்து திருத்தொண்டு புரிந்து வந்தனர். நாயனாரது உண்மையைப் பல்லவராஜனறிந்து சமணரது மடம் ஆலய முதலியவற்றை யிடிப்பித்துச் சைவனாகி குணதாவிச்சரமென்னும் ஒரு சிவாலயமு மேற்படுத்தினான்.

பின்பு நாயனார் திருத்தூங்கானைமாடத்துக் கெழுந்தருளி சுவாமியைத் தரிசித்து, ஐயனே! சமண சமயத்திலிருந்த விவ்வுடலைத் தாங்கி வருகின்றேன்; ஆதலின் தேவரீருடைய முத்திரையை யடியேற்குத் தரித்தருள வேண்டுமென்று பதிகமோத, பரமசிவன் திருவருளாலொருபூதம் வந்து சூலத்துடன் விடையில் அச்சினையைத் தமது தோள்களிற்றரிக்க மகிழ்ந்து சீகாழிக்கெழுந்தருள திருஞானசம்பந்த மூர்த்தியானவர் எதிர்கொள்ளக் கண்டு வணங்கி அடியேனென் றெழுந்து சுவாமியைத் தரிசித்து திருச்சத்திமுற்றத்தில் சுவாமியைப்பணிந்து, 'கூற்றுவன்

வருமுன்ன மடியேன் முடியிற் றிருவடி சூட்டல் வேண்டு
மென்று பதிகமோத, திருநல்லூருக்கு வாவென்று சுவாமி
யருள, அவ்விதமேசென்று ஆலயத்தில் சாஷ்டாங்கமாகப்
பணியும்போது சுவாமி திருவடி சூட்ட தாண்டக மோதித்
தொழுது மற்ற ஸ்தலங்களையும் தரிசித்து திங்களூரைச்
சார்ந்து அப்பூதியடிக ணாயனாருக்குத் தம்மிடத்திலுள்ள
அன்பை மகிழ்ந்து அவர் மாளிகையில் அமுதுகொள்ளச்
சம்மதித்தனர் அவரது மனைவியார் மூத்த திருநாவுக்
கரசென்னும் புத்திரனை இலைகொணர வனுப்ப, அவன்
போய் இலைகொணர்ந்து தாயிடந் தந்து உயிர் நீங்கினன்.
பெற்றோர் கண்டு விஷந் தீண்டிற் றென்று குறிப்பா
லறிந்து, இறந்த மகனை மறைத்து நாயனாருக் கமுது
படைக்க முயற்சிக்கும்போது புத்திரசோகத்தை நாயனா
ரறிந்து பதிகமோதிப் பிழைக்கச் செய்து அப்பூதியடிக
ளுடன் அமுதுகொண்டு திருவாரூர் முதலிய ஸ்தலங்
களைத் தரிசித்துத் திருப்புகலூருக் கெழுந்தருளுகையில்
திருஞானசம்பந்த மூர்த்தியானவர் எதிர்கொள்ள அவரை
வணங்கி சுவாமியைத் தரிசித்து முருகநாயனார் திருமடத்
திற் றங்கியிருந்தனர். திருஞானசம்பந்த மூர்த்தியார் திரு
வாரூருக்குச்சென்று மீண்டும் திருப்புகலூருக்கு வந்தனர.

அப்பாலிருவருந் திருவீழிமிழலைக்குச் சென்று பரம
சிவன் தந்த படிக்காசால் பஞ்சத்தை நீக்கி, திருமறைக்
காட்டை யணுகி வேதம் பூசித்து மூடிப்போன கதவைத்
திறப்பித்துச் சம்பந்தமூர்த்தியாரை விட்டுப் பிரிந்து வட
தளியென்னு மாலயத்திற்குச சென்று சிவலிங்கப் பெரு
மானைச் சமணர்கள் மறைத்திருத்தலைக் கண்டு அரசனைக்

கொண்டு வர்த்தித்து திருப்பஞ்சலியை நோக்கி செல்லு மார்க்கத்திலே நாயனார் பசியால் வருந்தி வருவதை யறிந்து சிவபெருமானொரு சோலையையும் குளத்தையு முண்டாக்கி பிராமணருருவத்தோடு பொதிசோறு வைத்துக்கொண்டிருந்து நாயனருக்குக் கொடுக்க, அதனை யுண்டு குளத்தில் ஜலமருந்தி களை நீங்கிச் சென்றார். சுவாமியும் அவருடன் சென்று திருப்பஞ்சலியைச் சமீபித்தவுடன் மறைந்தருளினர். நாயனார் அதுகண்டு திருவருளை வியந்து ஆலயஞ் சென்று தரிசித்துச் சோழநாட்டைக் கடந்து நடுநாட்டிலுள்ள ஸ்தலங்களைத் தரிசித்து திருக்காளத்திக் கெழுந்தருளினர்.

அங்கு சுவாமியைத் தரிசிக்கும்போது தோன்றிய குறிப்பால் ஸ்ரீ கைலாயபதியைத் தரிசிக்க விரும்பி காசியடைந்து விஸ்வநாதரைத் தரிசித்துப் பரிஜனங்களை நிறுத்தி ஆகாரமின்றித் தனியே காடு மலை கடந்து, பாலைவனத்தில் போகும்போது அக்நிவெப்பத்தாற் கால் பாட்டளவுந் தேய கைகளை யூன்றிச் செல்ல, மணிக்கட்டளவுந் தேய, மார்பினு லூந்திச்சென்று மார்புந் தேயவே, புரண்டு புரண்டுசென்று சத்தியில்லா தோய்ந்து பிரக்ஞை தப்பி யிருந்தனர். பரமசிவன் திருவுள மிரங்கி பிராமண முனிவராக வந்து இவ்விதம் வருந்தி வருவானேனென்று வினவ, கைலாய தரிசனத்திற் கென்றுரைக்கக் கேட்டு மனிதர் தரிசிக்கக் கூடுமோவென, எவ்விதமும் கைலாய தரிசனஞ் செய்தாலன்றி மீளேனென்றனர். பரமசிவன் அவ்வுறுதியை யறிந்து மறைந்து திருநாவுக்கரசே எழுந்திருவென்று அசரீரி வாக்கருள உடனே நாய

ஞர் தேகம் பழுதின்றி விளங்கக்கண்டு உணர்ச்சிபெற்று ஆண்டவனே! அடியேனுக்கு ஸ்ரீ கைலாய தரிசனம் கடாக்ஷித்தருளல் வேண்டுமெனத் துதிசெய்தனர். சுவாமி நூதனமா யுண்டாக்கிய குளத்தைக்காட்டி அதில் மூழ்கி திருவையாற்றில் வந்து கைலாய தரிசனம் காணக்கடவை யென்று மீண்டும் அசரீரி வாக்கருள, அவ்வாறே திருவை யாற்றுத் தீர்த்தக்கரையிலெழுந்தருளி சந்நிதிக்குச்சென்று பார்வதி சமேதராய்க் கணங்கள் முனிவர்கள் தேவர்கள் புடைசூழக் கைலாய தரிசனங்கண்டு பதிகங்க ளோதினர்.

பின்பு கைலாயத் தோற்றமாறி ஆலயமாய் இருக்கக் கண்டு வருத்தம் கொண்டு, ஒருவாறு தெளிந்து திருப்பூந் துருத்திக்குச் சென்று மடமொன்று ஏற்படுத்தி அதில் வீற்றிருக்கும்போது திருஞானசம்பந்த மூர்த்தியார் வரு வதை யறிந்து எதிர்சென்று அவரெழுந்தருளுஞ் சிவிகை யைத் தமது தோள் கொடுத்துத் தாங்கினர். திருப்பூந் துருத்திக்கு மிகச் சமீபித்தவுடன் அப்ப ரெங்கு வருகிறீ ரென்று சம்பந்தமூர்த்தியார் வினவ, அடியேன் தேவரீ ரைத் தாங்கிவரும் பெருவாழ்வைப் பெற்றிங்குற்றே னென்று அப்பரருளினர். உடனே சம்பந்தர் சிவிகையை விட்டிழிந்து பணிய அதற்கு முன்னமே அப்பர் பணிந்த தை அடியார்கள் கண்டு இருவரையும் பணிந்து மகிழ்ந்தார் கள். பிறகு இருவரும் ஆலயஞ்சென்று சுவாமியைத் தரி சித்து, மடத்திலெழுந்தருளியிருக்கையில், சம்பந்தமூர்த்தி யார் தாம் மதுரைக்குச் சென்றதும், சமணரை வென்ற தும், பாண்டியன் கூன் நிமிர்த்ததும் சொல்லி யருளினர். அப்பர் தொண்டை நாட்டிற்குத் தாம் சென்றதும், அங்

குள்ள ஸ்தலங்களை தரிசித்ததும் சொல்லினர். பிறகு அப்பர் மதுரைக்குச் சென்று, சொக்கரைத் தரிசித்துபாண்டி நாட்டிலுள்ள ஸ்தலங்களை யெல்லாந் தரிசித்து, திருப்புகலூரிற் சேர்ந்து உழவாரப் பணி செய்து கொண்டிருக்கு நாளில் செதுக்குமிடமெல்லாம் பொன், நவரத்தினங்களும் உண்டாகும்படி பரமசிவன் செய்தருள, அவைகளை யோடுகளாக மதித்துப் பொய்கையிலெறிந்து விட்டார். பின்னும் இவரை மயக்கும்படி அரம்பாஸ்திரீகளை யனுப்ப அவர்கள் வந்து லாலனஞ் செய்ய, 'உம்மாலிங்கு குறையையேனோ' வென்னுந் தாண்டக மோதினார். தம்மாலியலாவென்று திரும்பினார்கள். கடைசியாக, 'எண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனோ' வென்னுந் தாண்டக மோதி சிவபெருமான் திருவடி யடைந்தார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாறு

முற்றிற்று

திருநாவுக்கரசு சுவாமிகள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த-

தேவாரப்பதிகங்கள்

திருவதிகை வீரட்டானம்-பண்-கொல்லி

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறு விலக்ககிலீர்கொடுமைபல செய்தன நானறியே, னேற்றாயடிக்கே யிரவும்பகலும் பிரியாது வணங்குவ னெப்பொழுதுந், தோற்றாதென்வயிற்றி னகம் படியே குடரோடு துடக்கி முடக்கியிட, வாற்றேனடியே னதிகைக் கெடில வீரட்டானத்துறை யம்மானே. 1

நெஞ்சமுமக்கே யிடமாகவைத்தே னினையாதொரு போது மிருந்தறியேன், வஞ்சம்மிதுவொப்பது கண்டறி யேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட, நஞ்சாகி வந் தென்னை நலிவதனை நணுகாமற் றுரந்துகரந்துமிடீ, ரஞ் சேலு மென்னீ ரதிகைக்கெடில வீரட்டானத்துறை யம் மானே. 2

பணிந்தா ரனபாவங்கள் பாற்றவல்லீர் படுவெண்டலை யிற் பலிகொண்டுழல்வீர், துணிந்தே யுமக்காட்செய்து வாழலுற்றார் சுடுகின்றது சூலைதவிர்த்தருளீர், பிணிந்தார் பொடிகொண்டுமெய் பூசவல்லீர்பெற்ற மேற்றுகந் தீர் சுற்றும் வெண்டலைகொண், டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில வீரட்டானத் துறையம்மானே. 3

முன்னமடியே னறியாமையினான் முனிந்தென்னை நலிந்துமுடக்கியிடப், பின்னையடியேனு மக்காளும்பட் டேன் சுடுகின்றதுசூலை தவிர்த்தருளீர், தன்னையடைந் தார் வினை தீர்ப்பதன்றோ தலையாயவர்தங் கடனாவதுதா, னன்னநடையா ரதிகைக்கெடில வீரட்டானத்துறை யம் மானே. 4

காத்தாள் பவர்காவ லிகழ்ந்தமையாற் கரைநின்றவர் கண்டுகொளென்றுசொல்லி, நீத்தாயகம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும் வழித்துறையொன்றறியேன், வார்த்தை யிதுவொப்பது கேட்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட, வார்த்தார் புனலா ரதிகைக்கெடில வீரட்டா னத்துறை யம்மானே. 5

சலம்பூவொடுதூப மறந்தறியேன் தமிழோடிசை பாடன் மறந்தறியே, னலந்தீங்கிலுமுன்னை மறந்தறியே னுன்னாம மென்னாவின் மறந்தறியே, னுலந்தார்தலையிற் பலிகொண்டுழல்வா, யுடலுள்ளுறுசூலை தவிர்த்தருளா, யலந்தேனடியே னதிகைக்கெடில வீரட்டானத்துறை யம்மானே. 6

உயர்ந்தேன் மனைவாழ்க்கையு மொண்பொருளு மொருவர்தலைகாவ லிலாமையினால், வயந்தே யுமக்காட் செய்து வாழலுற்றால் வலிக்கின்றது சூலைதவிர்த்தருளீர், பயந்தே யென்வயிற்றி னகம்படியே பறித்துப் புரட்டி யறுத்தீர்த் திடநா, னயர்ந்தேனடியே னதிகைக்கெடில வீரட்டானத்துறை யம்மானே. 7

வலித்தேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன் வஞ்சம் மனமொன்றுமி லாமையினாற், சலித்தா லொருவர்துணை யாருமில்லைச் சங்கவெண் குழைக்காதுடை யெம்பெரு

மான், கலித்தேயென்வயிற்றி னகம்படியேகலக்கி மலக்
கிட்டுக் கவர்ந்துதின்ன, லலுத்தேனடியே னதிகைக்
கெடில வீரட்டானத்துறை யம்மானே. 8

பொன்போல மிளிர்வதோர் மேனியினீர் புரிபுன்
சடையீர் மெலியும்பிறையீர், துன்பேகவலை பிணியென்
றிவற்றை நணுகாமற்றுரந்து கரந்துமிடு, மென்போலிக
ளும்மையினித் தெரியாரடியார்படுவதிதுவேயாகி, லன்பே
யமையு மதிகைக்கெடில வீரட்டானத்துறை யம்மானே.

போர்த்தாயங் கோராவனையி னீருரிதோல்புறங் காட
ரங்காநடமாடவல்லா, யார்த்தானரக் கன்றனை மால்வரைக்
கீழடர்த்திட்டருள் செய்தவதுகருதாய், வேர்த்தும் புரண்
டும் விழுந்து மெழுந்தா லென்வேதனை யானவிலக்கியிடா,
யார்த்தார்புனல் சூழதிகைக்கொடில வீரட்டானத்துறை
யம்மானே.

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர்-வீரட்டானேசுரர், தேவியார்-திருவதிகை
நாயகி இப்பதிகம் சூலைநோய்தீர ஓதியருளியது.

திருவையாறு-பண்-பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்.

விடகிலடிநாயேன்வேண்டியக்காலியாதொன்று
மிடகிலேமணர்கண்மறவுரைக்கேட்டலமந்தேன்
றொடர்கின்றேனுன்னுடையதூமலர்ச்சேவடிகாண்பா
னுடைகின்றேனையாறற்காளாய்நானுய்ந்தேனே. 1

சம்பவளந்திருவுந்திகழ்சோதிக்குழைக்காதர்
கம்பமருங்கொடிமருங்கிற்கோல்வளையாளொருபாகம்

வம்பழுவிமலர்க்கொன்றைவளர்சடைமேல்வைத்துகந்த
அம்பளஐயாறற்காளாய்நானுய்ந்தேனே. 2

கணியானேசேயானேநம்பனேசெம்பொன்னின்
றுணியானேதோளானேசுண்ணவெண்ணீற்றானே
மணியானேவானவர்க்குமருந்தாகிப்பிணிதீர்க்கும்
அணியானைஐயாறற்காளாய்நானுய்ந்தேனே. 3

ஊழித்தீயாய்நின்றாயள்குவாருள்ளத்தாய்
வாழித்தீயாய்நின்றாய்வாழ்த்துவார்வாயானே
பாழித்தீயாய்நின்றாய்படர்சடைமேற்பனிமதிய
மாழித்தீஐயாறற்காளாய்நானுய்ந்தேனே. 4

சடையானேசடையிடையேதவழுந்தண்மதியானே
விடையானேவிடையேறிப்புரமெரித்தவித்தகனே
யுடையானேயுடைதலைகொண்டூரன்பலிக்குழலு
மடையானைஐயாறற்காளாய்நானுய்ந்தேனே. 5

நீரானேதீயானேநெதியானேகெதியானே
யூரானேயுலகானேயுடலானேயுயிரானே
பேரானேபிறைசூடிப்பிணிதீர்க்கும்பெருமானென்
றூரானைஐயாறற்காளாய்நானுய்ந்தேனே. 6

கண்ணானாய்மணியானாய்கருத்தானாய்அருத்தானா
யெண்ணானாயெழுத்தானாயெழுத்தினுக்கோரியல்பானாய்
விண்ணானாய்விண்ணிடையேபுரமெரித்தவேதியனே
வண்ணனைஐயாறற்காளாய்நானுய்ந்தேனே. 7

மின்னானாயுருவானாய்வேதத்தின்பொருளானாய்
பொன்னானாய்மணியானாய்பொருகடல்வாய்முத்தனாய்

யன்னாரிருவருக்குக்காண்பரியதிமிர்சோதி
நின்றானையையாறற்கானாய்நானுய்ந்தேனே. 8

முத்திறையும்புனற்பொன்னிமொய்பவளங்கொழித்துந்தப்
பத்தர்பலர்நீர்மூழ்கிப்பலகாலும்பணிந்தேத்த
மெத்திசையும்வானவர்களெம்பெருமானெனவிறைஞ்சும்
அத்திசையாமையாறற்காளாய்நானுய்ந்தேனே. 9

கருவரைசூழ்கடலிலங்கைக்கோமானைக்கருத்தழியத்
திருவிரலாலுதகரணஞ்செய்துகந்தசிவமூர்த்தி
பெருவுரைசூழ்வையகத்தார்பேர்நந்தியென்றேத்தும்
அருவரைசூழையாறற்காளாய்நானுய்ந்தேனே. 10

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு-பண்-காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மாதர்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 1

போழிளங்கண்ணியினானைப்பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்போற்றியென்றேத்திவட்டமிட்டாடவருவேன்
னாழிவலவனின்றேத்துமையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக்குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 2

எரிப்பிறைக்கண்ணியினானையேந்தியாளொடும்பாடி
முரித்தவியலங்களிட்டுமுகமலர்ந்தாடாவருவே

னரித்தொழுகுவெள்ளருவியையாறடைகின்றபோது
வரிக்குயில்பேடையோடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 3

பிறையிளங்கண்ணியினானைபெய்வளையாளொடும்பாடித்
துறையிடம்பன்மலர்தூவித்தோளைக்குளிரத்தொழுவேன்
னழையிளம்பூங்குயிலாலுமையாறடைகின்றபோது
சிறையிளம்பேடையோடாடிச்சேவல்வருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 4

ஏடுமதிக்கண்ணியானையேந்திழையாளொடும்பாடிக்
காடொடுநாடுமலையுங்கைதொழுதாடாவருவே
னாடமலர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
பேடைமயிலொடுங்கூடிப்பிணைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 5

தண்மதிக்கண்ணியினானைத்தையனல்லாளொ டும்பாடி
யுண்மெலிச்சிந்தையனாகியுணராவுருகவருவே
னண்ணமலர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
வண்ணப்பகன்றிலொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன் 6

கடியமதிக்கண்ணியினானைக்காரிகையாளொடும்பாடி
வடிவொடுவண்ணமிரண்டும்வாய்வேண்டுவசொல்லிவாழ்வே
னடியினையார்க்கங்கழலானையாறடைகின்றபோது
விடிகுரலன்னதோரேனமிசைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 7

விரும்புமதிக்கண்ணியானைமெல்லியலாளொடும்பாடிப்
பெரும்புலர்காலையெழுந்துபெருமலர்கொய்யாவருவே

னருங்கலம்பொன்மணியுந்துறையாறடைகின்றபோது
கருங்கலைபேடையொடாடிக்கலந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 8

முற்றற்பிறைக்கண்ணியானைமொய்குழலாளொடும்பாடிப்
பற்றிக்கயிற்றுகில்லேன்பாடியுமாடாவருவே
னற்றருள்பெற்றுநின்றாரோடையாறடைகின்றபோது
நற்றுணைப்பேடையோடாடநாரைவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 9

திங்கள்மதிக்கண்ணியானைதேன்மொழியாளொடும்பாடி
யெங்கருணல்குங்கொலெந்தையெனக்கினியென்றுவரு
னங்கிளமங்கையராடுமையாறடைகின்றபோது [வே
பைங்கிளிபேடையோடாடிப்பறந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 10

வளர்மதிக்கண்ணியினானைவார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததோர்காலங்காண்பான்கடைக்கணிக்கின்றே
னளவுபடாததொரன்போடையாறடைகின்றபோது
விளமணிநாகுதழுவியேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-செம்பொற் சோதீசுவரர். தேவியார்-
அறம்வளர்த்தநாயகி.

இது இந்தத் தலத்திலிருக்கும் ஆலயமே கயிலாயமாகச்
சுவாமி தரிசனங் கட்டளையிட்டபோது
ஓதி அருளிய பதிகம்.

திருப்பழனம்-பண்-பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

சொன்மாலைபயில்கின்றகுயிலினங்காள்சொல்லீரே
பன்மாலைவரிவண்டுபண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கண்முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென்புதுநலமுண்டிகழ்வானோ. 1

கண்டகங்காண்முண்டகங்காள்கைதைகாணெய்தல்காள்
பண்டரங்கவேடத்தான்பாட்டோவாப்பழனத்தான்
வண்டுலார்தடமூழ்கிமற்றவனென்றளிர்வண்ணம்
கொண்டநாள்தானறிவான் குறிக்கொள்ளாதொழிவானோ.

மனைக்காஞ்சியிளங்குருகேமறந்தாயோமதமுகத்த
பனைக்கைம்மாவுரிபோர்த்தான்பலர்பாடும்பழனத்தான்
நினைக்கின்றநினைப்பெல்லாமுரையாயோநிகழ்வண்டே
சுனைக்குவளைமலர்க்கண்ணாள்சொற்றூதாய்ச்சோர்வானோ

புதியையாயினியையாம்பூந்தென்றால்புறங்காடு
பதியாவதிதுவென்றுபலர்பாடும்பழனத்தான்
மதியாதார்வேள்விதனைமதித்திட்டமதிகங்கை
விதியாளனென்னுயிர்மேல்விளையாடல்விடுத்தானோ. 4

மண்பொருந்திவாழ்பவருக்குமாதீர்த்தவேதியர்க்கும்
விண்பொருந்துதேவர்க்கும்வீடுபேறாய்நின்றானைப்
பண்பொருந்தவிசைபாடும்பழனஞ்சேரப்பனையென்
கண்பொருந்தும்போழ்தத்துங்கைவிடநான்கடவேனோ. 5

பொங்கோதமால்கடலிற்புறம்போயிரைதேடுஞ்
செங்கால்வெண்மடநாராய்செயற்படுவதறியேனே

அங்கோலவளைகவர்ந்தானணிபொழில்சூழ்பழனத்தான்
தங்கோலநறுங்கொன்றைத்தாரருளாதொழிவானோ. 6

துணையாருமுயங்கிப்போய்துறைசேருமடநாராய்
பணையாரவாரத்தான்பட்டோவாப்பழனத்தான்
கணையாரவிருவிசும்பிற்கடியாணம்பொடிசெய்த
இணையாரமார்பனென்னெழினலமுண்டிகழ்வானோ. 7

கூவைவாய்மணிவரன்றிக்கொழித்தோடுங்காவிரிப்பூம்
பாவைவாய்முத்திலங்கப்பாய்ந்தாடும்பழனத்தான் [டைப்
கோவைவாய்மலைமகள்கோன்கொல்லேற்றின்கொடியா
பூவைகாண்மழலைகாள்போகாதபொழுதளவே. 8

புள்ளிமான்பொறியரவம்புள்ளுயர்த்தான்மணிநாகப்
பள்ளியான்றொழுதேத்தவிருக்கின்றபழனத்தான்
உள்ளுவார்வினைதீர்க்குமென்றுரைப்பருலகெல்லாம்
கள்ளியேனானிவர்க்கென்கனவளையுங்கடவேனோ. 9

வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம்பரந்தார்க்கும்பழனத்தான்
அஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்பும்அப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கொடியையே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-ஆப்தசகாயர், தேவியார்-பெரியநாயகியம்மை

விடந்தீர்த்ததிருப்பதிகம்-பண்-இந்தளம்

திருச்சிற்றம்பலம்

ஒன்றுகொலாமவர்சிந்தையரிவரை
யொன்றுகொலாமுயருமதிசூடுவ

றொன்றுகொலாமிடுவெண்டலைகையது
வொன்றுகொலாமவரூர்தானே. 1

இரண்டுகொலாமிமையோர்தொழுபாத
மிரண்டுகொலாமிலங்குழைபெண்ணா
ணிரண்டுகொலாமுருவஞ்சிறுமான்மழு
விரண்டுகொலாமவரெய்தினதாமே. 2

மூன்றுகொலாமவர்கண்ணுதலாவன
மூன்றுகொலாதவர்சூலத்தின்மொய்யிலை
மூன்றுகொலாங்கணைகையதுவிண்ணான்
மூன்றுகொலாம்புரமெய்தனர்தாமே. 3

நாலுகொலாமவர்தம்முகமாவன
நாலுகொலாஞ்சனனம்முதற்றோற்றமு
நாலுகொலாமவரூர்தியின்பாதங்க
ணாலுகொலாமறைபாடினதாமே. 4

அஞ்சுகொலாமவராடரவின்பட
மஞ்சுகொலாமவர்வெல்புலனாவன
வஞ்சுகொலாமவர்காயப்பட்டான்கணை
யஞ்சுகொலாமவராடினதாமே. 5

ஆறுகொலாமவரங்கம்படைத்தன
வாறுகொலாமவர்தம்மகனார்முக
வாறுகொலாமவர்தார்மிசைவண்டின்கா
லாறுகொலாஞ்சுவையாக்கினதாமே 6

ஏழுகொலாமவரூழிபடைத்தன
வேழுகொலாமவர்கண்டவிருங்கட
லேழுகொலாமவராளுலகங்க
ளேழுகொலாமிசையாக்கினர்தாமே. 7

எட்டுக்கொலாமவரீறில்பெருங்குண
மெட்டுக்கொலாமவர்சூடுமினமல
ரெட்டுக்கொலாமவர்தோளிணையாவன
வெட்டுக்கொலாந்திசையாக்கினர்தாமே. 8

ஒன்பதுபோலவர்வாசல்வகுத்தன
ரொன்பதுபோலவர்மார்பினூலிழை
யொன்பதுபோலவர்கோலக்குழற்சடை
யொன்பதுபோலவர்பாரிடந்தானே. 9

பத்துக்கொலாமவர்பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துக்கொலாமெயிறுந்தெரிந்துக்கன
பத்துக்கொலாமவர்காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடியார்செய்கையானே. 10

திருச்சிற்றம்பலம்.

இது அப்பூதிநாயனார் புத்திரரைத்தீண்டிய விஷம் நீங்கும்படி அருளிச்செய்தது.

நமச்சிவாயப்பதிகம்-பண்-காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே. 1

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கலமரனஞ்சாடுதல்

கோவினுக்கருங்கலங்கோட்டமில்லது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே. 2

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவையொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே. 3

இடுக்கண்பட்டிருக்கினுமிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்றுவினவுவோமல்லோ
மடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினாமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பதுநமசிவாயவே. 4

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி
நங்களுக்கருங்கலநமசிவாயவே. 5

சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கல்லா
னலமிலனாடொறுநல்குவானலன்
குலமிலராகினுங்குலத்திற்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பதுநமச்சிவாயவே. 6

வீடினாருலகினில்விழுமியதொண்டர்
கூடினார்நெறிகூடச்சென்றலு
மோடினேனோடிச்சென்றுருவங்காண்டலு
நாடினேனாடிற்றுநமச்சிவாயவே. 7

இல்லகவிளக்கதுவிருள்கெடுப்பது
சொல்லகவிளக்கதுசோதியுள்ளது
பல்லகவிளக்கதுபலருங்காண்பது
நல்லகவிளக்கதுநமச்சிவாயவே. 8

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன்
றன்னெறியேசரணாதறிண்ணமே
யன்னெறியேசென்றங்கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவதுநமச்சிவாயவே. 9

மாப்பிணைதழுவியமாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே. 10

திருச்சிற்றம்பலம்.

இது சமணர்கள் கற்றூணிற்கட்டிக் கடலிலே வீழ்த்தினபோது ஓதியருளியது.

திருமறைக்காடு-திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. 1

ஈண்டுசெஞ்சடையாகத்துளீசரோ
மூண்டகார்முகிலின்முறிக்கண்டரோ
வாண்டுகொண்டநீரேயருள்செய்திடும்
நீண்டமாக்கதவின்வலிநீக்குமே. 2

அட்டமூர்த்தியதாகியவப்பரோ
துட்டவான்புரஞ்சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டியசென்னிப்பரமரோ
சட்டவிக்கதவந்திறப்பிம்மினே. 3

அரியநான்மறையோதியநாவரோ
பெரியவான்புரஞ்சுட்டசுவண்டரோ
விரிகொள்கோவணவாடைவிருத்தரோ
பெரியவன்கதவம்புரிவிக்கவே. 4

மலையில்நீடிருக்கும்மறைக்காடரோ
கலைகள்வந்திறைஞ்சுங்கழலேத்தரோ
விலையில்மாமணிவண்ணவுருவரோ
தொலையிலாக்கதவந்துணைநீக்குமே. 5

பூக்குந்தாழைபுறணியருகெலாம்
மாக்குந்தண்பொழில்சூழ்மறைக்காடரோ
ஆர்க்குங்காண்பரியீரடிகேளுமை
நோக்கிக்காணக்கதவைத்திறவுமே. 6

வெந்தவெண்பொடிப்பூசும்விகிர்தரோ
வந்தயில்வியணிமறைக்காடரோ
எந்தைநீயடியார்வந்திறைஞ்சிட
விந்தமாக்கதவம்பிணிநீக்குமே. 7

ஆறுசூடுமணிமறைக்காடரோ
கூறுமாதுமைக்கீந்தகுழகரோ
ஏறதேறியவெம்பெருமானிந்த
மாறிலாக்கதவம்வலிநீக்குமே. 8

சுண்ணவெண்பொடிப்பூசுஞ்சுவண்டரோ
பண்ணியேறுகந்தேறும்பரமரோ
வண்ணலாதியணிமறைக்காடரோ
திண்ணமாக்கதவந்திறப்பிம்மினே. 9

அரக்கனைவிரலாலடர்த்திட்டநீ
ரிரக்கமொன்றிலீரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள்சூழ்மறைக்காடரோ
சரக்கவிக்கதவந்திறப்பின்மினே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மறைக்காட்டீசுவரர், தேவியார்-யாழைப் பழிமொழியம்மையார்.

திருவாரூர்-திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

குலம்பலம்பாவருகுண்டர்முன்னேநமக்குண்டுகொலோ
வலம்பலம்பாவருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான்றிருமூலட்டானம் [மே. 1
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டாம்பண்ணிய

மற்றிடமின்றிமனை துறந்தல்லுணவல்லமணர், சொற்
றிடமென்று துரிசுபட்டேனுக்கு முண்டுகொலோ, விற்
றிடம்வாங்கி விசயனொடன்றொரு வேடுவனாய்ப், புற்றிடங்
கொண்டான்றன் றொண்டர்க்குத் தொண்டாம் புண்ணி
யமே. 2

மாசினையேறியமேனியர்வன்கண்ணர்மொண்ணரைவிட்
டீசனையேநினைந்தேசறுவேனுக்குமுண்டுகொலோ
தேசனையாரூர்த்திருமூலட்டானனைச்சிந்தைசெய்து
பூசனைப்பூசுரர்தொண்டர்க்குத் தொண்டாம்புண்ணியமே.

குற்றமுடையவமணர்திறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்துய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ

மற்பொலிதோளானிராவணன் றன்வலிவாட்டுவித்த [மே
பொற்கழலானடிதொண்டர்க்குத் தொண்டராம்புண்ணிய

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-வன்மீகநாதீஸ்வரர், தேவியார் - அல்லியங்
கோதை யம்மையார்.

திருத்தூங்கானைமாடம்-திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம் [செய்யு

பொன்னார் திருவடிக்கொன் றுண்டுவிண்ணப்பம்போற்றி
மென்னாவிகாப்பதற்கிச்சையுண் டேலிருங்கூற்றகல
மின்னாருமூவிலைச்சூலமென் மேற்பொறிமேவுகொண்டல்
துன்னார்கடந்தையுட் டூங்கானைமாடச்சுடர்க்கொழுந்தே. 1

ஆவாசிறுத்தொண்டென்னினைந்தாயென் றரும்பிணி
நோய், காவாதொழியிற் கலக்குமுன்மேற் பழிகாதல்செய்
வார், தேவா திருவடிநீறென்னைப் பூசுசெந்தாமரையின்,
பூவார்கடந்தையுட் டூங்கானைமாடத்தெம்புண்ணியனே. 2

கடவுந்திகிரி கடவாதொழியக் கயிலையுற்றான், படவுந்
திருவிரலொன் றுவைத்தாய்பனிமால்வரைப்போல், இடபம்
பொறித்தென்னையேற் றுக்கொள் ளாயிருஞ்சோலைதிங்கள்,
தடவுங்கடந்தையுட் டூங்கானைமாடத்தெந்தத்துவனே. 3

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-சுடர்க்கொழுந்தீஸ்வரர், தேவியார்-
கடந்தை நாயகியம்மை.

அப்பர் சுவாமிகளுக்கு சூலப்பொறியும், ரிஷபக்குறியும்
பொருத்தருளிய ஸ்தலம்.

திருவங்கமாலை-பண்-சாதாரி

திருச்சிற்றம்பலம்.

தலையேநீவணங்காய்-தலை, மாலைதலைக்கணிந்து, தலையாலே பலிதேருந் தலைவனைத், தலையேநீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ-கடல், நஞ்சுண்ட கண்டன் றன்னை, எண்டோள்வீசி நின்றாடும்பிரான் றன்னைக், கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ-சிவன், எம்மிறை செம்பவள, வெரிபோன்மேனிப் பிரான்றிற மெப்போதும், செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கே நீமுரலாய்-முது, காடுறைமுக்கணனை, வாக்கே நோக்கிய மங்கைமணாளனை, மூக்கே நீமுரலாய். 4

வாயே வாழ்த்துகண்டாய்-மத, யானையுரிபோர்த்துப், பேய்வாழ்காட்டகத் தாடும்பிரான் றன்னை, வாயேவாழ்த்து கண்டாய். 5

நெஞ்சே நீநினையாய்-நிமிர், புன்சடைநின்மலனை, மஞ்சாடும்மலை மங்கைமணாளனை, நெஞ்சே நீநினையாய். 6

கைகாள் கூப்பித்தொழீர்-கடி, மாமலர்தூவிநின்று பைவாய்ப்பாம்பரை யார்த்தபரனைக், கைகாள் கூப்பித் தொழீர். 7

ஆக்கை யாற்பயனென்-னரன், கோயில்வலம் வந்து, பூக்கையாலட்டிப் போற்றியென்னாதவிவ், வாக்கையாற் பயனென். 8

கால்களாற்பயனென்-கறைக், கண்டனுறைகோயில், கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக், கால்களாற்பயனென்

உற்றாராருளரோ-உயிர், கொண்டு போம்பொழுது, குற்றாலத்துறைகூத்தனல்லானமக், குற்றாராருளரோ. 10

இறுமாந்திருப்பன்கொலோ-வீசன், பல்கணத்தெண்
ணப்பட்டுச், சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச்சென்று
இறுமாந்திருப்பன்கொலோ. 11

தேடிக்கண்டுகொண்டேன்-திரு, மாலொடு நான்முக
னும், தேடித்தேடொணாத்தேவனையென்னுள்ளே, தேடிக்
கண்டுகொண்டேன். 12

திருச்சிற்றம்பலம்.

கோயில்-திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

கருநட்டகண்டனையண்டத்தலைவனைக்கற்பகத்தைச்
செருநட்டமும்மதிலெய்யவல்லானைச்செந்தீமுழங்கத்
திருநட்டமாடியைத்தில்லைக்கிறையைச்சிற்றம்பலத்துப்
பெருநட்டமாடியைவானவர் கோனென்றுவாழ்த்துவனே

ஒன்றியிருந்துநினைமின்களுந்தமக்கூனமில்லைக்
கன்றியகாலனைக்காலாற்கடிந்தானடியவற்காய்ச்
சென்றுதொழுமின்கடில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
என்றுவந்தாயென்னுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே. 2

நன்மனவீர்கழியுங்கருத்தேசொல்லிக்காண்பதென்னே
நன்மனவாநவிறில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
பொன்மலையில்வெள்ளிக்குன்றதுபோலப்பொலிந்திலங்கி
என்மனமேயொன்றிப்புக்கனன்போந்தசுவடில்லையே. 3

சாடவெடுத்ததுதக்கன்றன்வேள்வியிற்சந்திரனை
வீடவெடுத்ததுகாலனைநாரணனான்முகனுங்

தேடவெடுத்தது தில்லையுட்சிற்றம்பலத்தாட்டம்
ஆடவெடுத்திட்டபாதமன்றோநம்மையாட்கொண்டதே. 4

திருச்சிற்றம்பலம்

திருப்பாதிரிப்புலியூர்-திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
ஏன்றானிமையவர்க்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே. 1

பற்றாய்நினைந்திடப்போதுநெஞ்சேயிந்தபாரைமுற்றுஞ்
சுற்றாயலைகடன்மூடினுங்கண்டேன்புகல்நமக்கு
உற்றானுமையவட்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்
முற்றாமுளைமதிக்கண்ணியினான்றன்மொய்கழலே. 2

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்[னே.
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ண

திருந்தாவமணர்தந்நெறிப்பட்டுத்திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கேசரணம்புகுந்தேனவரையெடுத்த
பொருந்தாவரக்கனுடனெரித்தாய்பாதிரிப்புலியூ
ரிருந்தாயடியேனினிப்பிறவாமல்வந்தேன்றுகொள்ளே. 4

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர்-திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்
காம்பிலாமூழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன் [துக்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலபலநினைக்கின்றேனை
ஓம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே. 1

மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கிமறியும்போதறியவொண்ணா
துனையுறுமுணர்வைநல்காயொற்றியூருடையகோவே. 2

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர்-ஆனந்தத்தியாகர், தேவியார்-
வடிவுடையம்மை.

திருக்குறுக்கை-திருநேரிசை

திருச்சிற்றம்பலம்.

ஆதியிற்பிரமனார்தாமர்ச்சித்தாரடியிணைக்கீழ்
ஓதியவேதநாவருணருமாறுணரலுற்றார் [பூக்
சோதியுட்சுடராய்த்தோன்றிச்சொல்லினையிறந்தார்பல்
கோதிவண்டறையுஞ்சோலைக்குறுக்கைவீரட்டனாரே. 1

நிற்றினைநிறையப்பூசிநித்தலுநியமஞ்செய்து
ஆற்றநீர்பூரித்தாட்டுமந்தணனாரைக்கொல்வான்
சாற்றுநாளற்றதென்றுதருமராசற்காய்வந்த
கூற்றினைக்குமைப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. 2

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
யழைத்தங்கேயாவின்பாலைக்கறந்து கொண்டாட்டக்கண்டு

பிழைத்ததன்றாதைதாளைப்பெருங்கொடுமழுவாள்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே. 3

சிலந்தியுமானைக்காவிற்றிருநிழற்பந்தர்செய்து
உலந்தவணிறந்தபோதேகோச்செங்கணானுமாகக்
கலந்தநீர்க்காவிரிசூழ்சோணாட்டுச்சோழர்தங்கள்
குலந்தனிற்பிறப்பித்திட்டார்குறுக்கைவீரட்டனாரே. 4

ஏறுடனேழடர்த்தானெண்ணியாயிரம்பூக்கொண்டு
ஆறுடைச்சடையினானையர்ச்சித்தானடியிணைக்கீழ்
வேறுமோர்பூக்குறையமெய்ம்மலர்க்கண்ணையிண்டக்
கூறுமோராழியீந்தார்குறுக்கைவீரட்டனாரே. 5

கல்லினாலெறிந்துகஞ்சிதாமுணுஞ்சாக்கியனார்
நெல்லினார்சோறுணாமேநீள்விசும்பாளவைத்தார்
எல்லியாங்கெரிகையேந்தியெழிறிதழ்நட்டமாடிக்
கொல்லியாம்பண்ணுகந்தார்குறுக்கைவீரட்டனாரே. 6

காப்பதோர்வில்லுமம்புங்கையுடையிறைச்சிப்பாரந்
தோற்பெருஞ்செருப்புத்தொட்டுத்தூயவாய்க்கலசமாட்ட
தீப்பெருங்கண்கள்செய்யக்குருதிநீரொழுகத்தன்கண் [த்
கோப்பதுபற்றிக்கொண்டார்குறுக்கைவீரட்டனாரே. 7

நிறைமறைக்காடுதன்னினீண்டெரிதீபந்தன்னைக்
கறைநிறத்தெலிதன்மூக்குச்சுட்டிடக்கனன்றுதூண்ட
நிறைகடலமண்ணும்விண்ணுநீண்டவானுலகமெல்லாங்
குறைவறக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. 8

அணங்குமைபாகமாகவடக்கியவாதிமூர்த்தி
வணங்குவாரிடர்கடீர்க்குமருந்துநல்லருந்தவத்த

கணம்புல்லர்க்கருள்கள்செய்துகாதலாமடியார்க்கென்றுங்
குணங்களைக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. 9
எடுத்தனனெழிற்கயிலையிலங்கையர்மன்னன்றன்னை
யடுத்தொருவிரலாலூன்றவலறிப்போயவனும்வீழ்ந்து
விடுத்தனகைநரம்பால்வேதகீதங்கள்பாடக்
கொடுத்தனர்சொற்றவாளுள்குறுக்கைவீரட்டனாரே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-வீரட்டானேசுவரர்,
தேவியார்-ஞானாம்பிகையார்.

திருவையாறு-திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

கங்கையைச்சடையுள்வைத்தார்கதிர்பொறியரவம்வைத்தார்
திங்களைத்திகழவைத்தார்திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார்மான்மறிமழுவும்வைத்தார்
அங்கையுளனலும்வைத்தாரையனையாறனாரே. 1
பொடிதனைப்பூசவைத்தார் பொங்குவெண்ணூலும்வைத்தார்
கடியதொர்நாகம்வைத்தார்காலனைக்காலில்வைத்தார்
வடிவுடைமங்கைதன்னைமார்பிலோர்பாகம்வைத்தார்
அடியிணைதொழவும்வைத்தாரையனையாறனாரே. 2
இரப்பவர்க்கீயவைத்தாரீபவர்க்கருளும்வைத்தார்
கரப்பவர்தங்கட்கெல்லாம்கடுநரகங்கள்வைத்தார்
பரப்புநீர்க்கங்கைதன்னைப்படர்சடைப்பாகம்வைத்தார்
அரக்கனுக்கருளும்வைத்தாரையனையாறனாரே. 3

திருச்சிற்றம்பலம்.

கோயில்-பெரிய திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை அருமறையி
னகத்தானை யணுவையார்க்குந், தெரியாத தத்துவனைத்
தேனைப்பாலைத் திகழொளியைத் தேவர்கடங் கோனை
மற்றைக் கரியானை நான்முகனைக் கனலைக்காற்றைக்கனை
கடலைக் குலவரையைக் கலந்துநின்ற, பெரியானைப்பெரும்
பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

கற்றானைக் கங்கைவார் சடையான்றன்னைக் காவிரி
சூழ் வலஞ்சுழியுங் கருதினானை, அற்றார்க்கு மலந்தார்க்கு
மருள்செய்வானை யாரூரும் புகுவானை யறிந்தோமன்றே,
மற்றாருந் தன்னொப்பா ரில்லாதானை வானவர்க ளெப்
பொழுதும் வணங்கியேத்தப், பெற்றானைப் பெரும்பற்றப்
புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 2

கருமானி னுரியதளே யுடையாவீக்கிக்கனை கழல்கள்
கலந்தொலிப்ப வனல்கையேந்தி, வருமானத் திரடோள்
கண் மட்டித்தாட வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர்
நோக்கி, அருமான வாண்முகத்தா ளமர்ந்துகாண வமரர்
கண முடிவணங்க வாடுகின்ற, பெருமானைப் பெரும்பற்
றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 3

அருந்தவர்க டொழுதேத்து மப்பன்றன்னை யமரர்க
டம் பெருமானை யானைமூவா, மருந்தமரர்க் கருள்புரிந்த
மைந்தன்றன்னை மறிகடலுங் குலவரையும் மண்ணும்விண்

னும், திரிந்தொளிய தாரகையுந் திசைகளெட்டுந் திரி சுடர்களோரிரண்டும் பிறவுமாய, பெருந்தகையைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

அருந்துணையை யடியார்த மல்லறீர்க்கு மருமருந்தை யகன்ஞாலத் தகத்துட்டோன்றி, வருந்துணையுஞ் சுற்ற மும் பற்றும்விட்டு வான்புலன்க ளகத்தடக்கி மடவா ரோடும், பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற்றிப் பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கென்றும், பெருந் துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல் லாம் பிறவாநாளே. 5

கரும்பமரு மொழிமடவாள் பங்கன்றன்னைக் கனவயி ரக் குன்றனைய காட்சியானை, அரும்பமரும் பூங்கொன் றைத் தாரான்றன்னை யருமறையோ டாறங்க மாயினா னைச், சுரும்பமருங் கடிபொழில்கள் சூழ்தென்னூரூர்ச் சுடர்க்கொழுந்தைத் துளக்கிலா விளக்கைமிக்க, பெரும் பொருளைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல் லாம் பிறவாநாளே. 6

வரும்பயனை வெழுநரம்பி னோசையானை வரைசிலையா வானவர்கள் முயன்றவாளி, அரும்பயஞ்செ யவுணர்புர மெரியக்கோத்த வம்மானை யலைகடனஞ் சயின்றான்றன் னைச், சுரும்பமருங் குழன்மடவார் கடைக்கணோக்கிற் றுளங்காத சிந்தையராய்த் துறந்தோருள்ளப், பெரும் பயனைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல் லாம் பிறவாநாளே. 7

காரானை யீருரிவைப் போர்வையானைக் காமருபூங் கச்சியே கம்பன்றன்னை, ஆரேனு மடியவர்கட் கணியான்

றன்னை யமரர்களுக் கறிவரியவளவிலானைப், பாரோரும் விண்ணோரும் பணியநட்டம் பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனையெண்ணிப், பேரானைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 8

முற்றாத பான்மதியஞ் சூடினானை மூவுலகந் தானாய முதல்வன் றன்னைச், செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் றன்னைத் திகழொளியை மரகதத்தைத் தேனைப்பாலைக், குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன்றன்னைக் கூத்தாட வல்லானைக் கோனைஞானம், பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 9

காரொளிய திருமேனிச் செங்கண்மாலுங் கடிக்கமலத்திருந்தவனுங் காணாவண்ணஞ், சீரொளிய தழற்பிழம்பாய் நின்றதொல்லைத் திகழொளியைச் சிந்தைதனை மயக்கந்தீர்க்கும், ஏரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணு மேழுலகுங் கடந்தண்டத் தப்பானின்ற, பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கருகாவூர்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

குருகாம் வயிரமாங் கூறுநாளாங் கொள்ளுங் கிழமையாம் கோளேதானும், பருகா வமுதமாம் பாலினெய்யாம் பழத்தி னிரதமாம் பாட்டிற்பண்ணாம், ஒருகா லுமையாளோர்பாகனுமா முண்ணின்ற நாவிற் குரையாடியாம், கரு

வாயுலகுக்கு முன்னேதோன்றுங் கண்ணுங் கருகாவூ ரெந்தைதானே. 1

வித்தாமுளையாகும் வேரேதானும் வேண்டுமுருவமாம் விரும்பிநின்ற. பத்தாமடியார்க்கோர் பாங்கனுமாம் பானிறமு மாம்பாஞ் சோதிதானும், தொத்தா மமரர்கணஞ் சூழ்ந்து போற்றத் தோன்றாதென்னுள்ளத்தி னுள்ளே நின்ற, கத்தாமடியேற்குக் காணுகாட்டுங் கண்ணுங்கருகாவூ ரெந்தைதானே. 2

பூத்தானும்பூவினிறத்தானுமாம் பூக்குளால் வாசமாய் மன்னிநின்ற, கோத்தானுங் கோல்வளையாள் கூறனுங் கொண்டசமயத்தார்தேவனுகி, எத்தாதார்க்கென்றுமிடரே துன்பமீவானு மென்னெஞ்சத்துள்ளேநின்று, காத்தானுங் காலனடையாவண்ணங் கண்ணுங்கருகாவூரெந்தைதானே.

இரவனுமெல்லி நடமாடியா மெண்டிசைக்குந்தேவனு மென்னுளானும், அரவனுமல்ல லறுப்பானுமா மாகாச மூர்த்தியா மானேறேறும், குரவனுங்கூற்றை யுதைத்தான் றானுங் கூறாதவஞ்சக்குயலர்க் கென்றும், கரவனுங்காட்சிக் கெளியானுமாங் கண்ணுங்கருகாவூ ரெந்தைதானே. 4

படைத்தானும் பாரையிடந்தானுகும் பரிசொன்றறியாமை நின்றான்றானும், உடைத்தானுமொன்னார் புரங்கண்மூன்று மொள்ளழலான் மூட்டியொருக்கிநின்று, அடைத்தானுஞ் சூலமழுவோர் நாகமசைத்தானு மானே மொன்றூர்ந்தானுகும், கடைத்தானுங் கள்ளமறிவார்நெஞ்சிற் கண்ணுங்கருகாவூ ரெந்தைதானே. 5

மூலனா மூர்த்தியா முன்னேதானா மூவாத மேனி முக்கண்ணினானும், சீலனாஞ் சேர்ந்தா ரிடர்கடீர்க்குஞ் செல்வனாஞ் செஞ்சுடர்க்கோர் சோதிதானும், மாலனா மங்கையோர் பங்கனாகு மன்றாடி யாம்வானோர் தங்கட்கெல்லாம், காலனாங் காலனைக் காய்ந்தானாகுங் கண்ணாங் கருகாவூ ரெந்தைதானே. 6

அரைசேரரவனா மாலத்தனா மாதிரை நாளானுமண்ட வானோர், திரைசேர் திருமுடித்திங்களானுந் தீவினை நாசனென் சிந்தையானும், உரைசே ருலகத்தா ருள்ளானுமா முமையாளோர் பாகனா மோதவேலிக், கரைசேர் கடனஞ்சை யுண்டானாகுங் கண்ணாங் கருகாவூரெந்தைதானே.

துடியாந் துடியின் முழக்கந்தானாஞ் சொல்லுவார் சொல்லெல்லாஞ் சோதிப்பானும், படிதானும் பாவ மறுப்பானாகும் பானீற்றனாம் பரஞ் சோதிதானும், கொடியானுங் கூற்றை யுதைத்தானாகும் கூறாத வஞ்சக் குயலர்க் கென்றும், கடியானுங் காட்சிக் கரியானாகுங் கண்ணாங் கருகாவூ ரெந்தைதானே 8

விட்டுருவங்கிளர்கின்ற சோதியானும் விண்ணவர்க்கு மறியாத சூழலானும், பட்டுருவ மால்யானைத் தோல்கீண் டானும் பலபலவும் பாணி பயின்றான்றானும், எட்டுருவ மூர்த்தியா மெண்டோளானா மென்னுச்சி மேலானா மெம் பிரானும், கட்டுருவங் கடியானைக் காய்ந்தானாகுங் கண் ணாங் கருகாவூ ரெந்தைதானே. 9

பொறுத்திருந்த புள்ளூர்வா னுள்ளானாகிப் புள்ளிருந் தங் குண்டேனாய் கனைவான்றானாய்ச், செறுத்திருந்த மும் மதில்கண் மூன்றும்வேவச் சிலைகுனியத் தீமூட்டுந் திண் மைதானும், அறுத்திருந்த கையானா மந்தாரல்லி யிருந்

தானே யொருதலையைத் தெரியநோக்கிக் கறுத்திருந்த கண்டமுனை யான் போலுங் கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. 10

ஒறுத்தானு மொன்னூர் புரங்கண்மூன்று மொள்ளழலை மாட்டி யுடனேவைத்து, இறுத்தானு மெண்ணான் முடிகள் பத்து மிசைந்தானு மின்னிசைகள் கேட்டானும், அறுத்தானு மஞ்சு மடக்கியங்கை யாகாச மந்திரமு மானானும், கறுத்தானுங் காலனைக் காலால்வீழக் கண்ணுங் கருகாவூ ரெந்தைதானே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-முல்லைவனேசுவரர்,
தேவியார்-கரும்பனையாளம்மை.

திருப்பூவணம்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும் வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றுங், கடியேறு கமழ் கொன்றைக் கண்ணி தோன்றுங் காதில்வெண் குழைதோடு கலந்து தோன்று, மிடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்று மெழிறிகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும், பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

ஆணாகிப் பெண்ணாய வடிவுதோன்று மடியவர்கட் காரமுத மாகித் தோன்று, மூணாகி யூர்திரிவா னாகித்

தோன்று மொற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம் மேற், சேனாக வரைவில்லா லெரித்த ரோன்றுஞ் செத்த வர்த மெலும்பினாற் செறியச் செய்த, பூணாணு மரை காணும்பொலிந்து தோன்றும் பொழிறிகழும் பூவணத் தெம்புனித னார்க்கே. 2

கல்லாலி னீழற் கலந்து தோன்றுங் கவின்மறை யோர் நால்வர்க்கு நெறிக ளன்று, சொல்லாகச் சொல்லி யவர் தோன்றுந் தோன்றுஞ் சூழரவு மான்மறியுந் தோன் றுந் தோன்று, மல்லாத காலனைமுன் னடர்த்த ரோன்று மைவகையா னினைவார்பா லமர்ந்து தோன்றும், பொல் லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. 3

படைமலிந்த மழுவாளு மானுந் தோன்றும் பன்னி ரண்டு கண்ணுடைய பிள்ளைதோன்று, நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்று நான்மறையி னொலி தோன்று நயனந் தோன்று, முடைமலிந்த கோணமுங் கீளுந் தோன்று மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன் றும், புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. 4

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்று மாசி லாப் புன்சடைமேன் மதியந் தோன்று, மியல்பாக விடு பிச்சையேற்ற ரோன்று மிருங்கடனஞ் சுண்டிருண்ட கண்டந்தோன்றுங், கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை யாயிரமாமுகத்தினொடு வானிற் ரோன்றும், புயல் பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. 5

பாராழி வட்டத்தா பரவி யிட்ட பன்மலரு நறும்
புகையும் பரந்து தோன்றுஞ், சீராழித் தாமரையின்
மலர்க ளன்ன திருந்தியமா நிறத்தசே வடிக டோன்று,
மோராழித் தேருடைய விலங்கை வேந்த னுடறுணித்த
விடர்பாவங் கெடுப்பித்தன்று, போராழி முன்னீந்த
பொற்புத் தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனித
னார்க்கே. 6

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ் சதுர்
முகனைத் தலையரிந்த தன்மை தோன்று, மின்னனைய
நுண்ணிடையாள் பாகந் தோன்றும் வேழத்தி னுரிவிரும்
பிப் போர்த்த தோன்றந், துன்னியசெஞ் சடைமேலோர்
புனலும் பாம்புந் தூயமா மதியுடனே வைத்த தோன்றும்,
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும் பொழி
றிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 7

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றுந் திரி
புரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்று, நெறியதனை
விரித்துரைத்த நேர்மை தோன்று நெற்றிமேற் கண்
டோன்றும் பெற்றந் தோன்று, மறுபிறவி யறுத்தருளும்
வகையுந் தோன்று மலைமகளுஞ் சலமகளு மலிந்து தோன்
றும், பொறியரவு மிளமதியும் பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 8

அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்று மணி
யிளரு முருமென்ன வடர்க்குங் கேழன், மருப்போட்டு
மணிவயிரக் கோவை தோன்று மணமலிந்த நடந்தோன்று
மணியார் வைகைத், திருக்கோட்டி னின்றதோர் திறமுந்
தோன்றுஞ் செக்கர்வா னொளிமிக்குந் திகழ்ந்த சோதிப்

பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும் பொழி
றிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. 9

ஆங்கணைந்த சண்டிக்கு மருளி யன்று தன்முடிமே
லலர்மாலை யளித்த றோன்றும், பாங்கணைந்து பணிசெய்
வார்க்கருளியன்று பலபிறவி யறுத்தருளும் பரிசுந்தோன்
றும், கோங்கணைந்த கூவிளமு மதமத் தம்முங் குழற்
கணிந்த கொள்கையொடு கோலந்தோன்றும், பூங்கணை
வேளுருவழித்த பொற்புத் தோன்றும் பொழிறிகழும் பூவ
ணத்தெம் புனிதனார்க்கே. 10

ஆருருவ முள்குவா ருள்ளத்துள்ளே யவ்வுருவாய் நிற்
கின்ற வருளுந் தோன்றும், வாருருவப் பூண்முலைநன்
மங்கைதன்னை மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவு
தோன்று, நீருருவக் கடலிலங்கை யரக்கர் கோனை நெறு
நெறெனவடர்த்திட்ட நிலையுந் தோன்றும், போருருவக்
கூற்றுதைத்த பொற்புத் தோன்றும் பொழிறிகழும் பூவ
ணத்தெம் புனிதனார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர்-பூவணநாதேசுவரர்.
தேவியார்-மின்னும்பிகையார்.

திருநாகைக்காரோகணம்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பாரார்பரவும் பழனத்தானைப் பருப்பதத்தானைப்
பைஞ்ஞீலியானைச், சீரார்செழும்பவளக் குன்றொப்பானைத்
திகழுந் திருமுடிமேற் றிங்கள்சூடிப், போராயிரமுடைய

யெம்மான் றன்னைப் பிறர்தன்னைக்காட்சிக் கரியான் றன்னைக், காரார்கடல்புடை சூழ்ந்தநாகைக் காரோணத் தெஞ்ஞான் றுங் காணலாமே. 1

விண்ணோர் பெருமானை வீரட்டானை வெண்ணீறு மெய்க்கணிந்த மேனியானைப், பெண்ணானை யாணானைப் பேடிஞனைப் பெரும்பற்றத் தன்புலியூர் பேணிஞனை, யண்ணாமலையானை யானைந்தாடு மணியாரூர் வீற்றிருந்த வம்மான் றன்னைக், கண்ணார் கடல்புடை சூழ்ந்தநாகைக் காரோணத் தெஞ்ஞான் றுங் காணலாமே. 2

பொன்மணியைப் பூங்கொன்றை மாலையானைப் புண்ணியனை வெண்ணீறு பூசிஞனைச், சின்மணியை மூவிலையஞ் சூலத்தானைத் தென்சிராப்பள்ளி சிவலோகனை, மன்மணியை வான்சுடலை யூராப்பேணி வல்லெருதேறு மறை வல்லானைக், கண்மணிகள் வெண்டிரை சூழ்ந்த நாகைக் காரோணத் தெஞ்ஞான் றுங் காணலாமே. 3

திருச்சிற்றம்பலம்.

திருஆவடுதுறை-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

திருவேயென் செல்வமே தேனேவானோர் செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க, உருவேயென் னுறவேயென் னூனேயூனி னுள்ளமே யுள்ளத்தி னுள்ளேநின்ற, கருவேயென் கற்பகமே கண்ணேகண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்காவாய், அருவாய வல்வினைநோ யடையாவண்ண மாவடுதண் டுறையுறையு மமரரேறே. 1

மாற்றேனெழுத் தஞ்சமென் றனாவின் மறவேன் திரு
வருள்கள் வஞ்சநெஞ்சின், எற்றேன் பிறதெய்வமெண்ணா
நாயேனெம்பெருமான் திருவடியே யெண்ணினல்லால்,
மேற்றானீ செய்வனகள்செய்யக்கண்டு வேதனைக்கேயிடங்
கொடுத்து நாளுநாளும், ஆற்றே னடியேனை யஞ்சே
லென்று யாவடுதண் டுறையுறையு மமரரேறே. 2

வரையார் மடமங்கை பங்காகங்கை மணவாளா வார்
சடையாய் நின்றனாமம், கூரையா வுயிர்போகப் பெறுவே
னாகி லுறுநோய்வந் தெத்தனையுமுற்றா லென்னே, கரை
யாநினைந் துருகிக் கண்ணீர்மல்கிக் காதலித்து நின்கழலே
யேத்துமன்பர்க், கரையா வடியேனை யஞ்சேலென்று
யாவடுதண் டுறையுறையு மமரரேறே. 3

சிலைத்தார் திரிபுரங்க ளுயில்வேவச் சிலைவளைவித்
துமையவளை யஞ்சநோக்கிக், கலித்தாங் கிரும்பிடிமேற்
கைவைத்தோடுங் களிறுரித்த கங்காளா வெங்கள்கோவே,
நிலத்தாரவர்தமக்கே பொறையாய்நாளு நில்லா வுயி
ரோம்பு நீதனேனான், அலுத்தேனடியேனை யஞ்சலென்று
யாவடுதண் டுறையுறையு மமரரேறே. 4

நறுமாமலர் கொய்து நீரின்மூழ்கி நாடோறு நின்
கழலே யேத்திவாழ்த்தித், துறவாத துன்பந் துறந்தேன்
றன்னைச் சூழலகி லூழ்வினைவந் துற்றா லென்னே, உற
வாகி வானவர்கண் முற்றும்வேண்ட வொலிதிரைநீர்க
டனஞ்சுண் டுய்யகொண்ட, அறவா வடியேனை யஞ்சே
லென்று யாவடுதண் டுறையுறையு மமரரேறே. 5

கோணு ரணனங்கர் தோண்மேற்கொண்டு கொழு மலபான் றன்சிரத்தைக் கையிலேந்திக், காளூர் களிற்றுரி வைப் போர்வைமூடிக் கங்காள வேடரா யெங்குஞ்செல் வீர், நாளு ருமக்கோர் வினைக்கேடனே னல்வினையுந் தீவினையுமெல்லாமுன்னே, ஆளு யடியேனை யஞ்சலென்னு யாடுவதண் டுறையுறையு மமரரேறே. 6

உழையுரித்த மானுரிதோலாடையானே யுமையவடம் பெருமானே யிமையோரேறே, கழையிறத்த கருங்கட னஞ்சுண்டகண்டா கயிலாய மலையானே யுண்பாலன்பர், பிழைபொறுத்தி யென்பதுவும் பெரியாய்நின் றன் கட னன்றே பொருளுன்பாலதன்றே,அழையுறத்துமாமயில் களாலுஞ் சோலை யாடுவதண் டுறையுறையு மமரரேறே. 7

உலந்தார் தலைகலனென் றேந்திவானே ருலகம் பலி திரிவாயுன்பாலன்பு, கலந்தார் மனங்கவருங் காதலனே கனலாடுங் கையவனே யையாமெய்யே, மலர்தாங் குயிர்ப் பிறவிமாயக்காய மயக்குளே விழுந்தழுந்தி நாளுநாளும், அலந்தே னடியேனை யஞ்சலென்னு யாடுவதண் டுறை யுறையு மமரரேறே 8

பல்லார்ந்த வெண்டலை கையிலேந்திப்பசுவேறி யூரு ரன் பலிகொள்வானே, கல்லார்ந்த மலைமகளு நீருமெல் லாங்கரிகாட்டி லாட்டுகந்தீர் கருதிராகில், எல்லாரு மென் றன்னை யிகழ்வர்போலு மேழையமண் குண்டர்சாக் கிய ரொன்றுக், கல்லாதார்திறத் தொழிந்தே னஞ்சேலென்னு யாவடுதண் டுறையுறைய மமரரேறே. 9

துறந்தார் தந்நெறிக்கட் சென்றேனல்லேன் றுணை மாலை சூட்டநான் றூயநல்லேன், பிறந்தேனின் றிரு

வருளே பேசினல்லாற் பேசாதாரெல்லாம் பிறவாதாரே.
செறிந்தார்மதி ளிலங்கைக்கோமான் றன்னைச் செறுவரைக்
கீழடர்த்தருளிச் செய்கையெல்லாம், அறிந்தே னடியேனை
யஞ்சே லென்று யாவடுதண் டுறையுறையு மமரரே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி-பெயர்-மாசிலாமணித்தியாகேசுவரர்,
தேவியார்-ஒப்பிலாமுலையம்மை.

திருவானைக்கா-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எத்தாய ரெத்தந்தை யெச்சுற்றத்தா ரெம்மாடு சும்மாடா மேவர்நல்லார், செத்தால்வந் துதவுவா ரொருவரில்லை சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லாநிற்பர், சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித் திருவானைக் காவுடைய செல்வாவென்றன், அத்தாவுன் பொற்பாத மடையப் பெற்றா லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே.

ஊனாகி யுயிராகி யதனுணின்ற வுணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய், நானேது மறியாமே யென்னுள் வந்து நல்லனவுந் தீயனவுங் காட்ட நின்றாய், தேனாருங்கொன்றையனே நின்றியூராய் திருவானைக் காவிலுறை சிவனே ஞானம், ஆனாயுன் பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே. 2

ஒப்பாயிவ் வுலகத்தோ டொட்டிவாழ்வா னொன்றலாத் தவத்தாரோ டடனேநின்று, துப்பாருங் குறையடிசிறுத்தி நற்றன் றிறமறந்து திரிவேனைக் காத்துநீவந்,

தெப்பாலு நன்னுணர்வே யாக்கியென்னை யாண்டவனே யெழிலானைக் காவாவானோர், அப்பாவுன் பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங் கொண்டடியே னென் செய்கேனே. 3

நினைத்தவர்க ணெஞ்சுளாய் வஞ்சக்கள்வா நிறை மதியஞ் சடைவைத்தா யடையா தன்பால், முனைத்தவர்கள் புரமூன்று மெரியச்செற்றாய் முன்னானைத் தோல்போர்த்த முதல்வாவென்றும், கனைத்துவரு மெருதேறுங் காள கண்டா கயிலாய மலையாயுன் கழலேசேர்ந்தேன், அனைத் துலகு மாள்வானே யானைக்காவா வல்லகண்டங் கொண் டடியே னென்செய்கேனே. 4

இம்மாயப் பிறப்பென்னுங் கடலாந் துன்பத் திடைச் சுழிப்பட் டிளைப்பேனை யிளையாவண்ணம், கைம்மான மனத்துதவிக் கருணைசெய்து காதலகு ளவைவைத்தாய் காணநில்லாய், வெம்மான மதகரியி னுரிவைப்போர்த்த வேதியனே தென்னானைக் காவுண்மேய, அம்மானின் பொற்பாத மடையப் பெற்றா லல்லகண்டங் கொண் டடியே னென்செய்கேனே. 5

உரையாரும் புகழானே யொற்றியூராய் கச்சி யேகம் பனே காரோணத்தாய், விரையாரு மலர்தூவி வணங்கு வார்பான் மிக்கானே யக்கரவ மாரம்பூண்டாய், திரை யாரும் புனற்பொன்னித் தீர்த்தமல்கு திருவானைக் காவி லுறை தேனேவானோர், அரையாவுன் பொற்பாதமடையப் பெற்றா லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே.

மையாரு மணிமிடற்றாய் மாதோர்கூறாய் மான்மறி யுமாமழுவு மனலுமேந்தும், கையானே காலனுடன்

மாளச்செற்றகங்காளா முன்கோளும்விலையுமானாய், செய்
யானே திருமேனியரியார்தேவர் குலக்கொழுந்தே தென்
னானைக்காவுண்மேய, வையாவுன் பொற்பாதமடையப்
பெற்றா லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே.

இளையாருங் குலத்தா யெண்டோளானே யெவ்வி
டத்து நீயல்லா தில்லையென்ற, தலையாரக் கும்பிடுவார்
தன்மையானே தழன்மடுத்த மாமேருக் கையில்வைத்த
சிலையானே திருவானைக் காவுண்மேய தீயாடி சிறுநோயா
னலிவுண்டுள்ளம், அலையாதே நின்னடியேயடையப்பெற்றா
லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே. 8

விண்ணாரும் புனல்பொதிசெஞ் சடையாய் வேதநெறி
யானே யெறிகடலி னஞ்சமுண்டாய், எண்ணாரும் புகழா
னே யன்னையெம்மா னென்றென்றே நாவினிலெப்பொழு
துமுன்னிக், கண்ணாரக் கண்டிருக்கக் களித்தெப்போதும்
கடிபொழில்சூழ் தென்னானைக் காவுண்மேய, அண்ணாநின்
பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங் கொண்டடியே
னென்செய்கேனே. 9

கொடியேயும் வெள்ளேற்றாய் கூளிபாடக் குறட்பூதங்
கூத்தாட நீயுமாடி, வடிவேயு மங்கைதனை வைத்தமைந்தா
மதிலானைக் காவுளாய் மாகாளத்தாய், படியேயுங் கடலி
லங்கைக் கோமான்றன்னைப் பருமுடியுந் திரடோளு
மடர்த்துகந்த, அடியேவந் தடைந்தடிமை யாகப்பெற்றா
லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-சம்புகேசுவரர், தேவியார்
அகிலாண்டவல்லியம்மை.

திருக்கீழ்வேளூர்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

ஆளான வடியவர்கட் கன்பன்றன்னை யானஞ்சுமாடியை நானயம்புக்க, தாளானைத் தன்னொப்பாரில்லாதானைச் சந்தனமுங் குங்குமமுஞ் சாய்ந்துந் தோய்ந்த, தோளானை தோளாத முத்தொப்பானைத் தூவெளுத்த கோவணத்தையரையிலாத்த, கிளானைக்கீழ் வேளூராளுங் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே. 1

தடுத்தானைக் காலனைக் காலாற்பொன்றத் தன்னடைந்த மாணிக்கன் னருள்செய்தானை, உடுத்தானைப் புலியதளோடக்கும் பாம்புமுள்குவாருள்ளத்தி னுள்ளான்றன்னைமடுத்தானை யருநஞ்சமிடற்றுட்டங்க வானவர்கள் கூடியவத் தங்கள்வேள்வி, கெடுத்தானைக் கீழ்வேளூராளுங்கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே. 2

முறிப்பானபேசிமலை யெடுத்தான்றானு முதுகில்முன் கைநரம்பை யெடுத்துபாடப், பரிப்பான்கைச் சிற்றறிவாணீட்டினானைப் பாவியே னெஞ்சகத்தே பாதப்போது, பொறித்தானைப் புரமூன்று மெரிசெய்தானைப் பொய்யர்களைப் பொய்செய்து போதுபோக்கிக், கிறிப்பானைக் கீழ்வேளூராளுங் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே.

திருச்சிற்றம்பலம்.

திருப்புள்ளிருக்குவேளூர்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

பண்ணியனைப் பைங்கொடியாள் பாகன்றன்னைப் படர் சடைமேற் புனல்கரந்த படிறன்றன்னை, நண்ணியனை யென்னாக்கித் தன்னானானை நான்மறையி னற்பொருளை நளிவெண்டிங்கட், கண்ணியனைக் கடியநடை விடை யொன்றேறுங் காரணனை நாரணனைக் கமலத்தோங்கும், புண்ணியனைப் புள்ளிருக்கும் வேளூரானைப் போற்றாதே யாற்றாநாள் போக்கினேனே. 1

இறுத்தானை யிலங்கையர்கோன் சிரங்கள்பத்து மெழுநரம்பி னின்னிசைகேட் டின்புற்றானை, யறுத்தானை யடியார்தம் மருநோய்பாவ மலைகடலி லாலமுண்டு கண் டங், கறுத்தானைக் கண்ணழலாற் காமனாகங் காய்ந்தானைக் கனன்மழுவுங் கலையுமங்கைப் பொறுத்தானைப் புள்ளிருக்கும் வேளூரானைப் போற்றாதே யாற்றாநாள் போக்கினேனே. 2

திருச்சிற்றம்பலம்

திருவையாறு-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

ஓசையொலியெலா மானாய்நீயே யுலகுக்கொருவனாய் நின்றாய்நீயே, வாசமலரெலாமானாய்நீயே மலையான் மருகனாய் நின்றாய்நீயே, பேசப்பெரிது மினியாய்நீயே பிரானா யடியேன் மேல் வைத்தாய்நீயே, தேசவிளக்கெலா மானாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. 1

நோக்கரியதிருமேனி யுடையாய்நீயே நோவாமே நோக்கருளவல்லாய்நீயே. காப்பரிய வைம்புலனுங் காத்தாய்நீயே காமனையுங் கண்ணழலாற் காய்ந்தாய்நீயே, ஆர்ப்பரிய மாநாக மார்த்தாய்நீயே யடியானென் றடியென்மேல் வைத்தாய்நீயே, தீர்ப்பரிய வல்வினைநோய் தீர்ப்பாய்நீயே திருவையா றகலாத செம்பொற்சோதீ. 2

கனத்தகத்துக்கடுஞ்சுடராய் நின்றாய்நீயே கடல்வரை வானாகாய மானாய்நீயே, தனத்தகத்துத் தலைகலனாகக் கொண்டாய்நீயே சாந்தாரைத் தகைந்தாள வல்லாய்நீயே, மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய்நீயே மலர்ச்சேவடி யென்மேல் வைத்தாய்நீயே, சினத்திருந்த திருநீலகண்டா நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. 3

வானுற்ற மாமலைக ளானாய்நீயே வடகயிலை மன்னியிருந்தாய்நீயே, ஊனுற்றவொளிமழு வாட்படையாய்நீயே யொளிமதியோ டரவுபுனல் வைத்தாய்நீயே, ஆனுற்ற வைந்து மமர்ந்தாய்நீயே யடியானென் றடியேன்மேல் வைத்தாய்நீயே, தேனுற்ற சொன்மடவாள் பங்கனீயே திருவையா றகலாத செம்பொற்சோதீ. 4

பெண்ணாண் பிறப்பிலியாய் நின்றாய்நீயே பெரியார்கட்கெல்லாம் பெரியாய்நீயே, உண்ணாவரு நஞ்சமுண்டாய் நீயே யூழிமுதல்வனாய் நின்றாய் நீயே, கண்ணாயுலகெலாங் காத்தாய்நீயே கழற்சேவடி யென்மேல் வைத்தாய்நீயே, திண்ணார்மழுவாட் படையாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. 5

உற்றிருந்த உணர்வெலா மானாய்நீயேயுற்றவர்க்கோர் சுற்றமாய்நின்றாய்நீயே, கற்றிருந்த கலைஞான மானாய்நீயே

கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய்நீயே, பெற்றிருந்த தாயவளி னல்லாய்நீயே பிரானாயடியேன்மேல் வைத்தாய் நீயே, செற்றிருந்த திருநீலகண்டனீயே திருவையாறக லாத செம்பொற்சோதீ. 6

எல்லாவுலகமுமானாய்நீயே யேகம்பமேவி யிருந்தாய் நீயே, நல்லாரை நன்மையறிவாய்நீயே, ஞானச்சுடர்விளக் காய் நின்றாய்நீயே, பொல்லாவினைக ளறுப்பாய்நீயே புகழ்ச்சேவடி யென்மேல் வைத்தாய்நீயே, செல்வாயசெல் வந் தருவாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ.

ஆவினிலைந்து மமர்ந்தாய்நீயே யளவில் பெருமை யுடையாய்நீயே, பூவினினாற்றமாய் நின்றாய்நீயே போர்க் கோலங்கொண் டெயிலெரிந்தாய்நீயே, நாவினடுவுரையாய் நின்றாய்நீயே நண்ணியடியென்மேல் வைத்தாய்நீயே, தேவ ரறியாத தேவநீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ.

எண்டிசைக்கு மெண்சுடராய் நின்றாய்நீயே யேகம்ப மேய விறைவனீயே, வண்டிசைக்கு நறுங்கொன்றைத் தாராய்நீயே வாராவுலகருள வல்லாய்நீயே, தெண்டிசைத் துன்னடிபரவ நின்றாய்நீயே தாமலர்ச்சேவடி யென்மேல் வைத்தாய்நீயே, திண்சிலைக்கோர் சரங்கூட்ட வல்லாய் நீயே திருவையா றகலாத செம்பொற்சோதீ 9

விண்டார் புரமூன்று மெய்தாய்நீயே விண்ணவர்க்கு மேலாகி நின்றாய்நீயே, கண்டாரைக்கொல்லு நஞ்சுண் டாய்நீயே காலங்களூழியாய் நின்றாய்நீயே, தொண்டா யடியேனை யாண்டாய்நீயே தாமலர்ச்சேவடி யென்மேல் வைத்தாய்நீயே, திண்டோள்விட் டெரியாட லுகந்தாய் நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. 10

ஆருமறியா விடத்தாய்நீயே யாகாயந்தேரூர வல்லாய் நீயே, பேரும்பெரிய விலங்கைவேந்தன் பெரியமுடி பத்திறுத்தாய்நீயே, ஊரும்புரமூன்று மட்டாய்நீயே யொண்டாமரை யானுமாலுங்கூடித், தேருமடியென்மேல் வைத்தாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. 11

திருச்சிற்றம்பலம்.

திருநெய்த்தானம்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

ஆர்த்தவெனக் கன்பனீயேயென்று மாதிக்கயிலாய னீயேயென்றுங், கூத்தநடமாட னீயேயென்றுங் கோடிகாமேய குழகாவென்றும், பார்த்தர்க் கருள்செய்தாய்நீயே யென்றும் பழையனூர்மேவிய பண்பாவென்றுந், தீர்த்தனே சிவலோக நீயேயென்று நின்றநெய்த்தானாவென் னெஞ்சுளாயே. 1

அல்லானாய்பகலானாய் நீயேயென்று மாதிக்கயிலாய னீயேயென்றுங், கல்லாலமர்ந்தாய்நீயேயென்றுங்காளத்திக் கற்பகமுனியேயென்றுஞ், சொல்லாப்பொருளானாய்நீயே யென்றுஞ், சோற்றுத்துறையுறைவாய் நீயேயென்றுஞ் செல்வாய்த் திருவானாய் நீயேயென்று நின்றநெய்த்தானா வென்னெஞ்சுளாயே. 2

முந்தியிருந்தாயு னீயேயென்று முன்கயிலைமேவினாய் நீயேயென்று, நந்திக்கருள்செய்தாய் நீயேயென்றுநடமாடி நல்லாறனீயேயென்றும், பந்திப்பரியாயு னீயேயென்றும் பைஞ்ஞீலிமேவினாய் நீயேயென்றுஞ், சிந்திப்பரியாயு னீயேயென்று நின்றநெய்த்தானாவென் னெஞ்சுளாயே. 3

தந்தைதா யில்லாதாய் நீயேயென்றுந் தலையார் கயி லாய நீயேயென்று, வெந்தாயெம்பிரா னானாய்நீயேயென்று மேகம் பத்தென்னீச னீயேயென்று, மூந்தியமுக்கணா னீயேயென்று மூலனூர்மேவினாய் நீயேயென்றுஞ், சிந்தை யால் தேனாராய் நீயேயென்று நின்றநெய்த்தானா வென் னெஞ்சளாயே. 4

திருச்சிற்றம்பலம்

திருப்பூந்துருத்தி-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை நினையாவென் னெஞ்சை நினைவித்தானைக், கல்லாதனவெல்லாங் கற்பித் தானைக் காணாதனவெல்லாங்காட்டினானைச், சொலலாதன வெல்லாஞ் சொல்லியென்னைத் தொடர்ந்திங் கடியேனை யாளாக்கொண்டு, பொல்லாவென் னோய்தீர்த்த புனிதன் றன்னைப் புண்ணியனைப் பூந்துருத்தி கண்டேனானே. 1

குற்றாலங்கோகரண மேவினானைக் கொடுங்கைக் கடுங்கூற்றைப் பாய்ந்தான்றன்னை, உற்றாலகஞ்சுண் டொடுக்கினை உணராவென் னெஞ்சை புணர்வித்தா னைப், பற்றாலின் கீழங் கிருந்தான்றன்னைப் பண்ணார்ந்த வீணை பயின்றான்றன்னைப், பற்றாடரவார்த்த புனிதன் றன்னைப் புண்ணியனைப் பூந்துருத்தி கண்டேனானே. 2

எனக்கென்று மினியானை யெம்மான்றன்னை யெழி லாரு மேகம்ப மேயான்றன்னை, மனக்கென்றும் வருவானை வஞ்சர்நெஞ்சில் நில்லானை நின்றியூர் மேயான்றன்னைத், தனக்கென்று மடியேனை யாளாக்கொண்ட சங்கரனைச்

சங்கவார் குழையான் றன்னைப், புனக்கொன்றைத் தாா ணிந்த புனிதன் றன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்தி கண்டேனானே. 3

மறுத்தானை மலைகோத்தங் கெடுத்தான்றன்னை மணிமுடியோ டிருபதுதோ ணெரியக்காலா, லிறுத்தானை, யெழுநரம்பி னிசைகேட்டானை யெண்டிசைக்குங் கண்ணா னான் சிரமேலொன்றை, யறுத்தானை யமரர்களுக் கமு தீந்தானை யாவர்க்குந் தாங்கொணா நஞ்சமுண்டு, பொறுத் தானைப் புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப் பூந்துருத்தி கண்டேனானே. 4

திருச்சிற்றம்பலம்.

திருமழபாடி-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நீறேறு திருமேனி யுடையான் கண்டாய் நெற்றிமே லொற்றைக்க ணிறைத்தான்கண்டாய், கூறாக வுமைபா கங் கொண்டான்கண்டாய் கொடியவிட முண்டிருண்ட கண்டன் கண்டா, யேறேறியெங்குந் திரிவான்கண்டா யேழுலகு மேழ்மலையு மானான்கண்டாய், மாறானார் தம்ம ரண மட்டான்கண்டாய் மழபாடிமன்னு மணாளன்றானே.

தாமரையான் றன்றலையைச் சாய்த்தான் கண்டாய் தகவுடையார் நெஞ்சிருக்கை கொண்டான் கண்டாய், பூம லரா னேத்தும் புனிதன்கண்டாய் புணர்ச்சிப் பொருளாகி நின்றான்கண்டா, யேமருவுவெஞ்சிலை யொன்றேந்தி கண்டா யிருளார்ந்தகண்டத் திறைவன்கண்டாய், மாமரு வுங்கலைகையி லேந்திகண்டாய் மழபாடிமன்னு மணா ளன்றானே. 2

ஒருசுடரா யுலகேழு மானான்கண்டா யோங்காரத் துட்பொருளாய் நின்றான்கண்டாய், விரிசுடராய் விளக் கொளியாய் நின்றான்கண்டாய் விழவொலியும் வேள் வொளியு மானான் கண்டா, யிருசுடர்மீதோடா விலங்கைக் கோனை யீடழிய விருபதுதோ ணிறுத்தான்கண்டாய், மருசுடரின் மாணிக்கக் குன்றுகண்டாய் மழபாடிமன்னு மணாளன்றானே. 8

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

போரானையீருரிவைப் போர்வையானைப் புலியதளே யுடையானை போற்றினானைப், பாரானைமதியானைப் பக லானைப் பல்லுயிரா நெடுவெளியாய்ப்பரந்துநின்ற, நீரா னைக் காற்றானைத் தீயானானை நிலையாதார் புரமெரிய நினைத்த தெய்வத், தேரானைத் திருவீழி மிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 1

சவந்தாங்கு மயானத்துச் சாம்பலென்பு தலையோடு மயிர்க்கயிறு தரித்தான்றன்னைப், பவந்தாங்கு பாசுபத வேடத்தானைப் பண்டமரர் கொண்டுகந்த வேள்வியெல் லாங், கவர்ந்தானைக் கச்சியேகம்பன் றன்னைக் கழலடைந் தான் மேற்கறுத்த காலன்வீழச், சிவந்தானைத் திருவீழி மிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 2.

அறுத்தானை யயன்றலைக ளஞ்சிலொன்றை யஞ்சாதே வரையெடுத்த வரக்கன்றோள்க, ளிறுத்தானை யெழுநரம்பி

ளிசைகேட்டானை யிந்துவினைத் தேய்த்தானை யிராவிதன் பற், பறித்தானைப் பகீரதற்காவானோர் வேண்டப்பரந்திழி யும்புனற்கங்கை பணிபோலாகச் செறுத்தானைத் திருவீழி மிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 3

கண்ணவன்காண் கண்ணொளிசேர் காட்சியான்காண் கந்தருவம் பாட்டிசையிற் காட்டுகின்ற, பண்ணவன்காண் பண்ணவற்றின் றிறலானான்காண் பழமாகிச் சுவையாகிப் பயக்கின்றான்காண், மன்னவன்காண் மயவன்கா ணீரா னான்காண் வந்தலைக்கு மாருதன்காண் மழைமேகஞ்சேர், விண்ணவன்காண் விண்ணவர்க்கு மேலானான்காண் விண் ணிழிதண் வீழிமிழலையானே. 4

சந்திரனைத் திருவடியாற் றளர்வித்தான்காண் தக்க னையு முனிந்தெச்சன் றலைகொண்டான்கா, ணிந்திரனைத் தோண் முறிவித்தருள் செய்தான்கா ணீசன்காணேசன் காணினைவோர்க்கெல்லா, மந்திரமு மறைப்பொருளு மாயி னான்காண் மாலொடயன் மேலொடுகீ ழறியாவண்ணம், வெந்தழலின் விரிசுடரா யோங்கினான்காண் விண்ணிழி தண் வீழிமிழலையானே. 5

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

திருமணியைத் தித்திக்குந் தேனைப்பாலைத் தீங்கரும் பினின் சுவையைத் தெளிந்தேற்றற், குருமணியைக் குழன் மொந்தை தாளம்வீணை கொக்கரையின் கச்சரியின் பாணி

யானைப், பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்
தைப் பருப்பதத்தி லருங்கலத்தைப் பாவந்தீர்க்கும், அரு
மணியை யாரூரிலம்மான்றன்னை யறியாதடிநாயே னயர்
த்தவாறே. 1

பொன்னேபோற் றிருமேனி யுடையான்றன்னைப்
போங்குவெண் ணூலானைப் புனிதன்றன்னை, மின்னானை
மின்னிடையாள் பாகன்றன்னை வேழத்தினுரி விரும்பிப்
போர்த்தான்றன்னைத், தன்னானைத் தன்னொப்பா ரில்லா
தானைத் தத்துவனை யுத்தமனைத் தழல்போன்மேனி, யன்
னானை யாரூரிலம்மான்றன்னை யறியாதடிநாயே னயர்த்த
வாறே. 2

எற்றானை யேழுலகு மானான்றன்னை யேழ்கடலு
மேழ்மலையு மானான்றன்னைக், கூற்றானைக் கூற்றமுதைத்
தான்றன்னைக் கொடுமழுவாள்கொண்டதோர் கையான்
றன்னைக், காற்றானைத் தீயானை நீருமாகிக் கடிக்கமழும்
புன்சடைமேற் கங்கைவெள்ள, ஆற்றானையாரூரிலம்மான்
றன்னை யறியாதடிநாயே னயர்த்தவாறே. 3

முத்தினை மணிதன்னை மாணிக்கத்தை மூவாத கற்ப
கத்தின் கொழுந்துதன்னைக், கொத்தினை வயிரத்தைக்
கொல்லேறூர்ந்து கோளரவொன்றாட்டுங் குழகன்றன்
னைப், பத்தனைப் பத்தர்மனத்துளானைப் பருதிபோற் றிரு
மேனி யுடையான்றன்னை, யத்தனையாரூரி லம்மான்
றன்னை யறியாதடிநாயே னயர்த்தவாறே. 4

சங்கரன்காண் சக்கரமாற்கருள் செய்தான்காண் தரு
ணேந்து சேகரன்காண் டலைவன்றான்கா, ணங்கம
லத் தயன்சிரங்க ளைந்திலொன்றை யறுத்தவன்கா ணணி

பொழில்சூழை யாற்றான்கா, ணெங்கள் பெருமான்கா ணென்னிடர்கண் போகவருள் செய்யு மிறைவன்கா ணிமையோரேத்துஞ், செங்கமல வயல்புடைசூழ் திருவா ரூரிற் றிருமூலத்தானத்தெஞ் செல்வன்றானே. 5

செருவளருஞ் செங்கண்மா லேற்றினான் காண்டெடன் றானைக் காவான்காண் டயில்விழ மருவலர்தம் புரமூன்று மெரி செய்தான்காண் வஞ்சகர்பா லணுகாதமைந்தன் றான்கா, ணருவரை யெடுத்தவன்றன் சிரங்கள்பத்து மைஞ் ஞான்குதோளு மெரிந்தலறவன்று, திருவிரலா லடர்ந்த வன்காண் திருவாரூரிற்றிரு மூலத்தானதெஞ் செல்வன் றானே. 6

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

ஒருவனு யுலகேத்த நின்றநாளோ வோருருவே மூவு ருவமானநாளோ, கருவனாய்க் காலனைமுன்காய்ந்தநாளோ காமனையுங் கண்ணனலால்விழித்தநாளோ, மருவனாய்மண் ணும்விண்ணுந் தெரித்தநாளோ மான்மழுக்கை யேந்தி யோர் மாதோர்பாகம், திருவினுள் சேர்வதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே. 1

மலையார்பொற் பாவையொடு மகிழ்ந்தநாளோ வான வரை வலியமுத மூட்டியஞான்று, நிலையேறு பெறுவித்து நின்றநாளோ நினைப்பரிய தழற்பிழம்பாய் நிமிர்ந்தநாளோ, அலைசாமேயலைகடனஞ் சுண்டநாளோ வமரர்கணம்படை

சூழ விருந்தநாளோ, சிலையால்முப் புரமெரித்தமுன்னோ
பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே. 2

பாடகஞ்சேர் மெல்லடிநற் பாவையாளு நீயும்போய்ப்
பார்த்தனது பலத்தைக் காண்பான், வேடனாய் வில்
வாங்கி யெய்தநாளோ விண்ணவர்க்குங் கண்ணவனாய்
நின்றநாளோ, மாடமொடு மாளிகைகள் மல்குதில்லை
மணிதிகழு மம்பலத்தே மன்னிக்கூத்தை, ஆடுவான் புகு
வதற்கு முன்னோபின்னோ வணியாரூர் கோயிலாக்
கொண்டநாளே. 3

ஓங்கியுயர்ந் தெழுந்து நின்றநாளோ வோருகம்போ
லேழுகமாய் நின்றநாளோ, தாங்கியசீர்த் தலையான
வானோர்செய்த தககன்றன் பெருவேள்வி தகர்த்தநாளோ,
நீங்கியநீர்த் தாமரையா னொடு மாலோடு நில்லாயெம் பெரு
மானே யென்றங்கேத்தி, வாங்கிமதி வைப்பதற்கு
முன்னோபின்னோ வளராரூர் கோயிலாக் கொண்டநாளே

பாலனாய் வளர்ந்திலாப்பான்மையானே பணிவார்கட்
கங்கங்கே பற்றானானே, நீலமா மணிகண்டத் தெண்டோ
ளானே நெருநலாயா யின்றாகி நாளையாகும், சீலமே சிவ
லோக நெறியேயாகுஞ் சீர்மையே கூர்மையே குணமே
நல்ல, கோலநீ கொள்வதற்கு முன்னே பின்னோ குளிரா
ரூர் கோயிலாக் கொண்டநாளே. 5

இறம்பலவும் வழிகாட்டிச் செய்கைகாட்டிச் சிறியை
யாய்ப் பெரியையாய் நின்றநாளோ, மறம்பலவு முடை
யாரை மயக்கந்தீர்த்து மாமுனிவர்க் கருள்செய்தங் கிருந்த
நாளோ, பிறங்கியசீர்ப் பிரமன்றன் றலைகையேந்திப்

பிச்சையேற்றுண்டுழன்று நின்றநாளோ, அறம்பலவு முரைப்பதற்கு முன்னே பின்னே வணியாரூர் கோயிலாக் கொண்டநாளே. 6

நிலந்தரத்து நீண்டுருவமான நாளோ நிற்பனவு நடப்பனவு நீயேயாகிக், கலந்துரைக்கக் கற்பகமாய் நின்ற நாளோ காரணத்தா ஞாரணனைக் கற்பித்தன்று, வலஞ்சுருக்கி வல்லசுரர் மாண்டுவீழ வாசுகியை வாய்மடுத்து வானோருய்யச், சலந்தரனைக் கொல்வதற்கு முன்னே பின்னே தண்ணாரூர் கோயிலாக் கொண்டநாளே. 7

பாதத்தான் முயலகனைப் பாதுகாத்துப் பாரகத்தே பரஞ்சுடராய் நின்றநாளோ, கீதத்தை மிகப்பாடு மடியார்க் கென்றுங் கேடிலா வானுலகங் கொடுத்தநாளோ, பூதத் தான் பொருநீலி புனிதன்மேவிப் பொய்புரையா மறை நால்வர் விண்ணோர்க்கென்றும், வேதத்தை விரிப்பதற்கு முன்னேபின்னே விழவாரூர் கோயிலாக்கொண்டநாளே.

புகையெட்டும் போக்கெட்டும் புலன்களெட்டும் பூதங்களவையெட்டும் பொழில்களெட்டும், கலையெட்டுங் காட்பெட்டுங் காட்சியெட்டுங் கழற்சே வடியடைந்தார் களைகணெட்டும், நகையெட்டு நாளெட்டு நன்மையெட்டு நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்களெட்டும், திசையெட்டுந் தெரிப்பதற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே. 9

ஈசனு யுலகேழு மலையுமாகி யிராவணனை யீடழித் திட் டிருந்தநாளோ, வாசமலர் மகிழ்தென்ற லானநாளோ மதயானை யுரிபோர்த்து மகிழ்ந்தநாளோ, தாதுமலர்ச் சண் டிக்குக் கொண்டநாளோ சகரர்களை மறித்திட்டாட்

கொண்டாரோ, தேசமுமையறிவதற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக் கொண்டாரே. 10

திருச்சிற்றம்பலம்.

பலவகைத்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நேர்ந்தொருத்தியொரு பாகத்தடங்கக்கண்டு நீளத்தளர வாயிரமாமுகத்தினோடு, பாய்ந்தொருத்தி படர்சடைமேற் பயிலக்கண்டு படவரவும் பனிமதியும்வைத்தசெல்வா, தாந்திருத்தித் தம்மனத்தை யொருக்காத் தொண்டர் தனித்தொரு தண்டூன்றிமெய்தளராமுன்னம், பூந்துருத்தி பூந்துருத்தி யென்பீராகிற் பொல்லாப்புலாற்றுருத்தி போக்கலாமே. 1

ஊற்றுத்துறை யொன்பதுண் ணின்றோரீ ரொக்கவடைக்கும்போ துணரமாட்டீர், மாற்றத்துறை வழிகொண்டோடாமுன்ன மாயமனைவாழ்க்கை மகிழ்ந்துவாழ்வீர், வேற்றுத்தொழில்பூண்டார் புரங்கண்மூன்றும் வெவ்வழல்வாய்வீழ்விக்கும்வேர்தன்மேய, சோற்றுத்துறை சோற்றுத்துறையென்பீராகிற் றுயர்நீங்கித் தூநெறிக்கட்சேரலாமே.

தந்தையார்தாயா ருடன்பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தாமாரே, வந்தவாறெங்ஙனே போமாறேதோ மாய மாமிதற்கேது மகிழவேண்டா. சிந்தையீருமக்கொன்று சொல்லக்கேண்மின் றிகழ்மதியும்வாளரவுந் திளைக்குஞ்சென்னி, யெந்தையார்திருநாம நமச்சிவாய வென்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே. 3

திருச்சிற்றம்பலம்.

தனித்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அப்பனீ யம்மைநீ யையனுநீ யன்புடையமாமனு மாமியுநீ, ஒப்புடைய மாதரு மொண்பொருளுநீ யொருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ, துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய்நீ, இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ யிறைவனீ யேறூர்ந்தசெல்வனீயே.

திருக்கோயி லில்லாத திருவி லூருந் திருவெண்ணீ றணியாத திருவி லூரும், பருக்கோடிப் பத்திமையாற்பாடா வூரும் பாங்கினொடு பலதளிக ளில்லாவூரும், விருப்போடு வெண்சங்க மூதாவூரும் விதானமும் வெண்கொடியு மில்லாவூரும், அருப்போடு மலர்பறித்திட் டுண்ணாவூரு மவையெல்லா மூரல்ல வடவிகாடே. 2

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகிற் றீவண்ணர் திறமொருகாற்பேசாராகில், ஒருகாலுந் திருக்கோயில்சூழாராகி லுண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில், அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகி லளியற்றார் பிறந்தவாறேதோவென்னில், பெருநோய்கண் மிகநலியப்பெயர்த் துஞ்செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே.

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன் குற்றமே பெரிதுடையேன் கோலமாய, நலம்பொல்லே னான்பொல்லேன் ஞானியல்லே னல்லாரோடிசைந்திலே னடுவேநின்ற, விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேனல்லேன்வெறுப்பனவு மிகப்பெரிதும் பேசவல்லேன்,

இலம்பொல்லே னிரப்பதே யீயமாட்டே னென்செய்
வான் றோன்றினே யேழையேனே. 4

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடு
வானாளத் தருவரேனும், மங்குவா ரவர்செல்வ மதிப்போ
மல்லோ மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில், அங்கமெலாங்
குறைந்தழுகு தொழுநோயரா யாவுரித்துத் தின்றுழலும்
புலையரேனும், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி
லவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே. 5

திருச்சிற்றம்பலம்.

திருப்புகலூர்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எண்ணுக்கே னென்சொல்லி யெண்ணுகேனோ
வெம்பெருமான் றிருவடியே யெண்ணினல்லாற், கண்ணி
லேன் மற்றோர் களைகணில்லேன் கழலடியேகைதொழுது
காணினல்லா, லொண்ணுளே யொன்பது வாசல்வைத்தா
யொக்கவடைக்கும்போ துணரமாட்டேன், புண்ணியா
வுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்
ணியனே. 1

அங்கமேபூண்டா யனலாடினா யாதிரையா யானிழலா
யானேறூர்ந்தாய், பங்கமொன்றில்லாத ப ர்சடையினாய்
பாம்பொடுதிங்கள் பகைதீர்த்தாண்டாய், சங்கையொன்
றியே தேவர்வேண்டச் சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவா
மூவாச், சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேன் திருப்
புகலூர்மேவிய தேவதேவே. 2

பைரவக்கச்சையாய் பால்வெண்ணீற்ருய் பளிக்குங் குழையினுய்ப் பண்ணுரின்சொன், மைவிரவு கண்ணுனைப் பாகங்கொண்டாய், மான்மறிக்கை யேந்தினுய் வஞ்சக் கள்வ, ரைவரையு மென்மேற் றரவறுத்தா யவர்வேண் டுங் காரியமிங்காவதில்லைப், பொய்யுரையா தூன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே. 3

தெருளாதார் மூவெயிலுந் தீயில்வேவச் சிலைவளைத் துஞ் செங்கணையாற் செற்றதேவே, மருளாதார் தம் மனத்தில் வாட்டந்தீர்ப்பாய் மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க்கென்று, மருளாகிய யாதியாய் வேதமாகி யவர் மேலா னீர்மேலாணுய்ந் துங்காணுப், பொருளாவா யுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே.

நீரேறு செஞ்சடைமே னிலாவெண்டிங்க ணீங்காமை வைத்துகந்த நீதியானே, பாரேறுபடுதலையிற் பலிகொள் வானே பண்டனங்கைப் பார்த்தானேபாவநாசா, காரேறு முகிலனைய கண்டத்தானே கருங்கைக்களிற் றுரிவை கதறப்போர்த்த, போரேறே யுன்னடிக்கே போதுகின் றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே. 5

விரிசடையாய் வேதியனே வேதகீதா விரிபொழில் சூழ் வெண்காட்டாய் மீயச்சூராய், திரிபுரங்க ளெரிசெய்த தேவதேவே திருவாரூர்த்திருமூலத் தானமேயாய், மரு வினியார் மனத்துளாய் மாகாளத்தாய் வலஞ்சுழியாய் மாம றைக்காட் டெந்தாயென்றும், புரிசடையா யுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே. 6

தேவார்ந்ததேவனைத் தேவரெல்லாந் திருவடிமேலல ரிட்டுத் தேடிநின்று, நாவார்ந்தமறைபாடி நட்டமாடி நான்

முகனு மிந்திரனு மாலும்போற்றக், காவார்ந்த பொழிற் சோலை காணப்பெற்றாய் கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின், பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே. 7

நெய்யாடி நின்மலனே நீலகண்டா நிறையுடையாய் மறைவல்லாய் நீதியானே, மையாடு கண்மடவாள் பாகத் தானே மான்றோலுடையாய் மகிழ்ந்துநின்றாய், கொய்யாடு கூவிளங் கொன்றைமாலை கொண்டடியே னுனிட்டுக் கூறி நின்று, பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 8

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூயநீற்றாய் துதைந் திலங்குவெண்மழுவாள் கையிலேந்தித், தன்னனையுந் தண் மதியும் பாம்புநீருஞ் சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே, யன்னநடைமடவாள் பாகத்தானே யக்கரவம் பூண்டானே யாதியானே, பொன்னங்கழலடிக்கே போது கின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 9

ஒருவனையுமல்லா துணராதுள்ள முணர்ச்சித்தடுமாற் றத் துள்ளேநின்ற, விருவரையு மூவரையு மென்மேலேவி யில்லாத தரவறுத்தாய்க் கில்லேனேலக், கருவரை சூழ் கான விலங்கைவேந்தன் கடுந்தேர்மீதோ டாமைக்காலாற் செற்ற, யொருவரையா யுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 10

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர்-வர்த்தமானேசுவரர்,

தேவியார்-கருத்தார் குழலம்மை.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவடிகளே சரணம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

உ

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு

கைலாயபதியின் பிரதிவிம்பமாகக் கண்ணாடியினின்றுந் தோன்றி ஆலாலசுந்தரனென்ற திருநாமத்தோடு கயிலாயத்திற் சிவபெருமானுக்குத் தொண்டுசெய்யுநாளில் ஒருநாள் மலர்கொய்ய நந்தவனஞ் சென்று அங்கு மலர் கொய்து கொண்டிருந்த அனிந்திதை கமலினி என்னும் பார்வதியார் தோழியரைக் கண்டு காதல்கொண்டு மீண்டு மனைச் செல்லவிடாது தடுத்து சுவாமி சந்நிதி சேர்ந்தனர். கயிலாயபதி இதனையறிந்து உமையாள் தோழிகள்பால் உன் மனஞ் சென்றமையால் அவர்களுடன் பூலோகத்திற் பிறந்து இன்பமனுபவித்துப் பின்பு வந்து சேரக் கடவையென்று கட்டளையிட்டருளினார். ஆலாலசுந்தரர் மனங்கலங்கி அடியேனது பிழையைப் பொறுத்து நான் மானிடனாய் மயங்கும்போது தடுத்தாட்கொள்ளல்வேண்டுமென்று வேண்ட பரமசிவன் கிருபை கூர்ந்தருளினார்.

அக்காரணத்தால், திருநாவலூரில் சடையனாரென்னும் பிராமணருக்கு அவர் மனைவி இசைஞானியாருக்கு குமாரனாகப் பிறந்து நம்பியாரூரரென்ற திருநாமத்தோடு கலை பயின்று வளர்ந்து விவாகத்திற்கிணங்கி திருமணக்கோலம்

பூண்டு புத்தூருக்குச் சென்று, விவாகச் சடங்கி லிருக்கையில் பரமசிவன் முன்னம் கயிலையி லருளியபடி தடுத்தாட்கொள்ளும்பொருட்டு, ஒருகிழப்பிராமண வடிவங்கொண்டு கலியாணப்பந்தலில் சபையாருக்கு எதிரில் வந்து, நம்பியாரூரரைநோக்கி, உன்னிடத்திலெனக்கொரு வழக்கிருக்கிறது; அதனைத் தீர்க்காது விவாகஞ் செய்துகொள்ளக்கூடாதென்றார். அவ்வழக்கென்னென்று நம்பியாரூரர் கேட்க, கிழவடியார் சபையாரை நோக்கி, இவ்வாரூரன் எனதடிமைஇது தான்வழக்கென்றார். நம்பியாரூரர் இதைக் கேட்டு நகைக்க, கிழவர் அவரை நோக்கி உனது பாட்டனெழுதிக்கொடுத்த முறியோலை யிதோ யிருக்க நீ நகைப்பானேனென்றார். பிராமணர் பிறருக்கு அடிமையாகுதல் இவ்வுலகிலில்லை. நீர் பித்தனோ வென்று நம்பியாரூரர் சொல்ல, கிழவர் எதைச் சொன்னபோதிலும் நமக்கு அடிமை செய்ய வேண்டுமென்றார். நம்பியாரூரர் கோபங்கொண்டு ஓலையைக் காட்டுமென்று சுவாமியைத் துரத்தி ஓலையைப் பறித்துக் கிழித்தெறிந்து விட்டார். உடனே கிழவடிவர் நம்பியாரூரரைப் பிடித்துக்கொண்டலற, அங்கிருந்தவர்கள் விலங்கி நீரெங்கிருப்பவரென்று கேட்க வெண்ணெய் நல்லூரிலென்றார். அவ்விதமாயினும் அந்த தப்பு வழக்கை அங்குள்ளோரிடஞ் சொல்லிக் கொள்வோமென்று நம்பியாரூரர் சொல்ல, இருவரும் புறப்பட்டு வெண்ணெய் நல்லூருக்குச் சென்று அங்கு கூடியிருந்த பிராமணர்களை நோக்கி, ஓ பிராமணர்களே! இந்த நம்பியாரூர னெனக் கடிமையென்று நான் காட்டிய ஓலையைப் பிடுங்கிக் கிழித்தெறிந்து விட்டானென்றார். அவனை யவர்கள் கேட்டுச் சாட்சியு முண்டோ வென, கிழவர் முன்

கிழித்தது படியோலை மூலவோலையை யெடுத்து வந்து காட்டுகிறேனென்று சொல்லிப்போய்க் கொண்டுவந்து காட்டினார். அதில் திருநாவலூரி லிருக்கும் ஆதி சைவப் பிராமணராகிய ஆரூரனென்னும் பெயருள்ள நான் திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் பித்தனுக்கு எழுதிக் கொடுத்த முறியோலையாவது: இத் தேதி முதல் நானுமெனது பரம்பரையாய் வருகின்ற வென் சந்ததியாரும் கொத்தடிமை செய்யும்படி மனவாக்கொத்து எழுதிக் கொடுத்தேன். இதற்கிதுவே யென் கையெழுத்து என்றெழுதி யிருப்பதோடு அதிலெழுதி யிருக்குஞ் சாட்சிகள் பெயரும் நம்பியாரூரது பாட்டனார் கையெழுத்து மொத்திருக்கக்கண்டு நம்பியாரூரரைப் பார்த்து நீரிந்தப் பிராமணருக் கடிமைசெய்ய வேண்டியது முறைமை யென்றார்கள்.

அதனை நம்பியாரூர ரேற்றுக்கொள்ள சபையார் கிழவடிவரை நோக்கி, ஐயரே! உமக்கிவ்வூரில் மாளிகை யெங்கென்ன? காட்டுகிறேனென் றாலயத்துட்சென்று மறைந்து விட்டார். இதைக் கண்டெல்லோரும் திகைத்து நின்றார்கள் நம்பியாரூரர் தொடர்ந்தழைக்க, சுவாமி தேவியாரோடு இடபதி லெழுந்தருளி முன்னம் கயிலையில் நடந்ததைச் சொல்லித் தான் முன்னளித்த வாக்கின்படி தடுத்தாட் கொண்டோமென்று சொல்லி யருளினார். நம்பியாரூரர் உடனே தொழுது துதிக்க, சிவபெருமான், அன்பனே! நீ நம்மை வன்மை பேசி வன்றொண்ட னென்னும் பெயர் பெற்றனை; நமக்குப் பாட்டே யருச்சனையாதலால் நம்மை பாடக்கடவை யென்றருளினார். நம்பியாரூரர் பணிந்து, கர்த்தனே! தேவரீரது பெருமை கண்

டறியா வடியேனென்னென்று பாடுவேனென்ன, நீ முன் நம்மைப் பித்தனென்றதால் அதனையே பெயரா யமைத்துப் பாடக்கடவையென் றருளினார். அவ்விதமே "பித்தா பிறைசூடி" என்னுந் திருப்பதிகமோதி யருளினர். சிவபெருமான் திருவுள மகிழ்ந்து, தலமெங்குஞ் சென்று பாடக்கடவையென் றருளினார்.

அவ்வாறே திருவாரூருக் கெழுந்தருளி சுவாமியைத் தரிசித்து திருத்துறையிற் சேர்ந்து தவநெறி யருளப் பெற்று திருவதிகை வீரட்டானத்திற்கு எழுந்தருளி திருநாவுக்கரசு நாயனா ருழவாரப்பணி செய்த தலமாதலால் அதில் மிதிப்பதற் கஞ்சி புறத்திலிருக்குஞ் சித்தவட மடத்தி லெழுந்தருளி வீரட்டா னேஸ்வரரைத் தியானித்து சயனித்துக்கொண்டனர். சுவாமி ஒருவிருத்தபிராமணராய் வந்து இவருடைய தலைமேற் றனது திருவடியை நீட்டி நித்திரை செய்வார் போலிருக்க, நம்பியாரூரர் தன் சிரமேற் பாதநீட்டி யிருப்பவராரென்று வினவினார். என் வயோதிகத்தால இடமறியாது நீட்டினேனென்று சுவாமி சொல்ல, நாயனார் வேறோர்புறந் தலைவைத்துக் கொண்டனர். மீண்டும் சுவாமி யவ்வாறே செய்ய, நாயனார் பலகாலும் என் சிரமேற் பாதம் வைக்கும் நீராரோ வென்று கேட்க, என்னை யறியாயோவென்று மறைந்து விட்டனர். உடனே சுவாமியென் றறிந்து, "தம்மானை யறியாத சாதியாருளரோ" வென்னும் பதிகமோதி சிதம்பரஞ் சென்று பதிகமோதிப்பணிந்தபோது நீ திருவாரூருக்குவாவென்று அசரீரி வாக்குண்டாகச் சீர்காழிக்குப்போய், சம்பந்தமூர்த்தியார் பிறந்தவிட மாகையா லுள்ளே மிதிப்பதற் கஞ்சி வலமாக வந்து சிவபெருமான் தரிசனந் தர

தருளப் பதிகமோதித் துதித்து மற்றத் தலங்களையுந் தரிசித்து திருவாரூர்க் கெழுந்தருளி நாடோறும் காலங்களிற் சுவாமியைத் தரிசித்துக்கொண் டிருந்தனர்.

பார்வதியார் தோழிகளில் கமலினி யென்பவள், திருவாரூரிலுள்ள உருத்திரகணிகைமாரி லொருவரிடத்திற் பிறந்து, பரவையாரென்னும் பெயரோடு வளர்ந்து, புற்றிடங்கொண்டாரை நாடோறுந் தரிசிப்பவள் ஒருநாள் சந்நிதியிற் சுந்தரமூர்த்தியாரைக் கண்டு இச்சைகொண்டு விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று இருவருஞ் சுவாமியைப் பிரார்த்திக்க, சுவாமி கிருபை கூர்ந்து அத்தலத்துள்ளோர்க்குந் திருத்தொண்டர்களுக்குஞ் சொப்பனத்திற் சொல்ல, அவர்கள் அவ்விதமே யிருவர்க்கும் விவாகஞ்செய்து வைத்தார்கள். நாடோறுந் தரிசனத்திறகுச் செல்பவரொருநாட் செல்லும்போது தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருக்குந் திருத் தொண்டர்களைப் பார்த்து, இவர்கட்கு நானடியவனாகும்படி தியாகராஜ ரென்னைக் கருளுவாரோவென் றெண்ணிச் செல்ல, சுவாமி தரிசனந் தந்து, "தில்லைவாழந்தணர்" என்று முதலடியெடுத்துக் கொடுக்க, அவ்வாறே அடியேன் அடியேன் என்று திருத்தொண்டத் தொகையோதிப் பணிய, மண்டபத்திலுள்ளோர் மகிழ்ந்தனர்.

பின்பு திருக்கோவிலூர்க் கெழுந்தருளி சுவாமியைத் தரிசித்து, குண்டையூர் கிழார் கொடுத்த நெற்களெல்லாந் திருவாரூரில் வந்து சேர கிருபை செய்யும்படி பதிகமோத அவ்விதமே பூதங்கள் கொண்டுவந்து சேர்க்கப் பரவையார் திருமாளிகையில் வந்திருந்தனர். சிலநாட்சென்று கோட்

புலிய நாயனு ரிவரை யுபசரித்து சிங்கடி, மனப்பகை யென்னும் தமது புத்திரிகளைப் பணிசெய்ய அங்கீகரித் தருளும்படி வேண்ட, அவர்களைப்புத்திரிகளாகப் பாவித்து திருப்பதிகக் கடைகாப்பிலுஞ் சிங்கடியப்பனென்றோதித் திருவாரூருக்கு வந்து சேர்ந்தார். அங்கு பங்குனித் திரு விழா சமீபிக்க அதற்குப் பொருள் வேண்டி யிருந்ததால் திருப்புகலூருக்குச் சென்று பதிகமோதி தரிசித்து செங் கல்லைதலைக்கணையாகவைத்துச் சயனித்து விடிந்தெழுந்து அக்கல் பொன்னுயிருக்க அதனை யெடுத்துக்கொண்டு திருப்பனையூருக்குப் புறத்தே போகும்பொழுது, சிவபெரு மான் திருக்கூத்தாடும் காட்சி தந்தருளப் பணிந்து பதிக மோதி விடைபெற்றுத் திருவாரூரிற் சேர்ந்தனர்.

பின்பு சோழநாட்டிலும் கொங்கு நாட்டிலுமுள்ள தலங்களைத் தரிசித்து மீண்டும் விருத்தாசலத்திற் கெழுந் தருளிப் பொன்வேண்டிப் பதிகமோத, சுவாமி பன்னீரா யிரம் பொன் தந்தருளினுர். நாயனுர், சுவாமி! தேவரீர் இப்பொன்னையெல்லா மிந்தமணிமுத்தா நதியிலிட்டு, திரு வாரூர் குளத்தில் வரக் கிருபை செய்தல் வேண்டுமென்று பிரார்த்திக்க, சுவாமி யவ்விதமே கிருபை செய்தார். நாய னுர் திருவாரூருக் கெழுந்தருளி பரவையாருடன் கமலா லய தீர்த்தத்தை யடைந்து பொன்னெல்லா மெடுத்துக் கொண்டு பரவையார் மாளிகையில் சிலநாளிருந்தனர். பின்பு திருக்குருகாவூருக்குச் சமீபத்தி லெழுந்தருளும் போது, வன்றொண்டா பசித்து வருகின்றனரென்று சுவாமி திருவுளமிரங்கி மார்க்கத்திலொரு சோலையுந் தடாகமுந் தண்ணீர்ப்பந்தலு முண்டாக்கிக் கட்டமுதும் வைத்துக் கொண்டு ஒரு பிராமணர்போ லிருந்து அங்கு சேர்ந்த

தொண்டரை நோக்கி, நீர் மிகவும் பசித்திருக்கிறதால் நம் மிடத்துள்ள கட்டமுதைச் சாப்பிடுமென்று கொடுக்க பரி சனத்தாருடனுண்டு நீரருந்தி சற்று சயனித்துக்கொண் டிருந்தனர். உடனே சுவாமி சோலை முதலியனவுடன் மறைந்துவிட்டார். நாயனார் நித்திரைநீங்கியெழுந்து முன் னிருந்தவரைக் காணாது, பரமசிவன் செயலென் றறிந்து திருக்கச்சூருக்கு வர, தம்முடைய தொண்டர் பசியுட னிருக்கக் கண்ட சுவாமி வேதியரைப்போல வந்து, நீர் பசித்திருப்பதா லிங்குள்ள பிராமணர்கள் வீட்டி லாகாரம் வாங்கி வருகிறேனென்று சொல்லிப்போ யாசித்து வாங்கி வந்தளிக்க தொண்டர்களோடு நாயனார் புசித்துப் பசியாறி னார். உடனே சுவாமி மறைந்துவிட்டார். சிவபெருமான் திருவடிகளுக்கு வருத்தம் கொடுத்தோமென்று கலங்கித் துதிசெய்து, திருவொற்றியூருக் கெழுந்தருளி சுவாமி யைத் தரிசித்துப் பதிகமோதி, அவ்வாலயத்திற் றொண்டு செய்து வந்த சங்கிலியாரைக் கண்டு இச்சைகொண்டு பரவையாரிடம் போவதில்லையென்று சுவாமி முன் மகிழ மாத்தடியிற் பரவசஞ் செய்துகொடுத்து விவாகஞ்செய்து கொண்டு சிலகாலமிருந்து, தியாகரைத் தரிசிக்க மனங் கொண்டு புறப்பட்டுவர, சிவபெருமான் திருவிளையாட்டா லிரு கண்களுங் தெரியாமற் போயின. திருவெண்பாக் கத்தை யடைந்து ஊன்றுகோல் பெற்று, காஞ்சீபுரஞ் சென்று இடக்கண்பெற்று, திருவாரூரை யடைந்து வலக் கண்ணும்பெற்று, பரவையார் பிணக்கை நீக்கும்பொருட்டு சுவாமியைத் தூதுவிடுத்து ஊடல் தீர்ந்தபின் மாளிகைக் கெழுந்தருளி மகிழ்வடைந்து சுவாமியைக் காலங்கடோ றுந் துதித்து வந்தனர்.

இவர் தன் நாயகியிடஞ் சுவாமியைத் தூதுவிடுத்ததைத் திருப்பெருங்கமலத்தி லிருந்த கலிக்காம நாயனார் கேள்விப்பட்டு மிகச் சீற்றங்கொண் டிருந்தனர். இதை சுந்தரமூர்த்தியா ரறிந்து தாஞ் செய்தது குற்றமே யென்றுடன்பட்டு சுவாமியிடம் விண்ணப்பஞ் செய்ய, சிவபெருமான் இருவரையும் கட்டுப்படுத்தக் கருதி, கலிக்காமனார் வயிற்றிற் சூலைநோய் விடுத்து வருத்தி அவரிட மெழுந்தருளி அன்பனே! நமது வன்றொண்டனாலன்றி இச் சூலைநோய் தீராதென்றருள, அவன் வந்து தீர்ப்பதினு மிவ்வாறு துன்பப்படுவதே நலமென்றார், சுவாமி சுந்தரரிடம்போய் நீ யுடனேசென்று கலிக்காமன் நோயைத் தீர்க்கக்கடவை யென்றருள, நாயனாருஞ் சென்றார். இவர் வருவதைக் கேள்வியுற்ற கலிக்காமனாயனார் மிகத் துயரெய்தி உடைவாளால் வயிற்றைக் கிழித்துக்கொண் டிறந்தனர். வன்றொண்டர் போய்க் கண்டு இது என்னால் விளைந்ததால் நானும் மாய்வேனென்று கலிக்காமர் கையிற் சூரியவாளை வாங்கும்போது சிவபெருமான் திருவருளால் கலிக்காமர் உயிர்பெற்றெழுந்து ஒருவரையொருவர் தழுவி பிறகு இருவருந் திருவாரூர்க் கெழுந்தருளி சுவாமியைத் தரிசித்து கலிக்காமர் அவரும்ரக இவர் திருவாரூரி லிருந்தனர்.

பின்பு திருநாகைக்காரோணஞ் சென்று திருப்பதிக மோதி பொன்னும் நவரத்தினங்களும் ஆபரணங்களும் வஸ்திரங்களும் குதிரைகளும் உடைவாள் முதலியனவும் பெற்று திருவாரூருக் கெழுந்தருளினார். சேரமான்பெருமாநாயனார் வர சிலநாள் அவருடன் பரவையார் வீட்டி

விருந்து பின்பவருடன் சென்று சோழநாட்டிலும் பாண்டிய நாட்டிலுமுள்ள தலங்களைத் தரிசித்து மீண்டுந் திருவாரூருக்கு வந்தார்கள்.

சிலகாலஞ் சென்று நாயனாரைச் சேரமான் பணிந்து தமதூருக் கெழுந்தருளும்படி பிரார்த்திக்க, நாயனார் இசைந்து திருக்கண்டியூரை யடைந்து சுவாமியைத் தரிசித்து, திருவையாற்றுக்குச் செல்லக்கூடாமல் காவேரிநதி பெருகி வரக்கண்டு பதிகமோத வெள்ளமணை போட்டது போல் நிற்க, மத்திய மணல்வழியே போய் பஞ்சநதி ஈஸ்வரரைத் தரிசித்து சேரமான் பெருமாநாயனார் நகரமாகிய கொடுங்கோளூருக்குச்சென்று அவர் மாளிகையிற் சிலகாலமிருந்தார். பின்பு திருவாரூருக்குப் புறப்பட சேரமான் தமது பொக்கிஷநிதிகளைப் பொதிகட்டி ஆட்கள்வச மனுப்பினார். அவ்வாட்கள் திருமுருகன் பூண்டிக் கருகில் வரும்போது சிவபெருமான் ஏவலாற் பூதகணங்கள் வேடராய் வந்து, வழிமறித்துக் கவர்ந்து கொண்டார்கள். இதனை நாயனார் கேட்டு சந்நிதியிற் சென்று பதிகமோதி அப்பொருளெல்லாங் கோபுரவாயிலில் வந்திருப்ப அவற்றை யெடுத்துக்கொண்டு திருவாரூரிற் சேர்ந்தனர்.

சிலகாலஞ்சென்று சேரமானைக்காண விரும்பி திருப்புக்கொளியூரில் செல்லும்போது ஒருவீட்டில் மங்கலவோசையும, மற்றொரு வீட்டில் அழுகை யோசையுமாயிருக்கக்கண்டு நடந்ததை விசாரித்தறிந்து அப் பிள்ளை இறந்த ஏரிக்குச்சென்று பதிகமோத அப்பிள்ளையை விழுங்கின முதலை வந்து கக்கிவிட்டது. உடனே அடுத்த

வீட்டுப் பிள்ளையைப்போல இப் பிள்ளைக்கும் உபநயனச் சடங்கு நிறைவேற்றிய பின்பு சேரமான் நகரஞ் சேர்ந்து அவர் வீட்டிலிருந்தனர். பின்பு அம் மலை நாட்டிலுள்ள தலங்களையெல்லாந் தரிசித்துக்கொண்டு மாகோதைக்குத் திரும்பினர். அங்கு சிலநா ளிருக்கையில் ஒருநாள் சேரமான் ஸ்நானஞ் செய்துகொண்டிருக்கும்போது திருவாஞ்சைக் களத்துக்குப்போய் சுவாமியைத் தரிசித்து, தேவரீர் திருவடியி லடியேனைச் சேர்த்தருளல்வேண்டுமென்று பதிகமோதினர். உடனே சிவபெருமான் தேவர்களை நோக்கி வெள்ளையானையுடன் சென்று வன்றொண்டனை யழைத்து வாருங்களென்று கட்டளையிட, அவர்க ளவ்வாறேசென்று சுந்தரமூர்த்தி நாயனரைக்கண்டு தொழுது ஸ்ரீ கயிலாயபதியின் கட்டளையைச் சொல்ல, நாயனர் சுவாமியை நினைத்து மகிழ்ந்து வணங்கி வெள்ளை யானை மீது ஆரோகணித்துச் செல்லும்போது, தமது நண்பராகிய சேரமானை நினைந்து சென்றார் சேரமான் அதை யறிந்து குதிரையேறி திருவாஞ்சைக்களத்து வந்து, நாயனர் செல்வதைக் கண்டு, குதிரைக்காதில் பஞ்சாட்சரமோதி அந்தரத்திற் சென்று நாயனரைப் பிரதக்ஷணஞ் செய்து, வெள்ளை யானைக்கு முன்னகப் போயினர். நாயனர், 'தானெனை முன்படைத்தா' னென்னுந் திருப்பதிக மோதிக் கயிலாயத்தைக் கெழுந்தருளி சிவபெருமானுடைய திருவடிக்கண் வணங்கித் துதித்து முன்னிருந்த ஆலால சுந்தரராகித் திருத்தொண்டு செய்துகொண்டிருந்தனர். அத்திருப்பதிகம் வருணதேவனல் திருவாஞ்சைக் களத்துக்கு வந்து எங்கும் விளக்கமுற்றது.

சேரமான் பெருமாணாயனுர் கயிலாயஞ் சென்ற போது தடைப்பட்டும் பின்பு தானருளிச் செய்த ஞான வுலாவை, சிவபெருமானின் முன்னிலையி லரங்கேற்றிச் சிவபெருமா னருள்பெற்று சிவகணநாதராகி சுவாமியைச் சேவிப்பா ராயினுர். பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினியும் அனிந்திதையுமாகி பார்வதியாருக் குத் தொண்டு செய்து வந்தனர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு

முற்றிற்று

சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

தேவாரப் பதிகங்கள்

திருவெண்ணெய்நல்லூர்ப்பதிகம்-பண்-இந்தளம்

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
ளத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. [டுறையு

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரித் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
ளாயாவுனக் காளாயினி யல்லேனென லாமே [டுறையு

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி [டுறையு
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
ளன்னேயுனக் காளாயினி யல்லேனென லாமே. 3

முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்ற மூர்த்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக்குறிக் கொண்ணீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
ளடிகேளுனக் காளாயினி யல்லேனென லாமே. [டுறையு

பாதம்பணி வார்கள்பெறு பண்டம்மது பணியா
யாதன்பொரு ளானேனறி வில்லேனரு ளாளா

தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டு
ளாதீயுனக் காளாயினி யல்லேனென லாமே. [றையு

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனி
யெண்ணார்புர மூன்றுமெரி யுண்ணநகை செய்தாய்[றையு
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டு
ளண்ணாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 6

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய் [டுறையு
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
ளானாயுனக் காளாயினி யல்லேனென லாமே. 7

ஏற்றார்புர மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேறாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீ [டுறையு
ரேற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
ளாற்றாயுனக் காளாயினி யல்லேனென லாமே. 8

மழுவாள்வல னேந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன் தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ளழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே. [டுறையு

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையாற்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச் [டுறையு
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
ளாரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-தடுத்தாட்கொண்டவீசுரர்
தேவியார்-வேற்கண்மங்கையம்மை.

திருப்புகலூர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ்சார்வினுந்தொண்டர் தருகிலாப், பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை புகலூர்பாடுமின் புலவீர்கா, ளிம்மையே தருஞ்சோறுங் கூறையு மேத்தலா மிடர்கெடலுமா, மம்மையே சிவலோக மாள்வதற் கியாதுமையுற வில்லையே. 1

மிடுக்கிலாதானை வீமனே விறல்விசயனே வில்லுக் கிவனென்று கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலைப், பொடிக்கொண் மேனியெம்புண்ணிய னெந்தைபுகலூரைப் பாடுமின் புலவீர்கா, ளடுக்குமே லமருலக மாள்வதற் கியாதுமையுற வில்லையே. 2

காணியேற்பெரி துடையனே கற்றுநல்லனே சுற்ற நன்கிளை, பேணியேவிருந் தோம்புமேயென்று பேசினுங் கொடுப்பாரிலைப், பூணிபூண்டுழப் புட்சிலம்புந் தண்புகலூர் பாடுமின்புலவீர்கா, ளாணியாயமருலக மாள்வதற் கியாதுமையுற வில்லையே. 3

நரைகள்போந்து மெய்தளர்ந்து மூத்துடல்நடுங்கி நிற்குமிக்கிழவனை, வரைகள்போற்றிர டோளனேயென்று வாழ்த்தினுங் கொடுப்பாரில்லைப், புரைவெள்ளேறுடைப் புண்ணியன் புகலூரைப் பாடுமின் புலவீர்கா, ளரையனா யமருலக மாள்வதற் கியாதுமையுற வில்லையே. 4

வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப் பாவியை வழக்கில்லியைப், பஞ்சதுட்டனைச் சாதுவேயென்று பாடினுங்

கொடுப்பாரிலைப், பொன்செய் செஞ்சடைப் புண்ணியன்
புகலூரைப் பாடுமின் புலவீர்காள், நெஞ்சிறேயறுத்
தஞ்சுபோவதற் கியாதுமையுற வில்லையே. 5

நலமிலாதானை நல்லனேயென்று நரைத்தமாந்தரை
யிளையனே, குலமிலாதானைக் குலவனேயென்று கூறினுங்
கொடுப்பாரிலைப், புலமெலாம் வெறிகமழும் பூம்புகலூ
ரைப் பாடுமின்புலவீர்கா, ளலமரா தமருலகமாள் வதற்
கியாதுமையுற வில்லையே. 6

நோயனைத்தளந் தோளனேயென்று நொய்யமாந்த
ரைவிழுமிய, தாயன்றோ புலவோர்க்கெலாமென்று சாற்றி
னுங் கொடுப்பாரிலைப், போயுழன்று கண்குழியாதே
யெந்தைபுகலூரைப் பாடுமின்புலவீர்கா, ளாயமின்றிப்
போயண்டமாள்வதற் கியாதுமையுற வில்லையே. 7

எள்விழுந்திடம் பார்க்குமாகிலுமீக்குமீகில னாகிலும்,
வள்ளலேயெங்கண் மைந்தனேயென்று வாழ்த்தினுங்
கொடுப்பாரிலைப், புள்ளெலாஞ்சென்று சேரும்பூம்புகலூ
ரைப் பாடுமின்புலவீர்கா, ளள்ளற்பட் டழுந்தாதுபோ
வதற் கியாதுமையுற வில்லையே. 8

இது பொன்வேண்டுங் குறிப்புடன் பதிகமோதித் துதி செய்யவுஞ் சுவாமி இருவை செய்யாமையால் மன வெறுப்புடன் திருமடத்துக் கெழுந்தருளாமல் ஆலயத்தில் திருப்பணிக்காக வந்திருந்த செங்கற்களைப் பரப்பி அதன் மேல் பள்ளிகொண்டு துயில்கூர்ந்து அது நீங்கி யெழுந்த போது செங்கற்கள் பொன்னாயிருக்கக் கண்டு மகிழ்ந்து ஓதித் துதிசெய்தருளிய பதிகம்.

கற்றிலாதானைக் கற்றுநல்லனே காமதேவனையொக்குமே, முற்றிலாதானை முற்றனேயென்று மொழியினுங் கொடுப்பாரிலைப், பொத்திலாங் தைகள்பாட்டறாப் புகலூரைப் பாடுமின்புலவீர்கா, ளத்தனுமம ருலகமாள்வதற் கியாதுமையுற வில்லையே. 9

தையலாருக்கோர் காமனேசால நல்வழக்குடை யையனே கையுலாவிய வேலனேயென்று கழறினுங்கொடுப்பாரிலைப் பொய்கைவாவியின்மேதியாய் புகலூரைப் பாடுமின்புலவீர் காளையனுமம ருலகமாள்வதற் கியாதுமையுற வில்லையே. [கா

செறுவிலினிற்செழுங் கமலமோங்கு தென்புகலூர் மேவிய செல்வனை, நறவம்பூம்பொழில் நாவலூரன் வனப்பகையப்பன் சடையன்றன், சிறுவன்வன்றொண்டனூரன் பாடிய பாடல் பத்திவை வல்லவ, ரறவனூரடிசென்று சேர்வதற் கியாதுமையுற வில்லையே. 11

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-அக்கினீசுவரர், தேவியார்-கருந்தர் குழலம்மை.

திருக்கூடலையாற்றூர்-பண்-புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

வடிவுடைமழுவேந்திமதகரியுரிபோர்த்துப்
பொடியணிதிருமேனிப்புரிகுழலுமையோடுங்
கொடியணிநெடுமாடக்கூடலையாற்றூரி
லடிகளிவ்வழிபோந்தவதிசயமறியேனே. 1

வையகமுழுதுண்டமாலொடுநான்முகனும்
பையிளவரவல்குற்பாவையொடும்முடனே
கொய்யணிமலர்ச்சோலைக்கூடலையாற்றூரி
லையனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. 2

ஊர்தொறும்வெண்டலை கொண்டுண்பலியிடுமென்று
வார்தருமென்முலையாண்மங்கையொடும்முடனே
கூர்நுனைமழுவேந்திக்கூடலையாற்றூரி
வார்வனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. 3

சந்தணவும்புனலுந்தாங்கியதாழ்சடையன்
மந்தணவும்விரலாள்பாவையொடும்முடனே
கொந்தணவும்பொழில்சூழ்கூடலையாற்றூரி
லந்தணன்வழிபோந்தவதிசயமறியேனே. 4

வேதியர்விண்ணவரும்மண்ணவருந்தொழநற்
சோதியதுருவாகிச்சுரிகுழலுமையோடுங்
கோதியவண்டறையுங்கூடலையாற்றூரி
லாதிவ்வழிபோந்தவதிசயமறியேனே. 5

வித்தகவீணையொடும்வெண்புரிநூல்பூண்டு
முத்தனவெண்முறுவன்மங்கையொடும்முடனே
கொத்தலரும்பொழில்சூழ்கூடலையாற்றூரி
லத்தனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. 6

மழைநுழைமதியமொடுவாளரவஞ்சடைமே
விழைநுழைதுகிலல்குலேந்திழையாளோடுங்
குழையணிதிகழ்சோலைக்கூடலையாற்றூரி
லறவனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. 7

மறைமுதல்வானவருமாலயனிந்திரனும்
பிறைநுதன்மங்கையொடுபேய்க்கணமுஞ்சூழக்
குறள்படையதனோடுங்கூடலையாற்றூரி
றலவனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. 8

வேலையினஞ்சுண்டுவிடையதுதானேறிப்
பாலனமென்மொழியாள்பாவையொடும்முடனே
கோலமதுருவாகிக்கூடலையாற்றூரி
லாலனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. 9

கூடலையாற்றூரிற்கொடியிடையவளோடு
மாடலுகந்தானையதிசயமிதுவென்று
நாடியவின்றமிழானாவலூரன்சொற்
பாடல்கள்பத்தும்வல்லார்தம்வினைபற்றறுமே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-நெறிகாட்டுநாயகர், தேவியார்-
புரிகுழலாம்பிகையார்.

திருப்பாண்டிக்கொடுமுடி-பண்-பழம்பஞ்சரம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன், பெற்றலும் பிறந் தேனி னிப்பிற வாததன் மைவந் தெய்தினேன், கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க் கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி, நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. 1

இட்ட னும்படி யேத்து வாரிகழ்ந் திட்ட நாண்மறந் திட்டநாள், கெட்ட நாளிவை யென்ற லாற்கரு தேன்கிளர் புனற் காவிரி, வட்ட வாசிகை கொண்டடிதொழு தேத்து

பாண்டிக் கொடுமுடி, கட்ட வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே. 2

ஓவு நாளுணர் வழியு நாளுயிர் போரு நாளுயர்பாடை
மேற், காவு நாளிவை யென்ற லாற்கரு தேன்கி ளர்புனற்
காவிரிப், பாவுதண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக
கொடுமுடி, நாவ லாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா
நமச்சி வாயவே. 3

எல்லை யில்புக ழெம்பி ரானெங்கைத் தம்பி ரானென்
பொன் மாமணி, கல்லை யுந்திவ ளம்பொ ழிந்திழி காவி
ரியதன் வாய்க்கரை, நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்
கறை யூரிற் பர்ண்டிக் கொடுமுடி, வல்ல வாவுனை நான்ம
றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. 4

அஞ்சி னார்கர ணாதி யென்றடி யேனு நான்மிக வஞ்
சினே, னஞ்ச லென்றடித் தொண்டனேற் கருணல்கி
னாய்கழி கின்றதென், பஞ்சின் மெல்லடிப் பாவை மார்
குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி, நஞ்ச ணிகண்ட
நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. 5

ஏடு வானிளந்திங்கள் சூடினை யென்பின்கொல்புலித்
தோலின்மேல், ஆடு பாம்ப தரைக்க சைத்த வழகனே யந்
தண் காவிரிப், பாடு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி
பாண்டிக் கொடுமுடிச், சேட னேயுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே. 6

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வினைகளும்
விண்டன, நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில் பெற
நின்ற காவிரிக் கோட்டிடைக், குரும்பை மென்முலைக்
கோதைமார் குடைந்தாடு பாண்டிக் கொடுமுடி, விரும்ப
னேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

9

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந் தீயெ ழச்சிலை கோலினாய், வம்பு லாங்குழ லாளைப் பாகம மர்ந்து காவிரிக் கோட்டிடைக் கொம்பின், மேற்குயில் கூவ மாமயி லாடு பாண்டிக் கொடுமுடி, நம்ப னேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. 8

சாரணன் றந்தை யெம்பிரானெந்தை தம்பிரானென் பொன் மாமணி, யென்று பேசொணாயிர கோடி தேவர்பி தற்றினின் று பிரிகிலார், நார ணன்பிர மன்றொ ழுங்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடிக், காரணாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. 9

கோணி யபிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி, பேணி யபெருமானைப் பிஞ்ஞகப் பித்தனைப் பிறப்பில்லியைப், பா ணு ளாவரிவண்டறை கொன்றைத் தாரனைப் படப் பாம்பரை, நாணனைத் தொண்டனூரன் சொல்லியவை சொல்லுவார்க் கில்லைத் துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-கொடுமுடிநாதீஸ்வரர், தேவியார்- பண்மொழி யம்மையார்.

திருக்கடவூர்மயானம்-பண்-பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடி மாணிக்கத்தின் மலை போலே வருவார் விடைமேன் மாதோடு மகிழ்ந்துபூதப் படைசூழத்

திருமால் பிரம னிந்திரற்குந் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர்மயானத்துப் பெரியபெருமானடிகளே.
விண்ணோர் தலைவர் வெண்புரிநூன் மார்பர்வேத கீதத்தர்
கண்ணார் நுதலர் நகுதலையர் கால காலர் கடவூர [பாகம்
ரெண்ணார் புரமூன் றெரிசெய்த விறைவ ரிமையோரொரு
பெண்ணா ணவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே

காயம் புலியி னதளுடையர் கண்ட ரெண்டோட் கடவூரார்.
தாயுந் தந்தை பல்லுயிர்க்குந் தாமேயாய் தலைவனார் [ட்டி
யாயும்விடையொன் றதுவேறிப் பலிதேர்ந்துண் ணும்பரமே
பேய்கள்வாழு மயானத்துப் பெரியபெருமா னடிகளே. 3

நறைசேர் மலரைங் கணையானை நயனத்தீயாற் பொடி
செய்த, விறையா ராவ ரெல்லார்க்கு மில்லையென்னாதருள்
செய்வார், பறையார் முழவம்பாட்டோடு பயிலுந் தொண்
டர்பயில் கடவூர்ப், பிறையார் சடையார் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. 4

கொத்தார் கொன்றை மதிசூடிக் கோணா கங்கள் பூணாக
மத்த யானை யுரிபோர்த்து மருப்பு மாமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள் பாடி யாடப் பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 5

துனிவார் கீளுங் கோவணமுந் துதைந்து சுடலைப்
பொடியணிந்து, பணிமே லிட்ட பாசுபதர் பஞ்ச வடிமார்
பினர்கடவூர்த், தினிவார் குழையார் புரமூன்றுந் தீவாய்ப்
படுத்த சேவகனார், பிணிவார் சடையார் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. 6

காரார் கடலி னஞ்சுண்ட கண்டர் கடவூ ருறைவாணர்
தேரா ரரக்கன் போய்வீழ்ந்து சிதைய விரலா லூன்றினா
ரூர்தா னாவ தலகேழு முடையார்க் கொற்றி யூராரூர்
பேரா யிரவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 7

வாடா முலையா டன்னோடு மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கோடார் கேழற் பின்சென்று குறுகி விசயன் றவமழித்து
நாடா வண்ணஞ் செருச்செய்து வாவநாழி நிலையருள்செய்
பீடார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.

வேழமுரிப்பர் மழுவாளர் வேள்வி யழிப்பர் சிரமறுப்ப
ராழி யளிப்ப ரரிதனக்கு வானஞ் சுகப்ப ரறமுரைப்ப
ரேழை தலைவர் கடவூரி லிறைவர் சிறுமான் மறிக்கையர்
பேழைச சடையர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே.

மாட மல்கு கடவூரின் மறையோ ரேத்து மயானத்துப்
பீடை தீர வடியாருக் கருளும் பெருமா னடிகள்சீர்
நாடி நாவ லாரூ ரனம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடு மடியார் கேட்பார்மேற் பாவ மான பறையுமே. 10

திருச்சிற்றம்பலம்

சுவாமிகள் பெயர்-பிரமீசுவரர், தேவியார்-மலர்க்குழன் மின்னம்மை.

திருக்கடவூர்-பண்-நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொடியார்மேனியனேபுரிநூலொருபாற்பொருந்த
வடியார்மூவிலைவேல்வளர்கங்கையின்மங்கையொடும்

கடியார்கொன்றையனேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அடிகேளென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. 1

பிறையாருஞ்சடையாய்பிரமன்றலையிற்பலிகொண்
மறையார்வானவனேமறையின்பொருளானவனே
கறையாரும்மிடற்றாய்கடவூர்தனுள்வீரட்டத்தெம்
இறைவாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. 2

அன்றாலின்னிழற்கீழறநால்வர்க்கருள்புரிந்து
கொன்றாய்காலனுயிர்கொடுத்தாய்மறையோனுக்குமான்
கன்றாருங்கரவாகடவூர்த்திருவீரட்டத்துள்
என்றாதைபெருமானெனக்கார்துணைநீயலதே. 3

போராருங்கரியினுரிபோர்த்துப் பொன்மேனியின்மேல்
வாராரும்முலையாளொருபாகமகிழ்ந்தவனே
காராரும்மிடற்றாய்கடவூர்தனுள்வீரட்டானத்
தாராவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. 4

மையார்கண்டத்தினாய்மதமாவுரிபோர்த்தவனே
பொய்யாதென்னுயிருட்புகுந்தாயின்னம்போந்தறியாய்
கையாராடரவாகடவூர்தனுள்வீரட்டத்தெம்
ஐயாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. 5

மண்ணீர்தீவளிகால்வருபூதங்களாகிமற்றும்
பெண்ணோடாணலியாய்ப்பிறவாவுருவானவனே
கண்ணாருண்மணியேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அண்ணாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. 6

எரியார்புன்சடைமேலிளநாகமணிந்தவனே
கரியாருஞ்சுடலைக்குவெண்டலைகொண்டவனே

கரியாரீருரியாய்கடவூர்தனுள்வீரட்டத்தெம்
அரியாயென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. 7

வேறாவுன்னடியேன்விளங்குங்குழைக்காதுடையாய்
தேறேனுன்னையல்லாற்சிவனேயென்செழுஞ்சுடரே
காறூர்வெண்மருப்பாகடவூர்த்திருவீரட்டத்துள்
ஆறூர்செஞ்சடையாயெனக்கார்துணைநீயலதே. 8

அயனோடன்றரியுமடியும்முடிகாண்பரிய
பயனேயெம்பரனேபரமாயபரஞ்சுடரே
கயமாருஞ்சடையாய்கடவூர்த்திருவீரட்டத்துள்
அயனேயென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. 9

காராரும்பொழில்சூழ்கடவூர்த்திருவீரட்டத்துள்
ஏராரும்பிறையைத்துணையாவெழில்நாவலர்கோன்
ஆரூரன்னடியானடித்தொண்டனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-அமிர்தகடேசுவரர், தேவியார்-
அபிராமியம்மையார்.

திருத்தொண்டத்தொகை-பண்-
கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன் திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன், இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியே னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன், வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்

கடியேன் விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன், அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே னாரூர னாரூரி லம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே னேனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன், கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன் கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன், மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாறனெஞ் சாத வாட்டாய னடியார்க்கு மடியேன், அலைமலிந்தபுனன் மங்கை யானையற் கடியே னாரூர னாரூரி லம்மானுக் காளே.

* மும்மையா லுலகாண்ட மூர்த்திக்குமடியேன் முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன், செம்மையே திருநாளைப்போவார்க்கு மடியேன் றிருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன், மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினாலெறிந்த, அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே னாரூர னாரூரி லம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன், பெருநம்பிகுலச்சிறைதனடியார்க்கு மடியேன் பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியேன், ஒருநம்பி யப்பூதி யடியார்கருமடியே னொலிபுனல்சூழ்சாத்தமங்கை நீலநக்கற்கடியேன், அருநம்பி நமிநந்தியடியார்க்குமடியே னாரூர னாரூரிலம்மானுக்காளே.

---

* விபூதி ருத்திராக்ஷம் சடைமுடி இவைகளுடன் அரசு செய்தமையால் மும்மையா லுலகாண்ட மூர்த்தியென்றது.

வம்பறா வரிவண்டு மணநாறமலரு மதுமலர்நற்கொன்
றையா னடியலாற்பேணா, எம்பிரான் சம்பந்த னடியார்க்கு
மடியே னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்,
நம்பிரான் றிருமூலனடியார்க்கு மடியே * னாட்டமிகு தண்
டிக்கு மூர்க்கற்கு மடியேன், அம்பரான் சோமாசி மாற
னுக்கு மடியே னாரூர னாரூரி லம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலேமற
வாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன், சீர்கொண்ட
புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன் செங்காட்டங் குடி
மேய சிறுத்தொண்டற் கடியேன், கார்கொண்டகொடைக்
† கழறிற் றறிவார்க்கு மடியேன் கடற்காழிக் கணநாத னடி
யார்க்குமடியேன், ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்
கோ னடியே னாரூர னாரூரி லம்மானுக் காளே. 6

பொய்யடிமையில்லாத புலவர்க்கு மடியேன் பொழிற்
கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன், மெய்யடியா
னரசிங்க முனையரையற் கடியேன் விரிதிரைசூழ் கட
னாகை யதிபத்தற் கடியேன், கைதடிந்த வரிசிலையான்
கலிக்கம்பன் கலியன் கழற் ‡ சத்தி வரிஞ்சையர்கோ

---

* பிறவி யந்தகராயிருந்து திருவாரூர் கமலாலயதீர்த்தத்தில் மூழ்கி யெழுந்திருக்கும்போது சுவாமியினுடைய திருவருளால் நாட்டம் விளங்கப்பெற்றவ ரென்பது தோன்ற நாட்டமிகு தண்டிக்கும் என்றருளிச்செய்தது.

† கழறிற்றறிவாரார்-சேரமானாயனார்.

‡ சத்தி வரிஞ்சையர்கோன் என்பதை - வரிஞ்சையூர்ச்சத்தியாரென மாற்றுக.

னடியார்க்கு மடியேன், ஐயடிகள் கடவர்கோ னடியார்
க்குமடியே னாரூ ரனாரூரி லம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன், நிறைக்
கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற நின்றசீர் நெடு
மாற னடியார்க்கு மடியேன், துறைக்கொண்ட செம்
பவள மிருளகற்றுஞ் சோதித் தொன்மயிலை வாயிலா
னடியார்க்கு மடியேன், அறைக்கொண்ட வேனம்பி முனை
யடுவாற் கடியே னாரூ ரனாரூரி லம்மானுக் காளே. 8

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான் காட
வர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன், மடல்சூழ்ந்த
தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை மன்னவனாஞ் செருத்
துணைதன் னடியார்க்கு மடியேன், புடைசூழ்ந்த புலிய
தண்மே லரவாட வாடி பொன்னடிக்கே மனம்வைத்த
புகழ்த்துணைக்கு மடியேன், அடல்சூழ்ந்த வேனம்பி
கோட்புலிக்கு மடியே னாரூ ரனாரூரி லம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன் பர
மனையே பாடுவா ரடியார்க்கு மடியேன், சித்தத்தைச்
சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன், திருவாரூர்ப் பிறந்
தார்க ளெல்லார்க்கு மடியேன், முப்போதுந் திருமேனி
தீண்டுவார்க் கடியேன் முழுநீறு பூசிய முனிவர்க்கு மடி
யேன், அப்பாலு மடிசார்ந்த வடியார்க்கு மடியே னாரூ
ரனாரூரி லம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல் வரிவளை
யாண் மானிக்கு நேசனுக்கு மடியேன், தென்னவனா யுல

காண்ட செங்கணார்க் கடியேன் றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன், என்னவனா மரனடியே யடைந் திட்ட சடையன் னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க் கோன், அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா ராரூரி லம்மானுக் கன்பராவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர்ப் பரவை நாச்சியார் திருமாளிகையிலிருந்து வீதிவிடங்கப் பெருமானைத் தரிசிக்கும்பொருட்டு ஆலயத்துக்கு வெழுந்தருளும் போது தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்குஞ் சிவனடியார்களை யுள்ளத்தால் வணங்கி இவர்களுக்கு நானடியேனாகும்படி பரமசிவம் எந்நாள் கிருபை செய்யுமென்று சொல்லுகையில் சிவபெருமான் எதிரில் தரிசனங் கொடுத்தருளித், "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியே" னென்று முதலடி யெடுத்துக் கொடுக்கப் பாடித் துதி செய்த பதிகம்.

திருவாரூர்-பண்-பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

பத்திமையுமடிமையையுங் கைவிடுவான்பாவியேன்
பொத்தினநோயதுவிதனைப்பொருளறிந்தேன்போய்த்தொ
முத்தினைமாமணிதன்னைவயிரத்தைமூர்க்கனேன் [ழுவேன்
எத்தனைநாள்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே. 1

ஐவணமாம்பகழியுடையடன் மதனன்பொடியாகச்
செவ்வணமாய்திருநயனம் விழிசெய்தசிவமூர்த்தி
மையணவுகண்டத்து வளர்சடையெம்மாரமுதை
யெவ்வணம்நான்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே.

சங்கலக்குந்தடங்கடல்வாய் விடஞ்சுடவந்தமரர்தொழ
அங்கலக்கண்டீர்த்தவ் விடமுண்டுகந்தவம்மானை
யிங்கலக்குமுடற்பிறந்த வறிவிலியேன்செறிவின்றி
யெங்குலக்கப்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே. 3

இங்ஙனம்வந்திடர்ப்பிறவிப் பிறந்தயர்வேணயராமே
யங்ஙனம்வந்தெனையாண்ட வருமருந்தென்னாரமுதை
வெங்கணமாமேனியனை மான்மருவுங்கையானை
யெங்ஙனம்நான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. 4

செப்பரியவயனொடுமால் சிந்தித்துந்தெரிவரிய
அப்பெரியதிருவினையே யறியாதேயறிவினையேன்
ஒப்பரியகுணத்தானை யிணையிலியையணைவின்றி
யெப்பரிசுபிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே. 5

வன்னாகநாண்வரை விலங்கிகணையரிபகழி
தன்னாகமுரவாங்கிப் புரமெரித்ததன்மையனை
முன்னாகநினையாத மூர்க்கனேனாக்கைசுமந்து
தென்னாகப்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே. 6

வன்சயமாயடியான்மேல் வருங்கூற்றினுரங்கிழிய
முன்சயமார்பாதத்தால் முனிந்துகந்தமூர்த்திதனை
மின்செயும்வார்சடையானை விடையானையடைவின்றி
யென்செயநான்பிரிந்திருக்க னென்னாரூரிறைவனையே. 7

முன்னெறிவானவர்கூடித் தொழுதேத்துமுழுமுதலை
யந்நெறியையமரர்தொழும் நாயகனையடியார்கள்
செந்நெறியைத்தேவர்குலக் கொழுந்தைமறந்திங்ஙனநான்
என்னறிவான்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே. 8

கற்றுளவான்கனியாய கண்ணுதலைக்கருத்தார
உற்றுளனாமொருவனைமுன் னிருவர்நினைந்தினிதேத்தப்
பெற்றுளனும்பெருமையனைப் பெரிதடியேன்கையகன்றிட்
டெற்றுளனாய்ப்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே. 9

ஏழிசையாயிசைப்பயனா யின்னமுதாயென்னுடைய
தோழனுமாயான்செய்யுந் துரிசுகளுக்குடனாகி
மாழையொண்கண்பரவையைத்தந் தாண்டானைமதியிலா
வேழையேன்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே. 10

வங்கமலிகடனஞ்சை வானவர்கடாமுய்ய
நுங்கியமுதவர்க்கருளி னொய்யேனைப்பொருட்படுத்துச்
சங்கிலியோடெனைப்புணர்ந்த தத்துவனைச்சழக்கனேன்
எங்குலக்கப்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே. 11

பேரூருமதகரியி னுரியானைப்பெரியவர்தஞ்
சீரூருந்திருவாரூர்ச் சிவனடியேதிறம்விரும்பி
யாரூரனடித்தொண்ட னடியேன்சொலகவிடத்தில்
லாரூரனிவைவல்லா ருலகவர்க்குமேலாரே. 12

திருச்சிற்றம்பலம்.

திருமழபாடி-பண்-நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கிசைத்து
மின்னார் செஞ்சடைமேன் மிளிர்கொன்றை யணிந்தவனே

மன்னே மாமணியே மழ பாடியுண் மாணிக்கமே
அன்னே புன்னை யல்லாலினி யாரை நினைக்கேனே. 1

நீளார் கோவணமுந் திரு நீறுமெய்ப்பூசி யுன்றன்
தாளே வந்தடைந்தேன் றலை வாவெனை யென்றுகொணீ
வாளார் கண்ணிபங்கா மழ பாடியுண் மாணிக்கமே
ஆளாய் நின்னை யல்லாலினி யாரை நினைக்கேனே. 2

எம்மா னெம்மனையென் றனைக் கெட்டனைச் சார்வாகார்
இம்மா யப்பிறவி பிறந்தே யிறந்தெய்த் தொழிந்தேன்
மைம்மாம் பூம்பொழில்சூழ் மழ பாடியுண் மாணிக்கமே
அம்மா நின்னை யல்லா லினியாரை நினைக்கேனே. 3

பண்ணே நின்னடியே னடியாரடி யார்கட் கெல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் றொடராமை துரிசறுத்தே
வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடியுண் மாணிக்கமே [ன்
அண்டா நின்னை யல்லா லினியாரை நினைக்கேனே. 4

கண்ணு யேழுலகுங் கருத்தாய வருத்தமு மாய்ப்
பண்ணு ரின்றமி ழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணோர் பூம்பொழில்சூழ் மழ பாடியுண் மாணிக்கமே
அண்ணு நின்னை யல்லாலினி யாரை நினைக்கேனே. 5

நாளா வந்தணுகி நலியாமு னநின் றனக்கே
ஆளா வந்தடைந்தே னடியேனையு மேன்று கொணீ
மாளா நாளருளு மழபாடியுண் மாணிக்கமே
ஆளா நின்னை யல்லாலினி யாரை நினைக்கேனே. 6

சந்தா ருங்குழையாய் சடைமேற் பிறைதாங்கி நல்ல
வெந்தார் வெண்பொடியாய் விடை யேறிய வித்தகனே

மைந்தார் சோலைகள்சூழ் மழபாடியுண் மாணிக்கமே
ந்தாய் நின்னை யல்லாலினி யாரை நினைக்கேனே. 7

வெய்ய விரிசுடரோன் மிகு தேவர்கணங்க ளெல்லாம்
செய்ய மலர்களிட மிகு செம்மையு ணின்றவனே
மையார் பூம்பொழில்சூழ் மழபாடியுண் மாணிக்கமே
ஐயா நின்னை யல்லாலினி யாரை நினைக்கேனே. 8

நெறியே நின்மலனே நெடு மாலயன் போற்றிசெய்யும்
குறியே நீர்மையனே கொடி யேரிடை யாடலைவா
மறிசே ரங்கையனே மழபாடியுண் மாணிக்கமே
அறிவே நின்னை யல்லாலினி யாரைநினைக்கேனே. 9

ஏரார் முப்புரமு மெரி யச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுண் மேயவனைச்
சீரார் நாவலர்கோ னூரா னுரைத்த தமிழ்
பாரோ ரேத்த வல்லார் பரலோகத் திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-வச்சிரதம்பேசுவரர், தேவியார்-
அழகாம்பிகையார்.

திருப்புக்கொளியூரவிநாசி-பண்-குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

எற்றான் மறக்கேனெழுமைக்குமெம்பெருமானையே
யுற்றாயென் றுன்னையேயுள் குகின்றேனுணர்ந் துள்ளத்தாற்
புற்றாடரவாபுக்கொளியூரவிநாசியே
பற்றாகவாழ்வேன்பசுபதியேபரமேட்டியே. 1

வழிபோவார்தம்மோடும்வந்துடன்கூடியமாணிநீ
யொழிவதழகோசொல்லாயருளோங்குசடையானே
பொழிலாருஞ்சோலைப்புக்கொளியூரிற்குளத்திடை
யிழியாக்குளித்தமாணியென்னைக்கிறிசெய்ததே. 2

எங்கேனும்போகினுமெம்பெருமானைநினைந்தக்காற்
கொங்கேபுகினுங்கூறைகொண்டாறலைப்பாரிலைப்
பொங்காடரவாபுக்கொளியூரவிநாசியே
யெங்கோனேயுனைவேண்டிக்கொள்வேன்பிறவாமையே. 3

உரைப்பாருரையுகந்துள்கவல்லார்தங்களுச்சியா
யரைக்காடரவாதியுமந்தமுமாயினாய்
புரைக்காடுசோலைப்புக்கொளியூரவிநாசியே
கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே. 4

அரங்காவதெல்லாமாயிடுகாடதுவன்றியுஞ்
சரங்கோலவாங்கிவரிசிலைநாணியிற்சந்தித்துப்
புரங்கோடவெய்தாய்புக்கொளியூரவிநாசியே
குரங்காடுசோலைக்கோயில்கொண்டகுழைக்காதனே. 5

நாத்தானுமுனைப்பாடலன்றிநவிலாதெனாச்
சோத்தென்றுதேவர்தொழநின்றசுந்தரச்சோதியாய்
பூத்தாழ்சடையாய்புக்கொளியூரவிநாசியே
கூத்தாவுனக்காட்பட்டகுற்றமுங்குற்றமே. 6

மந்திகடுவனுக்குண்பழநாடிமலைப்புறஞ்
சந்திகடோறுஞ்சலபுட்பமிட்டுவழிபடப்
புந்தியுறைவாய்ப்புக்கொளியூரவிநாசியே
நந்தியுனைவேண்டிக்கொள்வேனரகம்புகாமையே. 7

பேணாதொழிந்தேனுன்னையல்லாற்பிறதேவரைக்
காணாதொழிந்தேன்காட்டுதியேலின்னங்காண்பனான்
பூணாணரவாபுக்கொளியூரவிநாசியே
காணாதகண்கள்காட்டவல்லகறைக்கண்டனே. 8

நள்ளாறுதெள்ளாறரத்துறைவாயெங்களம்பனே
வெள்ளாடைவேண்டாய்வேங்கையின்றோலைவிரும்பினாய்
புள்ளேறுசோலைப்புக்கொளியூரிற்குளத்திடை
யுள்ளாடப்புக்கமாணியென்னைக்கிறிசெய்ததே. 9

நீரேறவேறுநிமிர்புன்சடைநின்மலமூர்த்தியைப்
போரேறதேவியைப்புக்கொளியூரவிநாசியைக்
காரேறுகண்டனைத்தொண்டனாரூரன்கருதிய
சீரேறுபாடல்கள்செப்பவல்லார்க்கில்லைதுன்பமே. 10

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-அவிநாசியப்பர், தேவியார்-
பெருங்கருணைநாட்டத்தம்மை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவடிகளே சரணம்

இது முதலையுண்ட பிள்ளையை அழைப்பித்த பதிகம்.

மாணிக்கவாசக சுவாமிகள்.

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு

மாணிக்கவாசகர் சைவசமய வாசிரியர் நால்வரிலொருவர். இவருக்கு சிவஸ்தலங்களிலெல்லாம் மார்கழி மாதத்திற் றிருவிழா நடத்தப்படுகின்றது. இவர் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் அமாத்தியரென்கிற அந்தணர் குலத்திற் பிறந்து வாதவூரரென்று தந்தையாரிட்ட திருநாமத்தோடு வளர்ந்து கலைகளில் வல்லவராயிருந்தார். இவரது குணாதிசயங்களை மதுரை அரிமர்த்தனபாண்டியராஜன் கேள்வியுற்று வரவழைத்து ஆராய்ச்சி செய்து பிரமராயனென்னும் பெயரும் கொடுத்து முதன் மந்திரியாக்கினான்.

இவர் சிவபக்தியிற் சிறந்து மண்ணுலக விண்ணுலக வின்பங்களை வெறுத்து மோக்ஷத்திற்கேதுவாகிய தத்துவ ஞானத்தை போதிக்கும் ஞானாசாரியரைக் காணப் பிரியம் கொண்டிருந்தனர். அவ்வித மிருக்கையில் கீழ்க்கடற்றுறைக்குப்போய் குதிரைகள் வாங்கிவரும்படி அரசனேவ நால்வகைச் சேனையோடும் ஏராளமான திரவியத்தோடுஞ் சென்று திருப்பெருந்துறைக்குச் சமீபித்தார். இவரது பரிபக்குவத்தைப் பரமசிவனறிந்து அருள் செய்வதற்காகத் திருப்பெருந்துறையிலே குருந்தமரத்தடியிற் கணங்கள் மாணாக்கர்களாகவும், தாம் ஞானாசிரியராகவுந் திருவுருக்கொண்டு வீற்றிருந்தருளினார். மந்திரியாரவரைக் கண்டு உள்ளம் கனிந்துருகி திருமூர்த்தியின் திருவடிச்

கழலிலே வீழ்ந்து தேவரீ ரடியேற் கருள்செயல் வேண்டு மென்று துதித்தார். உடனே சுவாமி திருவருள் சுரந்து ஞானதீட்சை செய்து உபதேசம் செய்தருளினர். அவ் வுபதேசத்தைப் பெற்று வாதவூரர் அன்பு மேலிட்டு அற்புத சின்மய வாசகங்கள் சேர்ந்த பாடல்களைப் பாடத் தொடங்கினர்.

அப் பாடல்கள் மாணிக்கங்கள்போல் விலையேறப் பெற்றவையா யிருந்ததா லவற்றைக் கேட்ட சிவபெருமான் றிருவுளங் களிகூர்ந்து, மாணிக்கவாசக ரென்னுந் திருப்பெயரைக் கொடுத்து அங்கே யிருக்கும்படி கட்டளை யிட்டு மறைந்தருளினர். பின்பு மாணிக்கவாசகர் குதிரைகளுக்காகக் கொணர்ந்த பொன்னையெல்லாஞ் சிவாலயத் திருப்பணி முதலிய தர்மார்த்தங்களிற் செலவிட்டு, நிரதிசயானந்த நிட்டானுபூதியில் சுகித்திருக்கையில், இதுவரையில் மந்திரியார், குதிரைகள் வாங்கிவராத காரணமென்ன வென்று அரசனிடமிருந்து திருபம் வந்தது. மாணிக்கவாசகர் உடனே சந்நிதியிற் போய்த் தொழுது, ஆண்டவனே! அடியே னென்னசெய்வேனென்று பிரார்த்திக்க அப்போதுண்டான அசரீரி வாக்கின்படி மதுரைக்கெழுந்தருளி, அரசனைக் கண்டு பரித்திரள் பின்னால் வருவதாகச் சொல்லிச் சிறந்த வரிசைகளைப் பெற்று அரசனிடத்தில் விடைபெற்றுப் பொற்றாமரையில ஸ்நானஞ் செய்து, மீனாக்ஷி சமேத சொக்கலிங்கப் பெருமானைத் தொழுது பாண்டியனது கோபத்திற் காளாகாமல் தன்னைக் காத்தருளல்வேண்டுமென்று புலம்ப, சுவாமி கிருபைகூர்ந்து, அன்பனே! அஞ்சவேண்டாம், பரித்திரள்

கொண்டு வருகிறோமென்று அசரீரியாய்ச் சொல்லக் கேட்டுக் களிகூர்ந்து தம்மில்லஞ் சேர்ந்தார்.

மறுநாள் அரசன் மந்திரியாரை வரவழைத்து குதிரைகளேன் வரவில்லையென்று வினவ, இன்றைய மூன்றாம்நாள் வருமென்று சொல்லினார். அவ்விதமும் வாராமையால் அரசன் வெகுண்டு தண்டமாக்களிட மொப்புவித்து இக் கள்வனைத் தண்டித்துப் பொருளை வாங்குமென்று கட்டளையிட்டான். அவர்களுமவ்வாறே இவரையழைத்துப்போய்ப் பெருங் கற்களை முதுகிலிட்டும் சிட்டிகட்டியு மண்ணூந்தாளிட்டும் வருத்தி, கால்களுக்கு விலங்கிட்டு, அன்றிரவு ஓரிருண்ட வறையி லடைத்துவைத்திருந்தனர். மாணிக்கவாசகர் சிவபெருமானுடைய பாதங்களையே சிந்தித்துக் கொண்டிருந்தார். நிற்க, இவரது துயரைச் சுவாமியறிந்து சிறையினின்றுமீட்கத் திருவுளங்கொண்டு மறுநாள் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கி சிவகணங்களை யெல்லா மவற்றை நடத்தும் சேவகர்களாக்கி தாமும் வேதக்குதிரையின்மீ தாரோகணித்து அரசனிடம் வந்து வேதக்குதிரை நீங்கலாக மற்றக் குதிரைகளெல்லா மொப்புவித்து மாணிக்கவாசக சுவாமிகளை சிறை மீட்பித்து அரசன் பரிசாகத் தந்த வஸ்திரத்தையு மடியார் பொருட்டு வாங்கிச் சிரசிற்றரித்து மறைந்தருளினார்.

லாயத்திற் கட்டப்பட்டிருந்த புதிய பரிகளெல்லாம் அன்றிரவு நரிகளாகி, பக்கத்திலிருந்த பரிகளையும் கடித்திம்சித்து ஊரெங்கும் கூகுரலிட்டு ஓடிப்போயின. மறுநாள் அரசன் அறிந்து மிகசீற்றங்கொண்டு மாணிக்க

வாசகரை முன்னிலு மதிகமாகத் தண்டனைசெய்து பொருளை வாங்கும்படி கட்டளையிட்டான். அவ்விதமே வருத்தினார்கள். மாணிக்கவாசகர் இவ் வருத்தத்தைச் சகிக்காது முறையிட, சுவாமி கங்கையை நோக்கினார். உடனே மதுரைநகரின்மீது கங்கைபுரண்டுவந்தது. அரசனுத்தரவுப்படி மந்திரிகளாற்றங்கரைக்குச்சென்று ஊரிலுள்ள ஒவ்வொருவருக்கும் பங்கிட்டுக் கொடுத்து அணைபோடும்படி செய்தார்கள். தம்மிடத் தன்புள்ளவளும் ஆளற்றவளுமாகிய வந்தியென்னும்பிட்டு வாணிச்சியாருக்குத் தாம் கூலியாளாகப் பரமசிவன் சென்று அணைபோடாது பல திருவிளையாட்டுகளைச் செய்துகொண்டிருந்தார். அணையைக் கோலி பார்த்துவந்த அரசன்; வந்தியின் பங்கைக் கண்டு கையிலிருந்த பிரம்பால் கூலியாளின் முதுகிலடித்தான். உடனே சுவாமி ஒரு கூடை மண்ணையுடைப்பிற் போட்டு மறைந்தருளினார். அவ் வொரு கூடைமண் மற்றவர்களணையிலும் பெரிதாகி உடைப்பை யடைத்துவிட்டது. அரசனடித்த பிரம்படியோ தேவர்முதல் சகலஜீவகோடிகளின் முதுகிலும் பட்டதுமல்லாமல், பாண்டியனது முதுகிலும் பட்டிருந்தது. இவற்றை யரசன் கண்டு பிரமித்து நிற்க, சுவாமி அசரீரியாய்நின்று, மாணிக்கவாசகரது பெருமையையு மவர்பொருட்டுத் தாம் செய்ததையுஞ் சொல்லியருளக் கேட்டு நடுங்கி, மாணிக்கவாசகரிடஞ் சென்று வணங்கித் தன் குற்றத்தை க்ஷமித்து முன்போலுலகத்தை யிரட்சித்தருள வேண்டுமென்று துதிக்க, மண்ணாசை யற்றவராகிய மாணிக்கவாசக சுவாமிகள், பாண்டியனை நோக்கி எம்பெருமானென்னை சிதம்பரத்திற்குப் போகப் பணித்திருக்கின்றமையால் நீருமதற்கிசைந்து

விடைதரல்வேண்டுமென்று சொல்லி விடைபெற்று சிதம்பரஞ்சென்று சுவாமியைத் தரிசித்துப் பல திருப்பாடல்கள் செய்து இலங்கையினின்றும் வாதுக்கு வந்த புத்தரை வாதில் வென்று பௌத்த சமயத்தனாகிய சோழனது ஊமைப் பெண்ணையும் பேசும்படி செய்து பல நாளங்கிருந்தார்.

அப்போது சிவபெருமான் ஓர் அந்தணராக அவரிடஞ்சென்று இவர் செய்த திருப்பாடல்களை யெல்லாந் தொகுத்து திருவாசகமாகக் கூறவும் திருக்கோவையார் பாடவும்கேட்டு அவர் பாடியவண்ணம் தமதருமைத் திருக்கரத்தாலெழுதி அப் புத்தக முடிவில் திருச்சிற்றம்பலமுடையா ரெனக் கையொப்பமும் வைத்து மறைந்தருளினார்.

அத்திருமுறை சிற்சபையிலே வைக்கப்பட்டிருத்தலை கண்ட தில்லைவாழ்ந்தணர் முதலியோர் இதனை எடுத்து அதன் பொருளை யுணர்த்தும்படி மாணிக்கவாசக சுவாமிகளைவேண்ட அவர் திருவாசகம் திருக்கோவையாரென்னுமிரண்டினது உண்மைப்பொருள் ஸ்ரீ நடராஜப் பெருமானே யென சுட்டிக்காட்டி சிற்சபையிலே போய் அருட்பெருஞ் சோதிமயமாக விளங்கிய சிதாகாசத்திலே கலந்தருளினார்.

மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு முற்றிற்று.

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவாசகம்

திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியுமந்தமுமில்லா வரும்பெருஞ்சோதியை யாம்பாடக்
கேட்டேயும் வாட்டடங்கண், மாதேவளருதியோ வன்
செவியோ நின்செவிதான் மாதேவன் வார்கழல்கள் வாழ்த்
திய வாழ்த்தொலிபோய், வீதிவாய்க்கேட்டலுமே விம்மி
விம்மி மெய்மறந்து போதாரமளியின்மே னின்றும்புரண்
டிங்க, னேதேனுமாகாள் கிடந்தாளென்னே யென்னே
யீதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும்பேர்த்து மப்பெற்றியனே, யுன்
னைப் பிரானாகப்பெற்றவுன் சீரடியோ முன்னடியார் தாள்
பணிவோ மாங்கலர்க்கே பாங்காவோ, மன்னவரே யெங்
கணவராவர் ரவருகந்து சொன்னபரிசே தொழும்பாய்ப்
பணிசெய்வோ, மின்னவகையே யெமக்கொங்கோ னல்
குதியே லென்னகுறையுமிலோ மேலோ ரெம்பாவாய். 2

அண்ணாமலையா னடிக்கமலஞ்சென் றிறைஞ்சும்விண்
ணோர்முடியின் மணித்தொகை வீறற்றாற்போற், கண்ணா
ரிரவி கதிர்வந்து கார்பரப்பத்தண்ணா ரொளிமழுங்கித்
தாரகைகடாமலகப், பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்

கொளிசேர் விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணாரமுதமாய் நின்றான் கழல்பாடிப் பெண்ணேயிப்
பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய். 3

திருச்சிற்றம்பலம்

திருவம்மானை-ஆனந்தக்களிப்பு

திருச்சிற்றம்பலம்

செங்கணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய, பொங்குமலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி யெங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு, தெங்குதிரள் சோலைத்தென்னன் பெருந்துறையா, னங்கண னந்தணனா யறைகூவி வீடருளு, மங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். 1

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன்வேள்வியினி, லிந்திரனைத் தோணெரித்திட் டெச்சன்றலையரிந் தந்திரமே செல்லு மலர்கதிரோன் பற்றகர்த்துச், சிந்தித்திசை திசையே தேவர்களை யோட்டுகந்த, செந்தார்ப்பொழில் புடைசூழ்தென்னன் பெருந்துறையான், மந்தாரமாலையே பாடுதுங்கா ணம்மானாய். 2

ஊனாயுயிரா யுணர்வாயென் னுட்கலந்து, தேனாயமு தமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய், வானோரறியா வழி யெமக்குத் தந்தருளுந், தேனார்மலர்க்கொன்றைச் சேவக னார் சீரொளிசே, ரானாவறிவா யளவிறந்த பல்லுயிர்க்குங், கோனாகிநின்றவா கூறுதுங்கா ணம்மானாய். 3

திருச்சிற்றம்பலம்.

திருச்சாழல்-சிவனுடையகாருணியம்

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான் மறைபோலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும் பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்கு மியல்பானான்சாழலோ 1

என்னப்பனெம்பிரா னெல்லார்க்குந்தானீசன்
றுன்னம்பெய்கோவணமாக் கொள்ளுமதுவென்னேடீ
மன்னுகலைதுன்னுபொருள் மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச் சாத்தினன்காண்சாழலோ. 2

கோயில்சுடுகாடு கொம்புலித்தோனல்லாடை
தாயுமிலிதந்தையிலி தான்றனியன்காணேடீ
தாயுமிலிதந்தையிலி தான்றனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங் கற்பொடிகாண்சாழலோ. 3

அயனையனங்கனை யந்தகனைச்சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான்காணேடீ
நயனங்கண்மூன் றுடைய நாயகனே தண்டித்தாற்
சயமன்றோவானவர்க்குத் தாழ்குழலாய்ச்சாழலோ. 4

அருந்தவக்காலின்கீ ழறமுதலாநான்கனையு
மிருந்தவருக்கருளுமது வெனக்கறியவியம்பேடீ
யருந்தவருக்கறமுதனான் கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருக்குலகியற்கை தெரியாகாண்சாழலோ. 5

அச்சோப்பதிகம்-அனுபவவழி யறியாமை

திருச்சிற்றம்பலம்

முத்திநெறியறியாத மூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறிவித்துச் சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவோ. 1

நெறியல்லாநெறிதன்னை நெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமே திருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாத கூத்தன்றன்கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவா றார்பெறுவாரச்சோவே. 2

பொய்யெல்லாமெய்யென்று புணர்முலையார்போகத்தே
மையலுறக்கடவேனை மாளாமேகாத்தருளித்
தையலிடங்கொண்டபிரான் தன்கழலேசேரும்வண்ண
மையனெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே. 3

மண்ணதனிற்பிறந்தெய்த்து மாண்டுவிழக்கடவேனை
யெண்ணமிலாவன்பருளியெனையாண்டிட்டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீறணிவித்துத்தூய்நெறியேசேரும்வண்ண
மண்ணலெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே. 4

பஞ்சாயவடிமடவார் கடைக்கண்ணாலிடர்ப்பட்டு
நெஞ்சாயதுயர்கூற நிற்பேனுன்னருள்பெற்றே
னுஞ்சேனானுடையானே யடியேனைவருகவென்
றஞ்சேலென்றருளியவா றார்பெறுவாரச்சோவே. 5

மாணிக்கவாசக சுவாமிகள் திருவடிகளே சரணம்.

திருச்சிற்றம்பலம்.



தாயுமான சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தாயுமான சுவாமிகள் அருளிச்செய்த

திருப்பாடல்கள்

அங்கிங் கெனாதபடி யெங்கும் பிரகாசமா யானந்த பூர்த்தியாகி, யருளொடு நிறைந்ததெது தன்னருள்வெளிக் குளே யகிலாண்ட கோடியெல்லாந், தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த் தழைத்ததெது மனவாக் கினிற், றட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந் தந்தெய்வ மெந்தெய்வமென், றெங்குந் தொடர்ந் தெதிர்வழக்கிடவு நின்றதெது வெங்கணும் பெருவழக்காய், யாதினும் வல்ல வொரு சித்தாகியின்பமா யென்றைக்குமுள்ள தெதுமேற், கங்குல்பக லறநின்ற வெல்லை யுளதெதுவது கருத்திற் கிசைந்ததுவே, கண்டனவெலாமோன வுருவெளியதாக வுங் கருதியஞ்சலி செய்குவாம். 1

வாசாகயிங்கரிய மன்றியொருசாதன மனோவாயு நிற் கும்வண்ணம,வாலாயமாகவும் பழகியறியேன் றுறவுமார்க் கத்தி னிச்சைபோல, நேசானுசாரியாய் விவகரிப்பேனந்த நினைவையுமறந்தபோது, நித்திரைகொள்வேன்றேக நீங்கு மென வெண்ணிலோ நெஞ்சந்துடித்தயருவேன், பேசாத வானந்த நிட்டைக்கு மறிவிலாப் பேதைக்கும் வெகுதூர மே, பேய்க்குண மறிந்திந்த நாய்க்குமொருவழி பெரிய பேரின்ப நிட்டையருள்வாய், பாசாடவிக்குளே செல்லாத

வர்க்கருள் பழுத்தொழுகு தேவதருவே, பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே. 2

ஆழாழிகரையின்றி நிற்கவிலையோ கொடிய வாலமமுதாக விலையோ, வக்கடலின்மீது வடவனனிற்கவிலையோ வந்தரத்தகிலகோடி, தாழாமனிலைநிற்க வில்லையோ மேருவுந் தனுவாக வளையவிலையோ, சப்தமேகங்களும் வஜ்ரதரனாணையிற் சஞ்சரித்திடவிலையோ, வாழாதுவாழ்வே யிராமனடியாற்சிலையு மடமங்கை யாகவிலையோ, மணிமந்த்ரமாதியால் வேண்டுசித்திகளுலக மார்க்கத்தில் வைக்கவிலையோ, பாழான வென்மனங் குவியவொரு தந்திரம் பண்ணுவ துனக்கருமையோ, பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே. 3

ஆசைக்கோ ரளவில்லையகிலமெலாங்கட்டி யாளினுங் கடன்மீதிலே, யாணைசெலவேநினைவ ரளகேசனிகராக வம்பொன்மிக வைத்தபேரு, நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர் நெடுநாளிருந்தபேரு, நிலையாகவேயினுங்காய கற்பந்தேடி நெஞ்சுபுண்ணாவரெல்லாம், யோசிக்கும்வேளையிற் பசிதீரவுண்பது முறங்குவதுமாக முடியு, முள்ளதேபோது நானெனக் குழறியே யொன்றைவிட் டொன்றுபற்றிப், பாசக்கடற்குளே வீழாமன்மனதற்ற பரிசுத்த நிலையை யருள்வாய், பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே. 4

மின்னனைய பொய்யுடலை நிலையென்று மையிலகுவிழி கொண்டு மையல்பூட்டு, மின்னார்க ளின்பமே மெய்யென்றும் வளர்மாட மேல்வீடு சொர்க்க மென்றும்' பொன்னை

யழியாதவளர்ப் பொருளென்று போற்றியிப் பொய்வே -
மிருதிகாட்டிப், பொறையறிவு துறவீத லாதிநற் குண
மெலாம் போக்கிலே போகவிட்டுத், தன்னிகரி லோபாதி
பாழ்பேய் பிடித்திடத், தரணிமிசை லோகாயதன், சமய
நடை சாராமல் வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி,
மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டன்பின்
வாழ்வித்த ஞானகுருவே, மந்த்ரகுருவேயோக தந்த்ர
குருவேமூலன் மரபில்வரு மௌனகுருவே. 5

பண்ணேனு னக்கான பூசையொரு வடிவிலே பாவித்
திறைஞ்சவாங்கே, பார்க்கின்ற மலரூடு நீயேயிருத்தியப்
பனிமல ரெடுக்கமனமு, நண்ணேனலாம லிருகைதான்
குவிக்கவெனி னாணுமென் னுளநிற்றிநீ. நான்கும்பிடும்
போதரைக்கும்பிடாதலால் நான்பூசைசெய்யன் முறையோ,
விண்ணே விணாதியாம் பூதமே நாதமே வேதமே வேதாந்
தமே, மேதக்க கேள்வியே, கேள்வியாம் பூமிக்குள் வித்
தேய வித்தின் முளையே, கண்ணே கருத்தேயெ னெண்
ணே யெழுத்தே கதிக்கான மோனவடிவே, கருதரிய சிற்
சபையி லானந்த நிர்த்தமிடு கருணாகரக் கடவுளே. 6

எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதா னரியா
தினு மரிதரிதுகா, ணிப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்
குமோ வேதுவருமோ வறிகிலேன், கண்ணகனிலத்துநா
னுள்ளபொழுதே யருட்கனவட்டத்தினின்று, காலூன்றி
நின்று பொழியானந்த முகிலொடு கலந்துமதி யவசமுற
வே, பண்ணுவது நன்மையிந் நிலைபதியு மட்டுமே பதியா
யிருந்த தேகப், பவுரிகுலையாமலே கௌரிகுண் டலியாயி

பண்ணவித னருளினாலே, விண்ணிலவு மதியமுத மொழி யாது மொழியவே வேண்டுவேனுமதடிமைநான், வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலைபெற்ற வித்தகச்சித்தர்கணமே. 7

ஆணிலே பெண்ணிலே யென்போலவொரு பேதை யகிலத்தின் மிசையுள்ளதோ, வாடியகறங்குபோ லோடி யுழல் சிந்தையை யடக்கியொரு கணமேனும்யான், காணி லேன் திருவருளையல்லாது மௌனியாய்க் கண்மூடியோடு மூச்சைக், கட்டிக்கலாமதியை முட்டவே மூலவெங்கன லினை யெழுப்ப நினைவும், பூணிலே னிற்றைநாட் கற்ற தும் கேட்டதும் போக்கிலே போகவிட்டுப், பொய்யுலக நடையினேனாயினுங் கடையான புன்மையேனின்னமின்னம், வீணிலே யலையாமன் மலையிலக்காகநீர் வெளிப்படத்தோற் றல் வேண்டும், வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலை பெற்ற வித்தகச் சித்தர்கணமே. 8

கல்லாதபோகனே நல்லவர்க ணல்லவர்கள் கற்றுமறி வில்லாதவென், கன்மத்தை யென்சொல்வேன் மதியை யென்சொல்வேன் கைவல்யஞானநீதி, நல்லோருரைக் கிலோ கன்மமுக்கியமென்று நாட்டுவேன் கன்மமொருவ, ருட்டி னாலோபழைய ஞானமுக்கியமென்று நவிலுவேன் வடமொழியிலே, வல்லாவொருத்தன் வரவுந்திரா விடத் திலே வந்ததாவிவகரிப்பேன், வல்லதமிழறிஞர்வரி னங் ஙனே வடமொழியின் வசனங்கள் சிறிது புகல்வேன், வெல்லாமலெவரையு மருட்டிவிட வகைவந்த வித்தை யென் முத்தி தருமோ, வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே. 9

கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்குமக் குணமொன்று மொன்றிலேன்பாற், கோரமெத்தனை பக்ஷபாதமெத்தனை வன்குணங்க ளெத்தனை கொடியபாழ்ங், கல்லாமையெத்தனை யகந்தையெத்தனை மனக்கள்ளமெத் தனை யுள்ளசற், காரியஞ் சொல்லிடினு மறியாமை யெத் தனை கதிக்கென்ற மைத்தவருளிற் செல்லாமையெத்தனை, விரதாகோஷ்டி யென்னிலோ செல்வமெத்தனை முயற்சி, சிந்தையெத்தனை சலனமிந்த்ர ஜாலம்போன்ற தேகத்தில் வாஞ்சைமுதலா, யல்லாமையெத்தனை யமைத்தனை புனக் கடிமையானே னிலைக்குமாளோ, அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி யானந்தமான பரமே. 10

கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென் கன் னெஞ்ச முருகவிலையே, கருணைக்கிணங்காத வன்மை யையு நான்முகன் கற்பித்த வொருகடவுளோ, வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு வழக்குக்கிழுக்கு முண்டோ, வானமாய் நின்றின்ப மழையா யிரங்கியெனை வாழ்விப்ப துன்பரங்காண், பொல்லாத சேயெனிற் றாய் தள்ள னீதமோ புகலிடம் பிறிதுமுண்டோ, பொய் வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப் புன் மையே னுவணந்தோ, சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச் சும்மா விருக்கவருளாய், சதத நிர்க்குண மான பரதெய்வமே பரஞ்சோதியே சுகவாரியே. 11

அரும்பொனே மணியே யெனன்பே யெனன்பான வறிவேயென் னறிவிலூறு, மானந்த வெள்ளமே யென் றென்று பாடினே னாடினே னாடியாடி, விரும்பியே கூவினே னுளறினே னலறினேன் மெய்சிலிர்த்திருகைகூப்பி, விண்

மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே வேசற்றயர்ந்தே னியா, னிரும்புநேர் நெஞ்சகக் கள்வனானாலுமுனை விடைவிட்டு நின்றதுண்டோ, வென்றநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ யாதேனு மறியாவெறுந், துரும்பனே னென்னினுங் கைவிடுதனீதியோ தொண்டரொடு கூட்டுகண்டாய், சுத்தநிர்க் குணமான பரதெய்வமே பரஞ்சோதியே சுகவாரியே. 12

அவனன்றி யோரணுவு மசையாதெனும்பெரிய வாப்தர்மொழி யொன்றுகண்டா, லறிவாவ தேதுசில வறியாமை யேதிவையறிந்தார்க ளறியார்களார், மௌனமோ டிருந்ததா ரென்போ லுடம்பெலாம் வாயாய்ப்பிதற்று மவரார், மனதெனவு மொருமாயை யெங்கே யிருந்துவரும் வன்மையொ டிரக்கமெங்கே, புவனம்படைப்பதென் கர்த்தவிய மெவ்விடம்பூத பேதங்களெவ்விடம், பொய்மெயித மகிதமேல் வருநன்மை தீமையோடு பொறைபொறுமைபு மெவ்விட, மெவர்சிறிய ரெவர்பெரிய ரெவருறவ ரெவர்பகைஞ ரியாதுமுனை யன்றியுண்டோ, விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி யெங்குநிறைகின்ற பொருளே.

காகமா னவைகோடி கூடினின் றாலுமொரு கல்லின்முன் னெதிர்நிற்குமோ, கர்மமானவைகோடி முன்னே செய்தாலு நின் கருணைப்ரவாகவருளைத், தாகமாய் நாடினவை வாதிக்க வல்லதோ தமியனேற் கருட்டாகமோ, சற்றுமிலையென்பதும் வெளியாச்சு வினையெலாஞ் சங்கேத மாய்க்கூடியே, தேகமா னதைமிகவும் வாட்டுதே துன்பங்கள் சோரமி லியோகமார்க்க, சித்தியோ வரவில்லை சகசநிட் டைக்குமென் சிந்தைக்கும் வெகுதூரமா, னேக

மாய் நின்றேடிருக்குநா ளெந்தநா ளிந்நாளின் மூற்று றுதோ விகபர மிரண்டினிலு மூயிரினுக் குயிராகி யெங்கு நிறை கின்ற பொருளே. 14

இனியேதெமக்கு னருள்வருமோ வெனக்கருதியேங் குதேநெஞ்சமையோ, லின்மைறக்கிருந்தாரை நாளைக்கிருப்ப ரென் றெண்ணவோ திடமில்லையே, யநியாயமா யிந்த வுடலை நானென்றுவரு மந்தகற்காளாகவோ, வாடித் திரிந்துநான் கற்றதுங்கேட்டது மவலமாய்ப் போத னன்றோ, கனியேனும் வறிய செங்காயேனு மூதிர்சருகு கந்தமூலங்களேனுங், கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான் கண்மூடி மௌனியாகித் தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது சாமிநீயறியாததோ, சர்வ பரிபூரண வகண்டதத்துவமான சச்சிதானந்தசிவனே. 15

கந்துகமதக்கரியை வசமாநடத்தலாங் கரடிவெம்புலி வாயையுங்கட்டலா, மொருசிங்கமுதுகின்மேற் கொள்ள லாங் கட்செவியெடுத் தாட்டலாம், வெந்தழலி னிரதம் வைத்தைந்து லோகத்தையும் வேதித்துவிற் றுண்ணலாம், வேறொருவர்காணும லுலகத்துலாவலாம் விண்ணவரை யேவல்கொளலாஞ், சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு சரீரத்தினும் புகுதலாஞ், சலமேனடக்கலாங் கனன்மே லிருக்கலாந் தன்னிகரில் சித்திபெறலாஞ், சிந் தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது சத்தாகி யென், சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே தேசோ மயானந்தமே. 16

தாயுமான சுவாமிகள் திருவடிகளே சரணம்.

உ

சிவமயம்

இராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்த

திருவருட்பா நாமாவளி

திருச்சிற்றம்பலம்.

அம்பலத் தரசே யருமருந்தே யானந்தத்தேனே யருள்விருந்தே, பொதுநடத் தரசே புண்ணியனே புலவரெல்லாம் புகழ் கண்ணியனே.

மலைதருமகளே மடமயிலே மதிமுகவமுதே யிளங்குயிலே, ஆனந்தக்கொடியேயிளம்பிடியே யற்புதத்தேனே மலைமானே.

சிவசிவசிவசிவசின்மயதேஜா சிவசுந்தரகுஞ்சிதநடராஜா
படனவிவேகாபரம்பரவேதா நடனசபேசாசிதம்பரநாதா
அரிபிரமாதியர்தேடியநாதா அரகரசிவசிவஆடியபாதா
அந்தணவங்கணவம்பரபோகா அம்பலநம்பரவம்பிகைபாகா
அம்பரவிம்பரதம்பரநாதா அஞ்சிதரஞ்சிதகுஞ்சிதபாதா
தந்திரமந்திரயந்திரபாதா சங்கரசங்கரசங்கரநாதா.

இக்கரைகடந்திடிலக்கரையே இருபது சிதம்பரச் சர்க்கரையே, என்னுயிருடம்பொடு சித்தமதே இனிப்பது நடராஜபுத்தமுதே.

ஐயர் திருச்சபையாடகமே ஆடுதலானந்தநாடகமே
உத்தரஞானசிதம்பரமே சித்தியெலாந்தருமம்பரமே.

திருச்சிற்றம்பலம்.

திருவருண் முறையீடு

கட்டளைக்கலித்துறை

விண்ணுடையாய் வெள்ளிவெற்புடையாய் மதிமேவு சடைக், கண்ணுடையாய் நெற்றிக்கண்ணுடையா யருட் கண்ணுடையாய், பண்ணுடையாய் திசைப்பட்டுடையா யிடப்பாலிலருட், பெண்ணுடையாய் வந்திப்பிட்டுடையா யென்பெருஞ் செல்வமே. 1

விடையுடையாய்மறைமேலுடையாய்நதிமேவியசெஞ்
சடையுடையாய்கொன்றைத்தாருடையாய்சுந்தரக்குமழுப்
படையுடையாயருபண்புடையாய்பெண்பாவையின்பா
னவையுடையாயருணூடுடையாய்பதநல்குவே. 2

ஊருடையாய்பிறைக்கீற்றுடையாயெங்கிளைத்தலைமேற்
றாருடையாய்செஞ்சடையுடையாயென்றனையுடையாய்
வானுடையாய்மலைமானுடையாய்கலைமானுடையா
யாளுடையாய்மன்றுளாட்டுடையா யென்னையாண்டருளே.

நான்படும்பாடுசிவனேயுலகர்நவிலும்பஞ்சு
தான்படுமோசொல்லத்தான்படுமோவெண்ணத்தான்படு
கான்படுகண்ணிதன்பாபமாறுகலங்குகின்றே [மோ
னேன்படுகின்றனையென்றிரங்கஎன்னிலென்செய்வனே.

மஹாதேவமாலை

விண்ணேவிண்ணுருவே விண்முதலே விண்ணுள் வெளியே யவ்வெளிவிளங்குவெளியேயென்றன், கண்ணே கண்மணியேகண்ணொளியே கண்ணுட்கலந்துநின்றகதிரே

யக்கதிரின் வித்தே, தண்ணே தண்மதியேயம் மதியிற்
பூத்த தண்ணமுதே தண்ணமுதசாரமேசொற், பண்ணே
பண்ணிசையே பண்மயமே பண்ணின்பயனே மெய்த்தவர்
வாழ்த்திப் பரவுந்தேவே. 5

சுழியாத வருட்கருணைப் பெருக்கேயென்றுந் தூண்
டாத மணிவிளக்கின் சோதியேவா, னொழியாது கதிர்
பரப்புஞ்சுடரேயன்பர்க் கோவாதவின் பருளுமொன்றே
விண்ணோர், விழியாலுமொழியாலு மனத்தினாலும் விழை
தரு மெய்த்தவத்தாலும் விளம்புமெந்த, வழியாலுங் கண்
கொளற் கரிதாய்ச் சுத்த மௌனவெளியூடிருந்து வயங்
குந் தேவே. 6

குலத்திடையுங்கொடிய னொருகுடித் தனத்துங்
கொடியேன் குறிகளிலுங்கொடிய னன்றிக் குணங்களிலுங்
கொடியேன், மலத்திடையே புழுத்தசிறு புழுக்களிலுங்
கடையேன் வன்மனத்துப் பெரும்பாவி வஞ்சநெஞ்சப்
புலையேன், நலத்திடையோ ரணுவளவும் நண்ணுகிலேன்
பொல்லாநாய்க்கு நகைதோன்ற நின்றேன் பேய்க்குமிக
விழிந்தேன், நிலத்திடைநா னேன்பிறந்தே னின்கருத்தை
யறியேனிர்க்குணனே நடராஜநிபுண மணிவிளக்கே. 7

விளக்கறியா விருட்டறையிற் கவிழ்ந்து கிடந்தழுது
விம்முகின்ற குழவியினு மிகப்பெரிதுஞ் சிறியேன், அளக்
கறியாத் துயர்க்கடலி லழுந்திநெடுங்கால மலைந்தலைந்து
மெலிந்த துரும்பதனின் மிகத்துரும்பேன், கிளக்கறியாக்
கொடுமை யெலாங்கிளைத்த பழுமரத்தேன் கெடுமதியேன்
கடுமையினேன் கிறிபேசும் வெறியேன், களக்கறியாப் புலி

யிடை நானேன் பிறந்தேனந்தோ கருணைநடத்தரசே
நின்கருத்தை யறியேனே. 8

அரசரொலா மதித்திடப்பே ராசையிலே யாசோடா
லெனவேயிக்க விளைத்தே னருளறியாக்கடையேன், புரச
மரம்போற் பருத்தே னெட்டியெனத் தழைத்தேன் புங்
கெனவும் புளியெனவும் மங்கியுதிர்கின்றேன், பரசும்வகை
தெரிந்து கொளேன் தெரிந்தாரைப் பணியேன் பசையறி
யாக்கருங்கன் மனப் பாறைசுமந் துழல்வேன், விரசுநிலத்
தேன் பிறந்தேனின் கருத்தையறியேன் வியக்குமணிமன்
றோங்கி விளங்குபரம் பொருளே. 9

பொருளறியேன் பொருளறிந்தார்போன்று நடித்
திங்கே பொங்கிவழிந் துடைகின்றேன் பொய்யகத்தேன்
புலையேன், வருளறியாத் திருவாளருளங்கயக்கத்திரிவேன்
வையுண்டுமுழவுலா தாமாடெனவே தடித்தேன், வெகு
ளறியாக் கொடுமனத்தேன் விழற்கிறைத்துக் களிப்பேன்,
வீணர்களிற் றலைநின்றேன் விலக்கனைத்தும் புரிவேன்,
தெருளறியேனுலகிடைநா னேன்பிறந்தேனினது திழிவு
ளத்தை யறிந்திலேன் தெய்வ நடத்தவனே. 10

மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன் றறி
யேன் மதியறியேன் விதியறியேன்வாழ்க்கைநிலை யறி
யேன், திருந்தறியேன் றிருவருளின் செயலறியே னறந்
தான் செய்தறியேன் மனமடங்குந் திறத்தினிலோ
ரிடத்தே, யிருந்தறியே னறிந்தோரை யேத்திடவுமறியே
னெந்தைபிரான் மணிமன்ற மெய்தறிவேனோ, விருந்த

திசை சொல்லவறியே னெங்ஙன் நான்புகுவேன் யார்க்
குரைப்பே னென்செய்வே னேதுமறிந்திலனே. 11

வெறுத்துரைத்தேன் பிழைகளெல்லாம் பொறுத்
தருளல் வேண்டும் விளங்கவறிவுக் கறிவாகி மெய்ப்
பொதுவி னடிப்போய், கறுத்துரைத்தார் தமக்குமருள்
கனிந்துரைக்கும் பெரியகருணை நெருங்கடலே முக்கண்
ணுங்கரும்பே, மறுத்துரைப்ப தெவனருணீ வழங்கினு
மன்றி மறித்திடினு முன்னையலான் மற்றொரு சார்பறி
யேன், செறுத்துரைத்த வுரைகளெல்லாந் திருவருளே
யென்று சிந்திப்ப தல்லாமல் செய்வகை யொன்றிலனே.

களக்கமறப் பொதுநடநான் கண்டுகொண்ட தரு
ணங் கடைச்சிறியே னுளம்பூத்துக் காய்த்ததொரு காய்
தான், விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பி யுதிர்ந்திடுமோ
வெம்பாது பழுக்கினுமென் கரத்திலகப்படுமோ, கொளக்
கருது மலமாயைக் குரங்குகவர்ந்திடுமோ குரங்குகவரா
தெனது குறிப்பிலகப்படினுந், துளக்கமற வுண்ணுவனோ
தொண்டைவிக்கிக்கொளுமோ சோதிதிருவுள மெதுவோ
வேதுமறிந்திலனே. 13

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல்வேண்டு
மாருயிர்கட் கெல்லாநா னன்புசெயல்வேண்டு, மெப்பாரு
மெப்பதமு மெங்கணுநான் சென்றே யெந்தைநின தருட்
புகழை யியம்பிடல்வேண்டும், செப்பாத மேனிலைமேற்
சுத்தசிவமார்க்கந் திகழ்ந்தோங்க வருட்சோதி செலுத்தி
யிடல்வேண்டும், தப்பேது நான்செயினு நீபொறுத்தல்
டுவேண்டுந்தலைவ நினைப்பிரியாதநிலைமையும் வேண்டுவனே.

திதியுடையாய் சிற்சபைவாழ் சிவபதியே யெல்லாஞ் செயவல்ல தனித்தலைமைச் சித்தசிகாமணியே, யுருவுடையென் னுயிர்க்குயிரா யொளிகின்ற வொளியே யுன்னுதொறு மென்னுளத்தே யூருகின்றவமுதே, யருவுடைய பெருவெளியாயது விளங்குவெளியா யப்பாலுமாய் நிறைந்தவருட் பெருஞ்சோதியனே மருவுடையான் சிவகாமவல்லி மணவாளா வந்தருள்க வருட்சோதி தந்தருள்க விரைந்தே. 15

சொல்லவனே பொருளவனே துரியபதத்தவனே தூயவனே நேயவனே சோதியுருவவனே, நல்லவனே நன்னிதியே ஞானசபாபதியே நாயகனே தாயகனே நண்பவனே யனைத்து, மல்லவனே யானவனே யம்மையப்பா வென்னை யாண்டவனே தாண்டவனே யருட்குருவே எல்லாம், வல்லவனே சிவகாமிவல்லி மணவாளா மன்னவனே யென்னவனே வந்தருள்க விரைந்தே. 16

படமுடியா தினித்துயரம் படமுடியாதரசே பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த் தெப்பொழுதென், னுடலுயிராதியவெல்லாம் நீயெடுத்துக்கொண் டுன்னுடலுயிராதியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய், வடலூறு சிற்றம்பலத்தே வாழ்வாயென் கண்ணின்மணியே யென் குருமணியே மாணிக்கமணியே, நடனசிகாமணியே யென்னவமணியே ஞானநன்மணியே பொன்மணியே நடராஜமணியே. 17

வாழையடி வாழையென வந்திருக்கூட்ட மரபினில் யாளெருவனன்றோ வகையறியேனிந்த, வேழைபடும்

பாடுனக்குத் திருவுளச்சம்மதமோ விது தகுமோ விது
முறையோ விது தருமந்தானோ, மாழைமணிப் பொது
நடஞ்செய் வள்ளால்யானுனக்கு மகனலனோ நீயெனக்கு
வாய்த்ததந்தையலையோ, கோழையுல குயிர்த்துயரமினிப்
பொறுக்கமாட்டேன் கொடுத்தருணின் னருளொளியைக்
கொடுத்தருளிப்பொழுதே. 18

உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன்மறந்தா லுயிர்
விடுவேன் கணந்தரியே னுன்னாணையிது நீ, யென்னைமறந்
திடுவாயோ மறந்திடுவாயெனில்யா னென்னசெய்வே
னெங்குருவே னெவர்க் குரைப்பேனெந்தா, யன்னையினுந்
தயவுடையாய் நீமறந்தாயெனினு மகிலமெலாமளித்திடு
நின் னருள் மறவாதென்றே, யின்னுமிகக்கருத்திங்கே
யிருக்கின்றேன் மறவேலிது தருண மருட்சோதி யெனக்கு
விரைந்தருளே. 19

அருள்விளக்கே யருட்சுடரே யருட்சோதிச்சிவமே
யருளமுதே யருணிறைவே யருள்வடிவப்பொருளே,
இருள் கடிந்தென் னுளமுழுது மிடங்கொண்டபதியே
யென்னறிவே யென்னுயிரே யெனக்கினியவுறவே, மருன்
கடித்த மாமணியே மாற்றறியாப்பொன்னே மன்றில் நடம்
புரிகின்ற மணவாளா வெனக்கே தெருளளித்த திருவாளா
ஞானவுருவாளா தெய்வ நடத் தரசேநான் செய்ம்மொழி
யேற்றருளே. 20

கோடையிலே யிளைப்பாறிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்தகனியே, ஓடையிலே
யூறுகின்ற தீஞ்சுவைத்தண்ணீரே யுகந்ததண்ணீ ரிடை

யிடைமலர்ந்த சுகந்தமணமலரே, மேடையிலே வீசுகின்ற
மெல்லிய பூங்காற்றே மென்காற்றில் விளைசுகமே சுகத்தி
லுறும் பயனே, யாடையிலே யெனைமணந்த மணவாளா
பொதுவிலாடுகின்ற வரசே யென்னலங்க லணிந்தருளே.

கைக்கிசைந்த பொருளேயென் கருத்திசைந்தகனியே
கண்ணேயென் கண்களுக்கே கலந்திசைந்த கணவா,
மெய்க்கிசைந்த வணியேபொன் மேடையிலென்னுடனே
மெய்கலந்த தருணத்தேவிளைந்த பெருஞ்சுகமே, நெய்க்
கிசைந்த வுணவேயென் னெறிக்கிசைந்த நிலையே நித்தி
யமே யெல்லாமாஞ் சத்தியமே யுலகிற், பொய்க்கிசைந்தார்
காணாதே பொதுநடஞ் செய்யரசே புன்மொழியென் றிக
ழாதே புகழ்ந்து மகிழ்ந்தருளே. 22

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன் றாக்கூட்
டிச் சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக்கலந்தே,
தனித்த நறுந் தேன்பெய்து பசும்பாலுந் தெங்கின் றனிப்
பாலுஞ் சேர்த்தொரு தீம்பருப்பிடியும்விரவி, யினித்தநறு
நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி யெடுத்த சுவைக்
கட்டியினு மினித்திடுந் தெள்ளமுதே, யனித்தமறத் திருப்
பொதுவில் விளங்கு நடத்தரசே யடிமலர்க்கென் சொல்
லணியா மலங்கலணிந்தருளே. 23

கண்களிக்கப் புகைசிறிதுங் காட்டாதே புருவக்கலை
நடுவே விளங்குகின்ற கற்பூரவிளக்கே, பண்களிக்கப் பாடு
கின்ற பாட்டில் விளைசுகமே பத்தருளே தித்திக்கப்
பழுத்த தனிப்பழமே, மண்களிக்க வான்களிக்க மணந்த
சிவகாமவல்லியென மறைகளெலாம் வாழ்த்துகின்ற

வாமப், பெண்களிக்கப் பொதுநடஞ்செய் நடத்தரசே
நினது பெரும்புகழ்ச் சேவடிகளுக்கென் னரும்புமணிந்
தருளே. 24

உருவெளியே யுருவெளிக்குளுற்ற வெளியுருவே யரு
நடுவும் வெளிநடுவு மொன்றானவொன்றே, பெருவெளியே
பெருவெளியில் பெருஞ்சோதி மயமே பெருஞ்சோதி மய
நடுவே பிறங்கு தனிப்பொருளே, மருவொழியா மல
ரகத்தே வயங்கு மொளிமணியே மந்திரமே தந்திரமே
மதிப்பரிய மருந்தே, திருவொழியா தோங்குமணி மன்றி
னடத்தரசே சிறுமொழியென் றிகழாதே சேர்த்து மகிழ்ந்
தருளே. 25

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கனின்று கேட்டாலும் பரிந்துணர்ந்தாலும், ஈர்த்தா
லும் பிடித்தாலுங் கட்டியணைத்தாலு மித்தனைக்குந் தித்
திக்கு மினித்த சுவைக்கரும்பே, வேர்த்தாவி மயங்காது
களித்த நறுங்கனியே மெய்ம்மையறி வானந்தம் விளக்கு
மருளமுதே, தீர்த்தாவென்றன் பலரெலாந் தொழப்
பொதுவில்நடிக்குந் தெய்வநடத்தரசே யென்சிறுமொழி
யேற்றருளே. 26

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே,
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே மதி
யார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே, நல்
லார்க்கும் பொல்லார்க்கும் நடுவிநின்ற நடுவேநரர்களுக்கும்
சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே, யெல்லார்க்கும்

பொதுவி னடமிடுகின்ற சிவமே யென்னரசே யான்புகலு
மிசையு மணிந்தருளே. 27

அறிந்தானை யறிவறிவுக் கறிவானானை யரும்பெருஞ்
சோதியினானை யடியேனென்பிற், செறிந்தானை யெல்
லாஞ் செயவல்லசித்தாய்ச் சிறந்தானைச் சிறுநெறியிற்
சென்றார் தம்மைப், பிரிந்தானை யென்னுள்ளத்திற்
கலந்துகொண்ட பிரியமுள்ள, பெருமானைப் பிறவிதன்னை
யெறிந்தானை யெனையறியா தெடுத்தாண்டானை யெம்மா
னைக்கண்டு களித்திருக்கின்றேனே. 28

பாலானைத் தேனானைப் பலத்தினானைப் பலனுற
செவ்கரும்பானைப் பாய்ந்துவேகாக், காலானைக் கலைசாகத்
தலையினானைக் காலென்றுந் தலையென்றுங் கருதற்கெய்தா,
மேலானை மேனிலைமேலமுதானானை மேன்மேலு மெனது
ளத்தே விளங்கலன்றி, யேலானையென்பாட லேற்றுக்
கொண்ட வெம்மானைக் கண்டுகளித் திருக்கின்றேனே.

அருளரசை யருட்குருவை யருட்பெருஞ் சோதியை
யெனம்மையை யென்னப்பனை யென்னாண்டவனை யமு
தைத், தெருளுருமென்னுயிரை யென்னுயிர்க் குயிரை
யெல்லாஞ் செய்யவல்லதனித் தலைமைச்சித்த சிகாமணி
யை, மருவுபெரு வாழ்வையெல்லா வாழ்வுமெனக்களித்த
வாழ்முதலை மருகதினை மாமணியை யென் கண்மணி
யைக், கருணைநடம்புரிகின்ற கனகசபாபதியைக் கண்டு
கொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன்
களித்தே. 30

பாட்டுவந்து பரிசளித்தபதியை யருட்பதியைப் பசு
பதியைக் கனகசபாபதியை யுமாபதியை, தேட்டமிகும்
பெரும்பதியைச் சிவபதியை யெல்லாஞ் செய்யவல்ல
தனிப்பதியைத் திகழ்தெய்வப்பதியை, யாட்டியல்செய்
தருள் பரமபதியை நவபதியையானந்த நாட்டினுக்கோ
ரதிபதியை யரசைகாட்டி, யென்னைமணம் புரிந்தென்
கைப்பிடித்த பதியைக்கண்டுகொண்டேன் கனிந்துகொண்
டேன் கலந்துகொண்டேன் களித்தே. 31

மதித்திடுத லரியவொரு மாணிக்கமணியை வயங்கிப்
பேரொளியுடைய வச்சிரமாமணியைத் துதித்திடுவே தாக
மத்தின் முடிமுடித்தமணியைச் சுயஞ்சோதித் திருமணி
யைச் சுத்தசிவமணியை, விதித்தன்முதல் தொழிலியற்று
வித்த குருமணியை விண்மணியை யம்மணிக்குள் விளங்
கிய மெய்ம்மணியைக், கதித்தசுக மயமணியைச் சித்த
சிகாமணியைக் கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன்
கலந்துகொண்டேன் களித்தே. 32

அருட்சோதித்தெய்வமெனை யாண்டுகொண்டதெய்வ
மம்பலத்தேயாடுகின்ற வானந்தத்தெய்வம், பொருட்சாரு
மறைகளெல்லாம் போற்றுகின்ற தெய்வம் போதாந்தத்
தெய்வமுயர்நாதாந்தத்தெய்வ,மிருட்பாடுநீக்கி யொளிவீரந்
தந்தருளுந்தெய்வ மெண்ணியநா னெண்ணியவாறெனக்
கருளுந் தெய்வம், தெருட்பாட லுவந்தெனையுஞ் சிவமாக்
குந்தெய்வம் சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே
தெய்வம். 33

எல்லாஞ்செய் வல்லதெய்வ மெங்குநிறை தெய்வ மென்னுயிரிற் கலந்தெனக்கே யின்பநல்குந் தெய்வம், நல்லார்க்கு நல்லதெய்வம், நடுவானதெய்வம் நற்சபையி லாடுகின்ற நடராஜதெய்வம், கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுந் தெய்வங்காரணமாந் தெய்வமருட் பூரணமாந்தெய்வம், செல்லாதனகளெலாஞ் செல்லுகின்ற தெய்வம் சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 34

பதியேயெம்பரனே யெம்பரனேயெமது பராபரனே யானந்தப் பதந்தரு மெய்ஞ்ஞான, நிதியே மெய்ந்நிறைவே மெய்ந்நிலையே மெய்யின்ப நிருத்தமிடுந் தனித்தலைமை நிபுணமணிவிளக்கே, கதியேயென் கண்ணேயென் கண்மணியே எனது கருத்தேயென் கருத்திலுற்ற கனியே செங்கனியே, துதியேயென் றுணையேயென் னுழாவென்னுளத்தே சுத்தநடம்புரிகின்ற சித்தசிகாமணியே.

ஆரணமேயாகமமேயாரணவாகமத்தினரும்பொருளே யரும்பொருளி னனுபவமேயறிவே, காரணமே காரியமே காரண காரியங்கள் கடந்த பெரும்பதியே யென்கருத்தமர்ந்தநிதியே, பூரணமே புண்ணியமே பொதுவிளங்குமரசே புத்தமுதே சத்தியமே பொன்னே செம்பொருளே, தோரணமே விளங்குசித்தி புத்தியினு மென்னுள்ளத்துஞ் சுத்தநடம் புரிகின்ற சித்தசிகாமணியே. 36

கருணைததும்பிப் பொதுநோக்குங்கண்ணிற்கிடைத்த கண்ணேயோருயிர்கனிந்தன் புருவான கருத்திற்கிடைத்த கருத்தேமெய் யருணன்னிலையி லதுவதுவா யறிவிற்கிடைத்தவறிவே யெனகத்தும்புறத்து மொளிநிறைவித்

தமர்ந்த குருவே யைம்பூத, வருணயிலா யவைகடந்த
வரைப்பாய் விளங்குமணிமன்றில் வயங்குசுடரே யெல்
லாஞ் செய்வல்ல குருவேயென் னுளத்தே, மருணைநடஞ்
செய்யரசே யென்றாயே யென்னைத்தந்தாயே தனித்தலை
மைப் பதியே யித்தருணம் வாய்த்த தருணமதே. 37

கருவிற்கலந்ததுணையே யென்கனவிற் கலந்தவமுதே
யென் கண்ணிற்கலந்த வொளியேயென், கருத்திற் கலந்த
களிப்பேயென் னுருவிற்கலந்த வழியேயென் னுயிரிற்
கலந்த வுறவே யென்னுணர்விற் கலந்தசுகமே யென்
னுடைய வொருமைப் பெருமானே, தெருவிற்கலந்துவிளை
யாடுஞ் சிறியேன்றனக்கே மெய்ஞ்ஞான சித்தியளித்த
பெருங்கருணைத்தேவே யுலகத்திரளெல்லாம் மருவிக்
கலந்து வாழ்வதற்கு வாய்த்ததருணமிது வென்றறி
வாயே பறையே யறைகின்றே னெந்தாய் கருணை வலத்
தாலே. 38

இராமலிங்க சுவாமிகள் திருவடிகளே சரணம்.

திருமகள் விலாச அச்சகம், சென்னை-1.—1966.

திருவாசகம்

மூலமும் உரையும்

[இதற்கு உரையாசிரியர்: திருநெல்வேலி மணிவாசக மன்றத்தலைவரும், சைவ சித்தாந்தப் பேரறிஞரும், தமிழ்ப் பேராசிரியரும், தாகூர் சட்டவிரிவுரையாளரும், பல சைவசமய சித்தாந்த நூலாசிரியருமாகிய சைவத் திருவாளர் **கா. சுப்பிரமணியப்பிள்ளை** (எம்.ஏ., எம்.எல்.,) அவர்கள். இந்நூலின்கண் மாணிக்கவாசக சுவாமிகள் உருவப் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. 582 பக்கங்கள் கொண்டது; உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் சுத்தப் பதிப்பாக அச்சிடப்பட்டு அழுத்தமான காலிகோ பைண்டு செய்துள்ளது.]

இந்நூலின் உரை ஆசிரியர் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களை அறியாத தமிழறிஞரார். திருவாசகத்திற்கு உரை இதுவரையில் ஒரிருவரால் ஏற்கனவே எழுதப்பட்டிருப்பினும் இன்னாரியற்றிய உரைக்கே தமிழரிடையே பெருமதிப்பு இருந்து வருகிறது. இவ்வுரை தமிழறிஞர்கள் யாவராலும் ஒருங்கே போற்றுந் தகையதே எனக் கூறுவது மிகையாகாது.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு, சென்னை-1.

திருப்புகழ்

மெய்ஞ்ஞான விருத்தியுரை	விலை ரூ. 3-00
உயர்ந்த கிளேஸ் கடிதம்	விலை ரூ. 4-00

அருணகிரிநாதருக்கு முருகக்கடவுள் காக்ஷியளித்த திருவுருவப் படத்துடன் அழகிய காலிகோ கட்டிடம் செய்துள்ளது.

அருணகிரிநாத சுவாமிகள் இயற்றிய திருப்புகழ்ப் பாடல்கள் படிப்பாருள்ளத்தையும் கேட்பாருள்ளத்தையும் பரவசப் படுத்திப் பேரானந்தப் பெருக்கில் ஆழ்த்தும். இச்சிறப்புவாய்ந்த பாடல்களில் முதல் 100-பாடல்களுக்கு திரிசிரபுரம் எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்ப் பண்டிதர் திருவாளர் அமிர்தம் சுந்தரநாதம் பிள்ளை அவர்களால் பல சாஸ்திர மேற்கோளுடன் 'மெய்ஞ்ஞான விருத்தியுரை' என்கிற விரிவானவுரை எழுதப்பெற்றுள்ளது. ஒவ்வொரு பாடல்களின் தலைப்பிலும சந்தக் குறிப்புக்கள் சேர்த்தும், அரும்பதப்பொருள் விளக்கியும் உதவப்பெற்று, அருணகிரிநாதரின் சரித்திரத்துடன் சுத்தப் பிரதியாய் வெளியிட்டுள்ளோம்.

கிடைக்குமிடம் :—

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு,
மின்ட் போல்டு, சென்னை - 1.